கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



ஜீரோ பட்ஜெட் ஹீரோயின்

KALKI • 03.08.2008 • ரூ.10.00 • 96 பக்கங்கள்

ண்டு மலர்



ஆரம்பம்...

நச்சுன்னு 4 தொடர்கள்

&

ரூ.10,000 பரிசு பெறும் சிறுகதை



"கூட்டணி என்பதே கூட்டுக் கொள்ளைதான்!"

- விளாசும் விஜயகாந்த்




உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு தலைமுறை தலைமுறையாக

50 ஆண்டுகளுக்கும் மேலாக, மேனிப் பராமரிப்பில் ஸிந்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. ஸிந்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே ஸிந்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.



மேனிப் பராமரிப்பு என்றென்றும்

Orchard B GCPMSOCN 116708


இடி சிரிப்பு!
உங்கள் வோட்டு எங்களுக்கே
தலைவர் அவர் மனைவிகிட்டகூட ஹலோவுக்குப் பதிலா, 'உங்கள் வோட்டு எங்களுக்கே'னு சொல்றாரே... ஏன்?
திடீர்னு தேர்தல் வந்தா உதவுமே, அதுக்காகத்தான்!
- அம்பை தேவா

''டீ கொடுத்துச் சிரிக்க வைத்தோம்!''

''பரபரப்பான வாழ்க்கைச் சூழலில், ஆயிரம் பிரச்னைகளுக்கு நடுவே சிக்கி அல்லாடும்போது, 'என்ன நம்ம பொழப்பு இப்படிச் சிரிப்பா சிரிக்குது?'ன்னு பலபேர் அலுத்துக்கறதைக் கேட்டிருப்போம்! ஆனா, எங்ககிட்டே வந்தவங்க, 'சிரிப்பா சிரிச்சு பல நோயிலிருந்து மீண்டு பொழைச்சு வர்றோம்'னுதான் சொல்வாங்க!'' என்கிறார் திருவல்லிக்கேணி நகைச்சுவை மன்றச் செயலாளர் இரா.சேகரன்.

''இந்த மன்றம் துவங்கிய கதையே ஒரு நகைச்சுவைதான்! இருபத்தஞ்சு வருஷங்களுக்கு முன், 'சிரிக்க வாங்க'ன்னு பத்திரிகைகள்ல விளம்பரம் கொடுத்து அழைச்சும் பயனில்லே! வெறும் அஞ்சு ஆறுபேர்தான் வருவாங்க. ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்துச் சிரிச்சுக்கிட்டிருப்போம்.



* இரா.சேகரன்


'நான் ஒரு ஐடியா சொல்லட்டுமா?' என்றார் நண்பர் ஒருவர்.

'மன்றத்துக்கு வருகிறவர்களுக்கு டீ வழங்கப்படும்ன்னு ஒரு வரி சேர்த்து விளம்பரம் கொடுத்துப் பார்! கூட்டம் வரும்!' என்றார். அவரது யோசனை பலன் தந்தது. கூட்டம் கூடியது.

எங்களுக்குச் சந்தோஷம் தாங்கலே! அந்தச் சந்தோஷத்திலே வந்தவங்களுக்கெல்லாம் டீ கொடுத்தோம். டீ சாப்பிட்டதும் வந்த வேலை முடிஞ்ச சந்தோஷத்தோட கூட்டம் கலைஞ்சது!

அடுத்த முறை இப்படி ஏமாறக் கூடாது! 'நகைச்சுவை நிகழ்ச்சி முடிந்த பிறகுதான் டீ தரணும்'னு முடிவெடுத்தோம். அடுத்த மாதம் கூட்டம் கூடியது. நிகழ்ச்சி முடிந்ததும் டீ தந்தோம். வந்திருந்தவர்களிடம் நிகழ்ச்சி பற்றிக் கருத்து கேட்டோம்.

ஒருத்தர் எழுந்தார். 'டீயிலே சர்க்கரை கொஞ்சம் அதிகமா இருக்கு! என்னை மாதிரி சுகர் பேஷன்ட்டுக்கு ஒத்து வராது!'ன்னு சொல்லிவிட்டு அமர்ந்தார். நிகழ்ச்சி பத்தி கருத்து சொன்னவங்களைவிட, டீ, காஃபி பத்தி கருத்து சொன்னவங்கதான் அன்னைக்கு அதிகம்!'' என்று நகைச்சுவை மன்றம் துவங்கிய



அந்த நாட்களை நகைச்சுவையாகச் சொல்கிறார் சேகரன்.

இந்த வருடம் காமராஜர் அரங்கில் நடந்த வெள்ளி விழாவில், தலைமையேற்றார் முன்னாள் துணைவேந்தர் சித்திக். பேராசிரியர் கு.ஞானசம்பந்தனின் 'சிரிப்பு'ரை பார்வையாளர் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றது. யாரையும் புண்படுத்தாத

அவரது நகைச்சுவைகளால் அரங்கமே குலுங்கியது. ''சில நகைச்சுவை மன்றங்களில் இருக்கும் பொறாமை, போட்டிகளே மிகுந்த நகைச்சுவையாக இருக்கும். ஆனால், அவ்வாறு இல்லாமல் கடந்த இருபத்தைந்து வருடங்களாகச் செயல்பட்டு வரும் இந்த நகைச்சுவை மன்றத்தின் சாதனை பாராட்டுக்குரியது'' என்றார்.





ஆண்டுதோறும் நடக்கும் விழாக்களில் சிறந்த சாதனையாளர்களைப் பாராட்டி, விருது வழங்கி மகிழ்வதோடல்லாமல், பல சமூக சேவைகளையும் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி, சிரிப்புடன் சீரிய சிந்தனைகளையும் வளர்த்து வருகிறது இந்த நகைச்சுவை மன்றம்!

சிறந்த சாதனையாளருக்கான விருது இயக்குநர் பாலசந்தருக்கு, சிறந்த பேச்சாளர் என்ற பாராட்டு பேராசிரியர் ராமச்சந்திரனுக்கு, சிறந்த மீடியாவுக்கான விருது அகில இந்திய வானொலிக்கு, சிறந்த பத்திரிகைக்கான விருது... கல்கிக்குதான்!

நிகழ்ச்சியின் ஸ்பான்ஸர்களுள் ஒரு முனையில் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்; மறு முனையில் மூல்கிரி டயபடிக் அரிசி நிறுவனம்! இதைத்தான் நேச்சுரல் ஒற்றுமைன்னு சொல்லணுமோ!

– எம்.ஆர்.ஆர்.

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்: **சீதா ரவி**

உதவி ஆசிரியர்: **கதிர்பாரதி**

வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி:
044 - 4343 8888 (30 lines)
தொலைநகல்: 044 - 4343 8899
மின்னஞ்சல் - ஆசிரியர் குழு:
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு:
subscription@kalkiweekly.com
பிற தகவல்கள்:
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி:
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு:
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-
வெளிநாடு (விமானத்தபால்):
ஒரு வருடம் : ரூ.2,700/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

"கூட்டணி என்பதே கூட்டுக் கொள்ளைதான்!" - விளாசும் விஜயகாந்த்

சமீபகாலமாக தம் பேச்சுகளின் மூலம், ஆளும் கட்சிக்கு 'எரிச்சல்'காந்தாக, மாறி வருகிறார் விஜயகாந்த். 'எங்கள் ஆசான்' படப்பிடிப்பில் இருந்தவரைச் சந்தித்தோம்.

ராமேஸ்வரத்தில் ஆளும் கட்சியினர் குறித்து நீங்கள் பேசியது பெரிய சர்ச்சையாகிவிட்டதே?

''பத்திரிகையாளர்கள் எனக்கு நல்ல நண்பர்கள். இருந்தாலும், சில சமயங்களில் என் இமேஜைப் பாதிப்பதுபோல செய்திகள் வருகின்றன. முன்பு 'தன்னிலை மறந்த' விஜயகாந்த் என்று எழுதினார்கள். பொறுத்துக்கொண்டேன். இப்போது நான் பேசாததைப் பேசியதாகப் போடுகிறார்கள்.''

நீங்கள் பேசியதற்கு சி.டி. வீடியோ ஆதாரம் இருக்கிறதாமே...!

''என்னிடமும் சி.டி. இருக்கிறது. நீதிமன்றத்துக்கு வரட்டும்; நிரூபிக்கட்டும். தமிழ்நாட்டில் ஒவ்வொரு பகுதியிலும் பேச்சு வழக்கு மாறுபடும். ராமேஸ்வரத்தில் பேசும்போது, 'தி.மு.க.' என்று குறிப்பிட்டேனா?''

உங்களைப் போல கருணாநிதியைப் புகழ்ந்தவருமில்லை; இகழ்ந்தவருமில்லை. ஏன் இந்தத் தடுமாற்றம்?

''தமிழினக் காவலர் என்றுதான் பேசியிருப்பேன். காலம் செல்லச் செல்ல பல விஷயங்களில் நம் அனுபவம், பார்வை, படிப்புக்கேற்ப கருத்துகளை மாற்றிக் கொள்கிறோம். அரசியலுக்கு வந்த பிறகு, கலைஞரைப் பற்றிய என் பார்வை மாறிவிட்டது. தமிழகத்துக்கு எப்போதெல்லாம் துரோகங்கள் நடந்திருக்கிறதோ அப்போதெல்லாம் கலைஞர்தான் ஆட்சியில் இருந்திருக்கிறார். 1998ல் ஆட்சியில் இருந்தார். அந்தச் சமயம் ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றுகிற வகையில், இரு மாநில அரசுகளும் ஒப்புக்கொண்டுவிட்டன. ஆனால், கலைஞர் செய்யவில்லை. கர்நாடகா அப்போதே காவிரி நீரைக் குடிநீர் தேவைக்காக நீண்ட தூரம் எடுத்துச் சென்றுவிட்டது. அப்போது கோட்டை விட்டார் கலைஞர்.''

'கச்சத் தீவைப் பற்றி விஜயகாந்துக்கு என்ன தெரியும்' என்கிறதே ஆளும் கட்சி?

''அவர்களைவிட எனக்கு அதிகமாகவே தெரியும். மதுரையில் நான் இருந்தபோது, வருடத்துக்கு இரண்டு நாள் கச்சத்தீவில் நடக்கும் திருவிழாவுக்குப் பல வருடங்கள் சென்றிருக்கிறேன். என் வியாபார நண்பர்களுடனும் சென்றிருக்கிறேன். எம்.ஜி.ஆர். கச்சத் தீவைத் தாரை வார்த்தது குறித்தெல்லாம் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். கச்சத்தீவில் கால் வைத்தவன் நான்.''

நீங்கள் ஜெயலலிதா குறித்து மட்டும் விமர்சனத்தைக் கடுமையாக வைப்பதில்லையே...!

'' 'இந்த இரு கழகங்களுக்கும் வோட்டு போடாதீர்கள்' என்றுதான் பேசுகிறேன். ஆட்சியில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசி என்ன பயன்.

இரு கழகங்களும் மக்களை நன்றாக ஏமாற்றி வருவதாக நான் சொல்லித்தான் வருகிறேன். தேர்தல் வரும்போது, விமர்சனம் இன்னமும் கடுமையாகும்.''

பாராளுமன்றத் தேர்தலில் என்ன பிரச்னைகளை மக்கள் முன் எடுத்துச் செல்வீர்கள்... கூட்டணி உண்டா?

''இவற்றை நான் முன்கூட்டியே சொல்லிவிட்டால், எதிரிகள் சுதாரித்து விட மாட்டார்களா? தேர்தல் வியூகத்தைப் பற்றிப் பேசமாட்டேன். நாளுக்கு நாள் மாற்றம் நடந்து வருகிறது. தேசிய மாநில அளவில் இப்பொழுது பிரிந்தவர்கள், எப்படி மோதிக்கொள்கிறார்கள் என்று பார்க்கிறார்கள். இதுதான் அரசியல். அப்படிப்பட்ட அரசியலுக்குள் மாட்டிக்கொள்ள விரும்பவில்லை.''

எப்படிப்பட்டவர்களை வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுப்பீர்கள்? அவர்களுக்கான அளவுகோல் என்ன?

''சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இவர்கள்தான் வேட்பாளர்கள் என்று அறிவித்துவிட்டால், அவ்வளவுதான். ஆளும் கட்சி அவர்களை டார்கெட் பண்ணத் துவங்கி விடும். போலீஸ் சைக்கோ கொலைகாரனைப் பிடிக்கிறார்களோ இல்லையோ, இது போன்ற வேலைகளில் ஆளும் கட்சிக்கு ஒத்துழைப்பு கொடுக்கும். அதிகாரத்தைப் பயன்படுத்தி, என்னையே முடக்க பல யுக்திகளைப் போட்டுப் பார்க்கிறது ஆளும் கட்சி.''

தி.மு.க., அ.தி.மு.க. தவிர, மற்ற கட்சிகளில் எந்தக் கட்சியுடன் உங்களுக்குச் சுமுக உறவு இருக்கிறது?

''மற்ற கட்சிகளுடன் சுமுக உறவு



"விருத்தாசலத்தில் மருத்துவமனை கட்ட, இடம் கேட்டு இரண்டு வருடமாகப் போராடிக்கொண்டிருக்கிறேன். ஒன்றும் நகரவில்லை!"

இல்லை. இதற்குக் காரணம் அவர்களைப் பற்றிய என் கண்ணோட்டம். இந்தக் கட்சிகள் ஒவ்வொரு கால கட்டத்திலும், தி.மு.க.-அ.தி.மு.க.வுடன் கூட்டணியில் இருந்தவை தானே. இரண்டு கழக ஆட்சியும் சரியில்லை என்று விமர்சிக்கும்போது, அவர்களுடன் இருந்த கட்சிகளும் சரியில்லை என்பதுதானே பொருள். இந்த இரண்டு கழகங்களும் அடிக்கும் அரசியல் கொள்ளைக்கும், அதிகார துஷ்பிர யோகத்துக்கும் கூட்டணி கட்சிக்காரர்களும்தானே உடந்தை. எல்லாம் சுய லாபம்தான் நோக்கம். அதுதான் வெறுத்துப் போய் தனியாய் இருக்கிறேன்.''

பல மேடைகளில் பேசும்போது, ஊழல் பற்றி பேசுகிறீர்கள். ஆனால், ஆளும் கட்சி குறித்து, ஆதார பூர்வமாக ஒரு ஊழலைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லையே?

''எனக்கு நேரம் இல்லை. தோண்டினா பிடித்துவிடுவேன். அரசாங்க அலுவலகம், போலீஸ் ஸ்டேஷன், கலெக்டர், தாசில்தார் ஆஃபீஸ், பொது இடங்கள்... என்று எல்லா இடங்களிலும் ஆளும் கட்சிக்காரர்கள் ஊழல்தான் அலசப்படுகிறது. அதைத்தான் நான் பேசுகிறேன். ஒரு வேளை அடுத்த ஐந்து வருடம் ஆட்சிக்கு வர முடியாதென்று 'அடிக்கிற கொள்ளை'யை ஓங்கி அடிக்கறாங்க போலிருக்கு. மொத்தமாக வசூல் செய்து போட்டுக்கறாங்க. 2000 பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால் 5000 பேரை எடுக்கறாங்க. எல்லாம் வசூல் வேட்டைக்குதான்.

மக்களுக்கு நல்லது செய்யணுமே என்ற எண்ணம் கிடையாது. 'விருத்தாசலத்தில், மருத்துவமனை கட்டுவதற்கு நிலம் கொடுங்கள்' என்று இரண்டு வருடமாக போராடிக்கொண்டிருக்கிறேன். ஒன்றும் நகரக் காணும்.''

அரசு கேபிள் கார்ப்பரேஷன் குறித்து என்ன சொல்கிறீர்கள்?

''உங்க முந்தின கேள்விக்கு இந்தக் கேள்வியே நல்ல பதில். இந்த கேபிள் கார்ப்பரேஷன், ஊழலின் ஊற்றுக் கண்ணாக இருக்கப் போகிறது பாருங்கள்.''

பொன்முடி சொன்ன குற்றச்சாட்டுகளுக்கு உங்கள் பதில் வலுவாக இல்லையே!

''சொந்த சொத்துக்களுக்கும் உறவினர் சொத்துக்களுக்கும் வித்தியாசம் தெரியாதவரெல்லாம் அமைச்சராக இருக்கிறார்கள். என் கல்லூரி அலுவலகமும், என் சகலை நடத்தும் மருத்துவக் கல்லூரி அலுவலகமும், ஒரே கட்டடத்தில் இருந்தால், அதுவும் எனக்குச் சொந்தமாகிவிடுமா? சகலை குடும்பம், ஏற்கெனவே நல்ல வசதியான குடும்பம்; பரம்பரை பணக்காரர். பொன் முடிக்கு என்ன வருமானம்? அவரது மனைவி பெயரில் ஏகப்பட்ட சொத்து இருக்கிறதே! பொன்முடியும் கல்லூரி கட்டுகிறார். இதற்கென்ன சொல்கிறீர்கள்...?''

- ப்ரியன்

படங்கள் : **ஸ்ரீஹரி**



"தமிழகத்துக்கு எப்போதெல்லாம் துரோகம் நடந்திருக்கிறதோ, அப்போதெல்லாம் கலைஞர்தான் ஆட்சியில் இருந்திருக்கிறார்!"



அமரர் கல்கி

நினைவுச் சிறுகதைப் போட்டி

(2008)

முடிவுகள் அறிவிப்பு

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் இந்த ஆண்டும் எண்ணற்ற எழுத்தாளர்கள் கலந்துகொண்டு, தங்கள் கதைகளைப் பரிசீலனைக்கு அனுப்பி யிருந்தனர். இறுதிச் சுற்றில் கவிஞர் ஜெயபாஸ்கரன், கவிதாயினி ஆண்டாள் ப்ரியதர்ஷினி ஆகியோர் நடுவர்களாகப் பங்கேற்று, உற்சாகமாக விவாதித்து, 'கல்கி' ஆசிரியர் சீதா ரவியுடன் இணைந்து கீழ்காணும் சிறுகதைகளைப் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுத்தனர்.

முதல் பரிசு ரூ.10,000/-

பேராண்மை - இரா.இரமேஷ்

இரண்டாம் பரிசு ரூ.7,500/-

மடை - செய்யாறு தி.நா. நாராயணன்

மூன்றாம் பரிசு, ரூ.5000/-

விசிறி வீடு - தஞ்சாவூர்க் கவிராயர்

முதல் பரிசு பெற்ற கதை இந்த இதழில்... பிரகரத்துக்குத் தேர்வான கதைகளின் பட்டியல் அடுத்த இதழில்... பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்! உற்சாகத்துடன் கலந்துகொண்டோர்க்கு நன்றி.



‘ஊசி’யெல்லாம் நமக்கு ‘தூசி’ மாதிரி!

மற்ற ஸ்டூடண்ட்ஸைவிட இவங்களுக்குப் பொறுப்பு ஜாஸ்திங்கிறதால, படிப்பு, படிப்பு... ஹாஸ்பிடல், லேப்...னு பரபரப்பா இருக்காங்க. இருந்தாலும், நம்ம 'காஃபி ஷாப்'ல, ஹை எனர்ஜி லெவல்ல பேசினாங்க, பேசினாங்க, பேசிக்கிட்டே இருந்தாங்க...

அட யாரு அவங்கன்னு கேட்கறீங்களா? கூல்... கூல்மா! திருச்சி கி.ஆ.பெ. விஸ்வநாதம் கவர்ன்மென்ட் மெடிக்கல் காலேஜ் ஸ்டுடன்ட்ஸ்தான்!

காலேஜ் சேர்மன் ஜெயசீலன் தலைமையில் ஒரு 'யூத்ஃபுல்' டீமே வந்து நின்னதும், நமக்கு 'லப்டப்'னு அடிச்சிக்கிச்சு!

''சார்... முதல்ல, கார்த்திக் இன்ஜக்ஷன் போட்டுவிட்ட எக்ஸ்பீரியன்ஸைக் கேளுங்க''ன்னு உசுப்பேற்றியவர் பார்கவி.

''அத... ஏன் கேட்

கெஸ்ட் டயலாக்!



கறீங்க? சின்னப் பையனுக்கு முதல்ல ஊசி போடப் போனேன். கை வேற நடுங்கிக்கிட்டே இருந்துச்சு. ஒருவழியா தெம்ப துணைக்கு அழைச்சுக்கிட்டுக் குத்தினேன். திடீர்னு ஓர் உதறு உதறினான் பாருங்க அந்தப் பையன்! அப்புறம் நான் எங்க போனேன்னு எனக்குத் தெரியல!''

''சேர்மன் சார்! ஊசி அவருக்குத் தான் போட்டீங்களா? இல்ல பக்கத்துல யாருக்கும் போட்டுவிட்டீங்களா?'' என்று கலாய்த்தபடி களமிறங்கிய பிரபு, தன் 'ஊசி' அனுபவத்தை மெதுவாக இறக்கி வைத்தார்... ''பிரைமரி ஹெல்த் சென்டர்ல வயசான ஓர் அம்மாவுக்கு முதல்முதல்ல இன்ஜக்ஷன் போட்



* திருச்சி மெடிக்கல் காலேஜ் ஸ்டூடண்ட்ஸ்

''என்னோட (ஜெயசீலன்) அனுபவம் வேற மாதிரி. பெரிய மீசை, பயில்வான்... தமிழ் சினிமா வில்லன் மாதிரி ஒருத்தருக்கு ஊசி போடச் சொன்னாங்க. பக்கத்துல போறதுக்கே படபடத்துச்சு. ஆனாலும் போட்டுட்டேன். அவரு சொன்னாரு 'நீங்க ஊசி போட்ட மாதிரியே தெரியலை'னு.''

டேன். அவங்க பக்கத்துல போய் நின்னப்ப, என் முகத்துல இருந்த மிரட்சியைப் பார்த்துட்டு, 'என் உயிருக்கு ஒண்ணும் பயமில்லையே'னு கேட்டாங்க. ஆனா, வலியே இல்லாம பக்குவமா இன்ஜக்ஷன் போட்டதால, 'நீங்க பெரிய டாக்டராக வருவீங்க'னு சொன்னாங்க.''

''பிரபு, இது ஜஸ்ட் நெளவ் டெவலப்

பண்ணின ஸ்டோரி மாதிரி இருக்கு'' என்று ப்ரியாவும் சத்யாவும் 'கொக்கி' போட கணேஷ்குமார் 'கடாவர்' விஷயத்துக்கு வந்தார். (டெட்பாடியை இவங்க 'கடாவர்'னு சொல்வாங்களாம்!)

''ஆரம்பத்துல, இதுல மிரண்டு போய் ஓடினதும் பிரபாகரனும், அருள்குமரனும் தான்'' என்று அஷ்வதி, அர்ச்சனையாய்ப் பேசினார்.

'ரௌடி பாய்ஸ், படிப்ஸ் பாய்ஸ், இன்டர்மீடியட் பாய்ஸ்'-னு மூணு பிரிவா பசங்களை வகைபடுத்தியிருக்காங்களாம், இங்க உள்ள பொண்ணுங்க. ''நாங்களும் பொண்ணுங்கள வகைப்படுத்தியிருக்கோம். வேணாம்... அத மட்டும் கேக்காதீங்க. சீக்ரெட்'' என்ற கணேஷ், பிரபாகர் காதில் மட்டும் அதை ஓதினார்.

''சரி...மெடிக்கல் காலேஜ்ல ராகிங் எல்லாம் த்ரில்லிங்கா இருக்குமாமே'' என்று இடைமறித்தோம் நாம். ''ராகிங்கா...? அப்படின்னா என்னன்னுகூட தெரியாதுங்க எங்களுக்கு. என்ன ஸ்பெல்லிங் அதுக்கு? ஆர்...ஏ... தெரியலையே'' என்று ஒண்ணும் தெரியாத பாப்பாவானார் ஜெயசிலன்.

''சும்மா சீனியருக்கு சல்யூட் அடிக்கணும். அவ்வளவுதான். ஆனா, ஆரம்பத்துல யாரு என்னானு தெரியாம, எங்க பேச்சல உள்ளவங்களுக்கு சல்யூட் அடிச்சிருக்கோம். அத நினைச்சா இப்பகூட சிரிப்பு வருது'' என்று பார்கவி சொல்லி முடிப்பதற்குள், ஒட்டுமொத்த குரூப்பே 'சிரிப்பு இடி' இடித்தது.

இதற்கிடையே அருள்குமரன் 'டிக்ஷனரி' ஒன்றையே ரெடி பண்ணிவிட்டார். அதில் சில...

★ மென்ஸ் ஹாஸ்டல் - வீரம் வெளஞ்ச மண்ணு

வுமன்ஸ் ஹாஸ்டல் - பொண்ணு விளையற பூமி



தமிழ் சினிமா வில்லன் மாதிரி இருந்தவருக்கு ஊசிப் போட்டேன். ஆனாலும் பக்கத்துல போறதுக்குள்ள படபடத்துப் போச்சு..!

லெக்சர் ஹால் - ஆராரோ ஆரிரரோ

★ லைப்ரரி - 'கடலை' country

★ கிளினிக்கல் போஸிடிவ்ஸ் எவ்வளவு திட்டினாலும் தாங்குறானே, இவன் ரொம்ப நல்லவன்!

★ வைவா - மயான அமைதி

'இப்போதைக்கு இவ்வளவு போதும்' என நாம் கல்லூரி வாசலை நெருங்கத் தயாரானபோது, 'உடம்பைப் பார்த்துக்கோங்க சார்' என்றனர். அதாங்க டாக்டர்ஸ்!

- எம். திரவியமுருகன்





நாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் விருந்தாளி, எதிர்பாராத நேரத்தில் வந்து திணறடிப்பது போல திரைக்கு வந்திருக்கிறது சுப்ரமணியபுரம்.

காதலையும் கோபத்தையும் சுவீகரித்துக் கொண்ட கலவையாக வருகிறார் ஜெய். அவரைக் கொல்ல வரும் எதிரிகளிட மிருந்து தப்பித்து, ஒரு பெண்ணின் காலடியில் விழுகையில் வெளிப்படுத்தும் அழுகை, நடிப்பின் நெகிழ்வான பக்கம். நண்பனாக வரும் இயக்குநர் சசி, உதடு பிரியாத மென் சிரிப்பு, குரல் அதிராத பேச்சு, கொந்தளிக்கும் கோபமென அலட்டிக்கொள்ளாமல் நடித்திருக்கிறார். கண்களுக்குள் காதலையும், ஆசையையும் பொத்தி வைத்திருக்கும் ஸ்வாதி, எண்பதுகளின் தேவதை பிரதிநிதி. அவரே, 'ஜெய்'யை அண்ணனிடம் காட்டிக் கொடுத்துக் கலங்குகையில் சோகக் கவிதை. 'ஜெய்'க்கும், ஸ்வாதிக்குமான காதல் காட்சிகளில், இளையராஜாவின் பழைய பாடல்களை ஒலிக்கவிட்டிருப்பது ரசிக்கவேண்டிய ஹைலைட். அதிரவைக்கும் அமைதியான வில்லனாக இயக்குநர் சமுத்திரகனி. 'லாட்ஜ்' காட்சிகளில், கண்களுக்குள், 'கன்னிங்' பார்வையைப் பொதிந்து வைத்திருக்கிறார். படம் முழுக்க சிரிக்க வைக்கும் கஞ்சா கருப்புவின் முடிவு பரிதாபம். முன்னாள் மேயர், விழா கமிட்டி தலைவர், சித்தன், கால் ஊனமுற்ற இளைஞர் என, குட்டிப் பாத்திரங்கள்கூட நிரம்பியிருக்கின்றன!

'பத்து ரூபாய்' நோட்டு முதல் 'லேம்பி ஸ்கூட்டர்' வரை... எண்பதுகளின் கதை நிகழ்வுக்குத் துணை புரிகின்றன. படத்தின் முதுகெலும்பாக ஜேம்ஸ் வசந்தின் இசை. அவர் இனி ஒரு ரவுண்ட் வரலாம்.

எஸ்.ஆர்.கதிரின் கேமரா சுத்திப் போடும் அளவுக்குச் சுழன்றுசுழன்று உழைத்திருக்கிறது.

கொலைக் காட்சிகளில் அளவுக்கதிகமான இரத்தம். எங்கே பார்வையாளர் முகத்தில் தெளித்துவிடுமோ என திடுக்கிட வைக்கிறது. ஆபாசமில்லாமல் படத்தைக் கொடுத்திருக்கும் துணிச்சல் வன்முறையில் கோட்டைவிட்டிருப்பது ஏன்?

எனினும் திரைக்கதை யுக்தி, வலுவான கிளைமேக்ஸ் என முதல் படத்திலேயே 'முத்து' குளித்து முக்கிய இயக்குநராகி விட்டார் சசிக்குமார்.


- கபிலன்

SHS Advisory Group

Old No.6, New No. 13-B, 1st Floor,
Postal Colony, 3rd Street,
West Mambalam, Chennai-600 033

Phone : 044 - 4260 5051 / 4212 3051 / 4051
E-mail : srihansankarco@shsadvisorygroup.com
shsfinancial@shsadvisorygroup.com
Web : www.shsadvisorygroup.com

SN AGRO CULTIVATION TRADING (P) LTD.,





கல்கி

2008 ஆகஸ்ட் 3
ஸர்வதாரி ஆடி 19
மலர் : 67
இதழ் : 1




தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

ஜூலை 22 : தறிகெட்டுப்போன தார்மிக நெறிகள்!

"எண்ணிக்கை அடிப்படையில் மன்மோகன் சிங் அரசு காப்பாற்றப்பட்டாலும், தார்மிக அடிப்படையில் தோற்றுவிட்டது!" - எதிர்க்கட்சித் தலைவர் அத்வானியின் கமெண்ட் இது! அப்படியானால், எதிர்க்கட்சிகள்தானே தார்மிக அடிப்படையில் ஜெயித்திருக்க வேண்டும்? அதற்குத் துளியும் இடம் தராமல், தங்கள் கௌரவத்துடன் நாட்டின் கௌரவத்தையும் நடுத் தெருவில் நிறுத்திவிட்டனர் பா.ஜ.க. எம்.பி.க்கள்!

'காங்கிரஸ் லஞ்சமாகக் கொடுத்த பணம்' என்று அவையிலே ஆயிரம் ரூபாய் கட்டுகளை எடுத்துக் காட்சிப்படுத்தியது மலினமான அரசியல்! லஞ்சப் பணத்தை வாங்கவே மறுத்து, கௌரவம் காப்பதற்குப் பதிலாக, காங்கிரஸுக்கு அபகீர்த்தி விளைவிக்கும் உள்நோக்கத்துடன் அதைப் பெற்றுக்கொள்வ தென்பது அரசியல் வன்மத்தின் உச்சம்! காங்கிரஸும் அதற்குத் துணை நின்ற சமாஜ்வாதி கட்சியும்தான் முறையே அஹமத் படேல், அமர்சிங் மூலமாகக் கொடுத்தன என்பதை, காமெரா பதிவுகளைக் காட்டி நிரூபிக்க முடியும் என்று வேறு சொல்கிறார் அத்வானி!

அணு சக்தி உற்பத்திக்கான ஒப்பந்தம் சர்ச்சைக்குரியது; அவசரத்தில் முடிவெடுக்கக்கூடாது, ஆலோசித்து, பொது விவாதம் நடத்தி, சந்தேகங்களைத் தெளிவித்து, பெரும்பான்மையினர்






ஆதரவு பெற்றே அதைச் செயல்படுத்த வேண்டும் என்ற சிந்தனை மிகச் சரியானது. கம்யூனிஸ்டுகள் மட்டும் மனது வைத்து, இதனை அரசுக்கு நிபந்தனையாக்கி, நடத்திக்காட்டியிருந்தால், அவர்களின் கௌரவம் எவ்வளவோ உயர்ந்திருக்கும். ஆனால், ஆரம்பம் முதலே அமெரிக்காவுடனான ஒப்பந்தம் என்பதற்காகவே, இந்த ஒப்பந்தத்தை அக்கட்சி கண்மூடித்தனமாக எதிர்த்தது. அதன் விளைவாக கசப்பு வளர, ஆதரவையும் வாபஸ் பெற்று, நாட்டுக்கே இக்கட்டு ஏற்படுத்தியது. இது தார்மிக ரீதியில் எவ்வாறு சரியாகும்?

ஆக, எந்தக் கட்சியும் தார்மிக வெற்றி பெறவில்லை. மாயாவதியோ, கலங்கிய குட்டையில் மீன் பிடிக்கும் சாமர்த்தியத்துடன், ஒப்பந்தத்தை மதப் பிரச்னையாகவும் இந்த நம்பிக்கை வாக்கெடுப்பை ஜாதிப் பிரச்னையாகவும் திரித்துப் பேசுகிறார். அத்வானியும் மன்மோகன் சிங்கும் பரஸ்பர தனிநபர் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

தார்மிகத்தில் நம்பிக்கையும் அக்கறையும் இருக்குமேயானால், அனைத்துக் கட்சித் தலைவர்களும் தனித்தனியே தங்கள் உறுப்பினர்களை அழைத்து ஒப்பந்த ஷரத்துகளை அலசியிருக்க வேண்டும். பொன்னான பார்லிமெண்ட் நேரத்தையும் முழுமையாக விவாதிக்கப் பயன்படுத்திவிட்டு, மனச்சாட்சிபடி வோட்டுப் போடுங்கள் என்றல்லவா அனைத்துக் கட்சித் தலைவர்களும் அறிவுறுத்தியிருக்க வேண்டும்! மாறாக, கொரடா பிறப்பித்ததன் மூலம் குதிரை வியாபாரத்துக்கு இடமளித்துவிட்டு, ஒருவர் காலை ஒருவர் வாரிவிடும் அபத்த அரசியல் விளையாட்டுதான் நடைபெற்றுள்ளது. வாக்கெடுப்புக்கு முந்தைய விவாதங்களோ சம்பந்தமில்லாத விஷயங்களைப் பற்றியதாக இருந்தது. இதில் ஐந்து முறை ஒத்திவைப்பு வேறு! ஜூலை 22 ஓர் அசாதாரண தினமாக அமையும் என்று இந்தியாவே எதிர்பார்த்தது உண்மைதான்; ஆனால், அது இவ்வளவு அசிங்கமாகவும் தேசத்துக்கே அவமானகரமாகவும் அமையும் என்று யாரும் எண்ணவில்லை!



மீண்டும் பிறந்த செல்வங்கள்!

2004, ஜூலை 16 - கும்பகோணம் கண்ணீர் குளமான நாள். நான்காண்டுகள் ஆனாலும், நம்மைவிட்டு அகலாத சோகத் தழும்புகள். தொடர் ஆலோசனைகள், அறிவுரைகள், உதவிகள் போன்றவற்றால் மெல்லத் தேறிவருகின்றனர் பெற்றோர்கள்.

காசிராமன் தெருவில் வசிக்கும் வெங்கடேஷன் - மகேஸ்வரி தம்பதி இச்சம்பவத்தில் மீனா, செல்வ கணேஷ் ஆகிய இரண்டு செல்வங்களை இழந்தவர்கள். மீள முடியா துயரில் இருந்தவர்களின் உள்ளங்களில் சமீபகாலமாக புன்னகை... காரணம், 'ரீ கேனலைசேஷன்'.

''இரண்டு குழந்தைகளுமே எங்களுக்கு இல்லைனு ஆனதுமே, எங்களால் தாங்கவே முடியல'' என்று மகேஸ்வரி சொல்லிக் கொண்டிருக்கும்போதே கண்ணீரும் வருகிறது.

அறுவை சிகிச்சை செய்துகொண்டதால், இனி வாழ்க்கையே இல்லை என்று இருந்தவர்களுக்கு, கை கொடுத்தது ரீ கேனலைசேஷன்.

இந்தச் சிகிச்சைக்காக, முதன்முதலில் மாவட்ட நிர்வாகத்தை அணுகிய பெண் இவர்தான். 2005ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், இலவசமாக மகேஸ்வரிக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. 2006ஆம் ஆண்டு அக்டோபர் 13ஆம் தேதி, ஆண் குழந்தை பிறந்தது. மகேஸ்வரியின் வறட்சி முகம் மலர்ச்சியானது.

அதற்கு அடுத்த ஆண்டில், பெண் குழந்தை ஒன்றையும் பெற்றெடுத்தார். இறந்தும் நினைவில் வாழும் மீனா, செல்வ கணேஷ் என்ற பெயர்களைச் சொல்லித்தான் இந்தக் குழந்தைகளை அழைக்கின்றனர்.

* வெங்கடேஷ்-மகேஸ்வரி



''முதலில் இந்தச் சிகிச்சை செய்துக்கலாம்னு நாங்க முடிவு பண்ணினதும் ஃபெயிலியர் ஆகறதுக்கு நிறைய வாய்ப்பு இருக்குன்னு சொன்னாங்க. ஆனா, என் மனைவி தைரியமாக இருந்தா'' என்று சொல்கிறார் வெங்கடேஷன்.

குழந்தைகள் இருவரது சிரிப்பிலும் 'தீயினால் சுட்ட புண்' ஆறி வருகிறது.

- மாமதிமுருகன்


Gurunathar Charanam
PRASHANTI
House of Silk Cottons
Prashanti's
Aadi Offer!!!
Until 31.08.2008
Timing:
10 am to 8 pm
PRASHANTI
16, 6th Cross St, C.I.T. Colony, (Behind Chettiar Hall)
Mylapore, Chennai - 4. Ph: 24991850 / 24997636
PRASHANTI'S PARIPURNA
52, 4th Main, 17th Cross, Malleswaram Bangalore - 55.
Ph: 23341632 / 98861 85951
ONAM Sale at Ernakulam - 21.08.08 to 24.08.08
At: Dhakshina Bharat Hindi Prachar Sabha, South end
Chittor Rd, Ernakulam, Cochin. Ph: 0484-2375115 / 7766
7% for Silk Cotton & 5% others
For more details Visit www.bharatmatrimony.com / Wedding Directory / Apparels

என்னை இயக்கிய ஹீரோக்கள் - 1

இயக்குநர் சிம்புதேவன்



உங்களை எப்படி அழைப்பது?

அன்பு வாசகர்களே...? இது நான் ஏதோ பெரிய எழுத்தாளன் போலவும் 'பொன்னியின் செல்வ'னுக்கு அடுத்து, நீங்க இந்தத் தொடரைத்தான் படிக்கக் காத்திருக்கற மாதிரியும் ஃபிலிம் காட்டற தோரணை இருக்கு... அதனால வேண்டாம்.

கூப்பிடறது இருக்கட்டும். என்ன விஷயம்? சுயசரிதையா... ரெண்டு படம் டைரக்ட் பண்ணினதும் சுயசரிதை எழுத ஆரம்பிச்சுட்டறதா என்ற உங்களின் கேள்வியான பார்வை புரிகிறது. இது என் சுயசரிதை இல்லை. பஸ், ரயில் பயணத்தில் பக்கத்து ஸீட் மனிதர் எந்த அறிமுகமும் இன்றி, சுவாரஸ்யமான விஷயத்தை நம்மிடம் பகிர்ந்துகொள்வாரே... அப்படித்தான் இதுவும். இதில் எனக்குக் கௌரவ வேடம்தான். ஹீரோக்கள் பல பேர்! மதுரையில் செந்தில்குமாராக 'அ'னா 'ஆ'வன்னா படித்தது முதல், இம்சை அரசன் 23-ம் புலிகேசி, அறை எண் 305ல் கடவுள் வரையான... எனது பயணத்தில் என்னை இயக்கிய ஹீரோக்கள் இவர்கள். நான் சொல்லும் இந்த மனிதர்களும் அனுபவங்களும், உங்களுக்கும் பரிட்சயமான உணர்வை ஏற்படுத்தலாம். அந்த உணர்வுதான் இந்தத் தொடரின் மையப் புள்ளி.

"டேய் புது இடம், பார்த்துப் பத்திரமா போய்ட்டு வா."

"மொதமொதல தனியா போற... கவனமா இருக்கணும்."

"பணத்தைப் பத்திரமா வெச்சுக்க... சரியா?"

நான் லண்டன் 'ஏல்' பல்கலைக்

ஒற்றைத் தீவில் கொள்ளிவாய் கிழவிகள்!



கழகத்துக்குப் படிப்புக்காகச் சென்றபோது, என் வீட்டில் இப்படியெல்லாம் சொல்லித் தான் வழியனுப்பினார்கள்... என்று சொல்ல ஆசைதான். ஆனால், உண்மை அதுவல்ல. ஆறாவது படிக்கும்போது நான் முதல்முறையாக தனியாக சினிமா பார்க்கக் கிளம்பியபோதுதான், வீட்டில் இத்தனை பில்டப். அதுவும் என்ன படம் தெரியுமா? 'சம்பூர்ணராமாயணம்'. தெருமுனையிலிருந்தது பரமேஸ்வரி தியேட்டர். ராமன் காட்டுக்குச் சென்றபோது, அயோத்தியே திரண்டு வழியனுப்பியதைப் போல தெரு ஜனங்கள் பூராவும் சேர்ந்து என்னை அனுப்பினார்கள்.

படம் முடிந்து வந்ததும் என் அண்ணன் கேட்ட முதல் கேள்வி, ''மொத்தம் எத்தனை ரீல்?''

''நான் ஃபிலிம் ஓட்டற ரூமுக்கெல்லாம் போகலை'' என்றேன் அப்பாவியாக.

''மடையா, படம் ஆரம்பிக்கறப்ப போடற சர்டிஃபிகேட்ல, ரைட் ஸைடின் ஓரத்துல நம்பர் போட்டிருப்பான். அதுதான் ரீல்.''

அண்ணனின் அந்தத் தொழில்நுட்ப அணுகுமுறை, எனக்கு மலைப்பாகவும் பயமாகவும் இருந்தது. அங்கிருந்து எனக்கு சினிமா பற்றிய பாலபாடம் முதல், 'பாலா' பாடம் வரை என் அண்ணன் எப்போதும் அருகில் இருக்கிறார். என்னைவிட நான்கு வயது மூத்தவர். பெயர் வி.எஸ்.கண்ணன்.

நல்ல படங்களைப் பார்க்கவேண்டும் என்று என்னைப் பிடித்துத் தள்ளியவர். அந்த அடிப்படையில் 'கமல்தான் சிறந்த நடிகர்' என்ற கருத்தை அளவுக்கு அதிகமாகவே என் மனத்தில் பதிய வைத்தவர். விளைவு... வீட்டுக்குத் தெரியாமல் அதிரடி காரியங்களில் ஈடுபடுவோம். இருட்டிய பின் ஒரு குரூப்பாகக் கிளம்புவோம்... கட்டையுடன்! அதாவது கரிக்கட்டையுடன். எங்களுடைய உயர்ந்த நோக்கம்(?), பார்க்கும் சுவர்களில் எல்லாம் ரஜினியைத் திட்டி எழுதுவதுதான். அங்கு ஏற்கெனவே கமலைத் திட்டி, ரஜினி ரசிகர்கள் எழுதி வைத்திருப்பார்கள். சில சமயங்களில் பென்சிலை வைத்துக்கூட சுவர்களில் எழுதியுள்ளேன். கடந்து போகும் எறும்புகளாவது வாசித்திருக்க வேண்டும்!

பாகிஸ்தானுக்கே இந்தியா பஸ்

விட்டதைப் போல ஒருமுறை, ''வா, இன்னிக்கு ரஜினி படத்துக்குப் போவோம்'' என்றார் அண்ணன். தேச துரோகக் காரியத்தைச் செய்யச் சொன்னதைப் போல, நான் பொறி கலங்கிக் கொந்தளித்துவிட்டேன். என் கொந்தளிப்பை அடக்கி அண்ணன் அழைத்துச் சென்ற படம்தான், 'புவனா ஒரு கேள்விக் குறி'. பிறகு, 'கை கொடுக்கும் கை' 'ஆறிலிருந்து அறுபது வரை' போன்ற படங்களுக்கு அழைத்துச் சென்றார்.



"ராமன் காட்டுக்குச் சென்றபோது, அயோத்தியே திரண்டு வழி அனுப்பியதைப் போல் என்னை சினிமாவுக்கு அனுப்பினார்கள்!"

முதல்முறையாக நடுநிலையோடு நல்ல படங்களைப் பார்ப்பது குறித்துப் புரிய வைத்தார்.

மகாபாரதம், ராமாயணம் போன்ற கதைகளை நமது இன்றைய குழந்தைகளுக்குச் சொல்லி, அவர்களின் கற்பனையை வளர்க்கும் சூழல் இப்போது இல்லை. அவர்கள் விரும்ப மாட்டார்கள் என்பது காரணமல்ல; இன்றைய பெற்றோர்களுக்கு அந்தக் கதைகள் தெரியாது என்பதுதான் உண்மை. ஆனால், எனக்கு வேறு கதைகள் கிடைத்தன! ஐயாதுரை கடையிலிருந்து, ஐம்பது காசுக்கு வாங்கி வரும் இருபது பக்க எழுத்து கதைகளை அண்ணன் சத்தமாக வாசிக்க, நான் கேட்பேன். அப்போது நான் ஒன்றாவதோ, இரண்டாவதோ படித்துக்கொண்டிருந்தேன்.

'ஒற்றைத் தீவில் கொள்ளிவாய்க் கிழவிகள்', 'ராஜவர்மனும் பறக்கும் பல்லியும்' இப்படிச் சில கதைகளின் தலைப்புகளே திகிலூட்டுவதாக இருக்கும். சினிமா பாஷையில் சொல்வதென்றால் இந்தக் கதைகள் எல்லாம் நம்மை சீட்டு நுனிக்கே... இல்லை! இல்லை!... முன் சீட்டுக்காரரின் தோளிலேயே கொண்டுபோய் அமர்த்திவிடும். ஒண்ணுமில்லாத அந்த 'டகால்டி' கதைகளில் அத்தனை விறுவிறுப்பு! கற்பனை துளிர்விட்டதும் அங்குதான்.

இவற்றின் பக்க விளைவாகத்தான் நிறைய படக்கதைகளைப் படித்தேன்; இன்றுவரை படிக்கிறேன். அம்புலிமாமா,

கோகுலம், காமிக்ஸ், நாவல்... என வகை யறா தொகையறா இல்லாமல் வாசிக்க வைத்தார் அண்ணன்.

அண்ணன் படித்து முடித்த புத்தகங் களை எல்லாம் எனக்குக் கொடுத்துப் படிக்கச் சொல்வார். நிறைய படிப்பேன். அதில் சிலது புரியாது. எட்டாவது படிக் கையில், ஜெயகாந்தனின் 'பாரிசுக்குப் போ' நாவலைப் படிக்க முடியாமல் தெறித்து ஓடியிருக்கிறேன். 'படித்துவிட்டேன்' என்று பொய் சொல்லித் தப்பவும் முடி யாது. 'கதையைச் சொல்' என்பார். சில வருடங்கள் கழித்து அதை மீண்டும் படித்தபோதுதான் புரிந்தது.

வாசித்து போரடித்துப் போய்(?) நானே கதைகள் எழுத ஆரம்பித்தேன். ஆனால், ஒரு கதைகூட பிரசுர மாகவில்லை. ஒவ்வொரு வரு டமும் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டிக்குக் கதை களை அனுப்புவேன். அதுவும் எப்படி? க்ரைம், சயின்ஸ், சமூகம், சரித்திரம் என வெரைட்டியாக அனுப்புவேன். (ஆல் ரவுண்டராம்?) எல்லாமே பத்திரமாகத் திரும்பிவிடும். அப்படித் திரும்பிவரும் கதைகள் அண் ணன் கையில் சிக்கினால், விமர்சனம் கிழிந்து தொங்கும் என்பதால், தபால் காரரை போஸ்ட் ஆபீஸிலேயே மடக்கி கதைகளைப் பெற முயற்சிப்பேன். சில சமயம் டைமிங் மிஸ்ஸாகி கதைகள் வீட்டில் போய் விழும். வீட்டு நபர்கள் ஆளுக்கு ஒரு கதையைப் படித்தபடி குடும்பமே குலுங்கிக்குலுங்கிச் சிரிக்கும்.

அண்ணன் கதையில் உள்ள குறை களைச் சொல்லி விமர்சிப்பார். ''முதல்ல எழுத்துல கம்யூனிகேட் பண்ணப் பழகு. உனக்கு எப்படி வருதோ அப்படி எழுத முயற்சி செய். 'சுஜாதா' மாதிரி முயற்சிக் காதே. அதுக்கு சுஜாதா இருக்கார். நீ எதுக்கு?'' என்பார்.

நான் சினிமாவில் இருந்த இந்த வருடங்களில் வீட்டிற்கென எதுவுமே செய்ய முடியவில்லை. என் பொறுப்பு களையும் சேர்த்து அண்ணன்தான் நிரப்பி னார். 'அண்ணன் உடையான் சினிமாவுக்கு அஞ்சான்.'

மதுரையில் எல்டர் பார்மசிட்டிகலில் பணிபுரியும் அண்ணன், எப்போதும் எனக் குப் புத்தகங்களைத்தான் பரிசாகக் கொடுப்பார். எனது இந்த



* சிம்புதேவனின் அண்ணன் குடும்பம்...

வருட பிறந்த நாளுக்குக் கொடுத்த புத்தகம் 'ராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேசங் கள்'. அன்றைய பாரிசுக்குப் போ மாதிரியே தான். தெறித்து ஓடவில்லையே தவிர, முழுதாய் உள் வாங்க முடியவில்லை.

...அதற்கு நேரம் வரும்.

(பேசுவேன்)

எழுத்து வடிவம்: **ஆரணி யுவராஜ்**

அண்மையில் மும்பையில் நடந்த ஒரு திருமணம் போலீஸ் வட்டாரத்தின் கவனத்தை ஈர்த்தது. மணமகளின் அப்பா, பிரபலமான சாரா - சகாரா கேஸில் தண்டனை பெற்றவர். மணப்பெண்ணின் அப்பாவோ, தலைமறைவாக வாழும் மும்பை நிழலுலக மன்னனான தாவூத் இப்ராஹிமின் உறவினர். 80களிலிருந்தே மும்பை நிழல் உலகத்தில் இருவரும் மிக நெருங்கிய சகாக்கள். ஒரே ஏரியாவில் வசித்த பெண்ணும் பையனும், தங்கள் காதலைப் பற்றி வீட்டில் சொன்னபோது, இரு தரப்பினரும் பச்சைக் கொடி காட்டி விட்டார்களாம். திருமணத்தை அடுத்து நடந்த மெகா வரவேற்பின் போது, மும்பை போலீஸ் தங்களுடைய இன்ஃபார்மர்களை அனுப்பி, அண்டர்வேர்ல்டு ரகசியங்கள் ஏதாவது கிடைக்குமா...? என்று மோப்பம் பிடித்தார்கள் என்றும், அதில் சில முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் போலீஸ் வட்டாரத்தில் சொல்கிறார்கள்.

நான்கு மும்பை சிறுவர்கள், வெகு சாமர்த்தியமாக மும்பை ரயில் நிலையங்களில் வைக்கப் பட்டிருக்கும் பொது தொலைபேசிகளிலிருந்து, சில்லறையாகவே சுமார் மூணரை லட்ச ரூபாய் வரை திருடி இருக்கிறார்கள். இது எப்படி நடந்தது? யதேச்சையாக இவர்கள் கையில், சுமார் பதினைந்து சாவிகள் கொண்ட ஒரு சாவிக்கொத்து, ஒரு ரயில்வே பிளாட்பாரத்தில் கிடைத்திருக்கிறது. அவை, ரயில் நிலையங்களில் உள்ள கட்டண பொது தொலைபேசிகளின் சாவிகள் என்பதை எப்படியோ கண்டுபிடித்து விட்டார்கள். உடனே நான்கு பேரும் தங்கள் கைவரிசையைக் காட்டி, கடந்த நாலைந்து மாதங்களில் சுமார் மூணரை லட்ச ரூபாய் வரை சேகரித்து விட்டனர். தொலைபேசிகளிலிருந்து சில்லறை திருடு போவது குறித்து, டெலிஃபோன் கம்பெனியிடமிருந்து வந்த புகாரின் பேரில் போலீஸ் வலை விரிக்க, நான்கு சிறுவர்களும் வகையாக மாட்டிக் கொண்டுவிட்டார்கள். சில்லறை எண்ணிய கைகள் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சிக்கிக்கொண்டிருக்கின்றன.

அண்மையில் மகாராஷ்டிரா மாநில சாலை மேம்பாட்டுக் கழகம், சுமார் நாலாயிரம் கோடி செலவில் ஒரு புதிய கடல் வழிச் சாலை திட்டத்தை நிறைவேற்ற டெண்டர் கோரியது. அதில் அனில் அம்பானி இன்னும் சில நிறுவனங்களுடன் கூட்டாகச் சேர்ந்து ஒரு டெண்டர் மனு சமர்ப்பித்திருந்தார். அவருக்குப் போட்டியாக ஒரு கூட்டு டெண்டர் சமர்ப்பித்தார் முகேஷ் அம்பானி.


* முகேஷ் அம்பானி


* அனில் அம்பானி

அக்கம் பக்கம்




குறைந்த செலவில் டெண்டர் போட்டிருந்த அனில் அம்பானி குறிப்பிட்டுள்ளபடி, பத்தாண்டுகளில் திட்டத்தை நிறைவேற்றி, போட்ட முதலீட்டையும் எடுப்பது சாத்தியமா என்று ஆராய ஒரு கமிட்டி போடப்பட்டது. சாலை மேம்பாட்டு வாரியமோ, 'கமிட்டி அறிக்கையை முதலமைச்சருக்கு அனுப்பிவிட்டோம். அவர் அமைச்சரவையுடன் கலந்தாலோசித்து முடிவை எடுப்பார்' என்று சொல்லிவிட்டது.

'ஒழுங்காகச் சொன்ன பேச்சைக் கேட்டுக்கொண்டு சமர்த்தாக இருந்தால் சாக்லேட்' என்று அம்மாக்கள் குழந்தைகளை மிரட்டுவது சகஜம். அண்மையில் மும்பையில், ஒரு பிரம்மாண்டமான கூட்டத்தில் கலந்துகொண்ட காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்திகூட அதைத்தான் செய்தார். கூட்டத்தில் காங்கிரஸ் கலாசாரத்துக்கு ஏற்ப கோஷ்டி மோதல்; சோனியாவுக்குச் சிலர் கறுப்புக்கொடிகூட காட்டினார்கள். கடுப்படைந்த சோனியா, ''நீங்கள் எவ்வளவு பெரிய தலைவராக உங்களை நினைத்துக்கொண்டிருந்தாலும், ஒன்றை மறந்துவிடாதீர்கள். நீங்கள் எல்லாருமே முதலில் காங்கிரஸின் அடிமட்டத் தொண்டர்கள்தான். ஒற்றுமையாகக் கட்சிப் பணி செய்தால்தான், அவரவர்க்குரிய பங்கு, பதவி கிடைக்கும். இல்லையென்றால் யாருக்குமே எதுவும் கிடைக்காது!'' சோனியா இப்படிச் சொன்னதும், கட்சிப் பெருந்தலைகள் எல்லாரும் கப்சிப்!

தொகுப்பு: **எஸ்.சந்திரமௌலி**

✱ தாவூத் இப்ராஹிம் இல்லத் திருமணம்!



'அண்டர் வேர்ல்டு' ரகசியங்கள்!

அருள்வாக்கு



பிரசாதம்

ஒவ்வொரு குடும்பத்திலும் சமைப்பதற்காகப் பானையில் அரிசி போடும்போது ஒரு பிடி பகவானை நினைத்துக்கொண்டு, ஏழைகளுக்கு என்று ஒரு கலயத்தில் போட்டு விட வேண்டும்; இப்படிப் பல குடும்பங்களில் தினமும் போட்டு வைப்பதைப் பேட்டைக்குப் பேட்டை சேகரித்து, சமைத்து ஆங்காங்குள்ள ஆலயத்தில் நிவேதனம் செய்து, ஏழைகளுக்கு அளிக்க வேண்டும். ஒரு பிடி அரிசியோடு ஒரு பைசாவும் தினந்தோறும் போட வேண்டும். சேகரித்த அரிசியைச் சமைப்பதற்கான விறகுக்கு, சாதத்தில் சேர்த்துக்கொள்ள மிளகுப் பொடியோ அல்லது வேறு ஏதாகிலும் வியஞ்சனமோ தயாரிப்பதற்கு, சமையல் பாத்திர வாடகைக்கு, - இப்படிப் பட்ட மேல் செலவுகளுக்காகத்தான் அந்த ஒரு பைசா, இந்தத் திட்டத்தை நடத்திக்காட்டுவது பெரிய பரோபகாரம். பசித்து வந்த ஏழைகளுக்கு ஈசுவரன் கோயிலில் இப்படிப் பிரசாதம் கிடைக்கிறது என்றால் வயிறும் மனசும் குளிரும். இதனாலாவது கோயிலுக்கு வருகிற வழக்கம் ஏற்பட்டு பக்தியும் வளரும். வெறுமே 'சாப்பாடு' என்றில்லாமல், ஈசுவரனுக்கு நிவேதனமான பிரசாதமாக இருப்பதால் அந்த அன்னம் சித்த சுத்தியும் அளிக்கும்.

அன்னதானம் பரோபகாரத்தில் ஓர் அம்சமே. பரோகாரம், சமூக சேவை, சோஷல் ஸர்வீஸ் என்று இந்த நாட்களில் ஆர்ப்பாட்டமாகப் பிரகடனம் பண்ணுவதை, முற்காலத்தில் எந்தப் பகட்டுமில்லாமல் சுபாவமாகவே மக்கள் செய்து வந்தனர். இதற்கு 'பூர்த்த தர்மம்' என்று ஒரு பெயர். ஜனங்களுக்காகக் கிணறு, குளம் வெட்டுவது, அன்னதானம், அவர்களின் ஆத்ம க்ஷேமத்துக்காகக் கோயில் கட்டுவது, அதன் அங்கமாக நந்தவனம் அமைப்பது எல்லாம் 'பூர்த்த தர்ம'த்தில் சேர்ந்தவைதான்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்யா சுவாமிகள்



சோ எழுதிய

மஹாபாரதம் பேசுகிறது ரூ. 600/-

வால்மீகி ராமாயணம் ரூ. 600/-

ஹிந்து மஹா சமுத்திரம் (3 பாகங்கள்) ரூ. 600/-

அதிர்ஷ்டம் தந்த அனுபவங்கள் ரூ. 145/-

இந்து தர்மம் ரூ. 75/-

எங்கே பிராமணன்? ரூ. 125/-

வெறுக்கத்தக்கதா பிராமணீயம்? ரூ. 35/-

1. வந்தேமாதரம்	115.00	20. சட்டம் தலை குனியட்டும்	40.00
2. வாஷிங்டனில் நல்லதம்பி	100.00	21. எங்கே போகிறாய்?	40.00
3. சர்க்கார் புகுந்த வீடு	100.00	22. என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?	35.00
4. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 1)	130.00	23. இறைவன் இறந்து விட்டானா?	35.00
5. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 2)	75.00	24. இன்பக் கனா ஒன்று கண்டேன்	25.00
6. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 3)	40.00	25. சாத்திரம் சொன்னதில்லை	40.00
7. துக்ளக் படமெடுக்கிறார்	50.00	26. சரஸ்வதியின் சபதம்	35.00
8. அதிகப் பிரசங்கம்	45.00	27. ஜட்ஜ்மெண்ட் ரிசர்வ்டு	35.00
9. இவர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்	50.00	28. நேர்மை உறங்கும் நேரம்	30.00
10. யாரோ இவர் யாரோ?	65.00	29. மனம் ஒரு குரங்கு	40.00
11. சாதல் இல்லையேல் காதல்	80.00	30. ஏன் கூடாது?	40.00
12. மை டியர் பிரம்மதேவா	30.00	31. இரவில் சென்னை	40.00
13. இந்தியா எங்கே போகிறது?	20.00	32. முகமது பின் துக்ளக்	35.00
14. துக்ளக் கேள்வி - பதில் I & II	100.00	33. உறவுகள் இல்லையடி பாப்பா	40.00
15. ஒண்ணரைப் பக்க நாளேடு	40.00	34. சம்பவாமி யுகே யுகே	40.00
16. காமராஜை சந்தித்தேன்	60.00	35. எதற்காக?	35.00
17. புரட்சி கீதை	35.00	36. உண்மையே உன் விலை என்ன?	45.00
18. திரையுலகைத் திரும்பிப் பார்க்கிறேன்	45.00		
19. யாருக்கும் வெட்கமில்லை	40.00		

எஸ்.குருமூர்த்தி எழுதிய **தண்ணீர் விட்டோ வளர்த்தோம்** (3 பாகங்கள்) ரூ. 525/-

பரத்வாஜ் எழுதிய **ஆட்சி முறை - ஒரு பார்வை** ரூ. 200/-

கி.வா.ஜ. எழுதிய

தமிழ்ப் பழமொழிகள் (4 பாகங்கள்) ரூ.400/-

கி.வா.ஜ. பதில்கள் (3 பாகங்கள்) ரூ. 165/-

அபிராமி அந்தாதி விளக்கவுரை (4 பாகங்கள்) ரூ. 300/-

கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள் (6 பாகங்கள்) ரூ. 735/-

தேவன் எழுதிய

1. துப்பறியும் சாம்பு - நாடகவடிவம்	ரூ. 65.00	8. ஏன் இந்த அசட்டுத்தனம்	ரூ. 55.00
2. சொன்னபடி கேளுங்கள்	54.00	9. விச்சுவுக்குக் கடிதங்கள்	55.00
3. மல்லாரி ராவ் கதைகள்	80.00	10. ராஜத்தின் மனோரதம்	80.00
4. அப்பளக் கச்சேரி	70.00	11. சீனுப்பயல்	80.00
5. ராஜத்தின் பிள்ளை	45.00	12. பார்வதியின் சங்கல்பம்	60.00
6. போக்கிரி மாமா	90.00	13. பல்லிசாமியின் துப்பு	75.00
7. மனித சுபாவம்	65.00	14. சின்னஞ்சிறு கதைகள்	65.00
		15. ராஜியின் பெரியப்பா	62.00

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
(பழைய எண்) 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மைலாப்பூர் - 600 004
தொலைபேசி: 24641314 www.alliancebook.com email: srinivasan@alliancebook.com

நான் வந்த பஸ்ஸில்தான், அவர்களும் வந்திருக்கிறார்கள்! இறங்கும்போதுதான் தெரிந்தது எனக்கு. அவர்களும் நானும் பரஸ்பரம் சிரித்துக்கொண்டோம்.

''என்ன சிவா... நல்லாருக்கியா...! நீ மட்டும்தான் வந்தியா... மனைவி குழந்தைகளை அழைச்சுக்கிட்டு வரலையா?'' என்று கேட்டார் முத்தழகின் கணவர் பலராம்.

''இல்லை'' என்றேன்.



''இந்த ஆடித்திருவிழா பத்து நாள் கழிச்சு வந்திருந்தால் நல்லா இருந்திருக்கும். எல்லோரும் வந்திருப்பாங்க'' என்ற முத்தழகு, என்னைப் பார்த்து,

''சிவா... இப்பவும் பாடறியா! மறந்துட்டியா...'' என்று விசாரித்தது, கணவனுடன் சேர்ந்து நடந்தபடி!

நான் அசட்டுச் சிரிப்புச் சிரித்தேன்.

அவர்கள் விலகிச் செல்லச் செல்ல என் காதுகளில், அனிச்சையாகக் கேட்டது பாட்டு,

'வசந்த கால நதிகளிலே வைரமணி நீரலைகள்... நீரலைகள் நீரினிலே... நெஞ்சிரண்டின் நினைவலைகள்...'

அப்போது நான் எட்டாவது முடித்திருந்தேன்.

சினிமான்னா உயிர்.

வாரந்தோறும், டவுன் கொட்டகையில் படம் பார்த்துவிடுவேன்.

அதில் வரும் வசனங்கள், பாடல்களை மனப்பாடம் செய்வதுதான் முதல்வேலை.

'எஞ்சோட்டு' பயல்களுக்கு, வசனங்களைப் பேசியும் நடித்தும் காட்டுவேன்.

ஒரு நாள் என்னைத் தேடி ஆள் வந்தது.

"துரைசாமி வீட்ல உன்னைக் கையோடு கூட்டிக்கிட்டு வரச் சொன்னாங்க..."

துரைசாமி, அரசியல் தொடர்பு கொண்ட பிரமுகர்; வசதியானவரும்கூட.

அவ்வப்போது சிறுசிறு வேலைகளுக்கு என்னைப் பயன்படுத்திக்கொள்வார்.

இப்பவும் அப்படிதான் இருக்கும் என்று போனேன்.

"வாடா மாப்ள..." என்று வரவேற்றார். உள் பக்கம் திரும்பி...

"முத்தழகு... சிவா வந்திருக்கான் பாரு..." என்றார்.

அடுத்த கணம், தேவதை ஒன்று வெளிப்பட்டது.

"மெட்ராஸ்லேர்ந்து வந்திருக்காங்க. உன் பாட்டைக் கேட்கணுமாம்.."

"வா" என்று முத்தழகு கைபிடித்து அழைத்துச் சென்றது!

மொட்டை மாடி.

வளர்ந்தோங்கிய மாமரம் கிளை பரப்பி நிழல் கொடுத்தது.

கீழே விரித்துப்போட்ட ஜமுக்காளத்தின் மேல், முத்தழகு ஓவியமாய் அமர்ந்திருந்தாள். அவளோடு சென்னையில் இருந்து வந்திருந்த தோழிகளும் பரவியிருந்தார்கள்.

"உனக்குப் பிடிச்ச பாட்டுப் பாடு..." என்றது முத்தழகு.

முத்தழகைப் பார்க்கும்போது 'ஜிவ்' வென்று நரம்புகளில் மின்சாரம் பாய்ந்து, உடம்பில் நடுக்கம் கொடுத்தது.

படுதலம் சுகுமாரன்

மூச்சு சூடாயிற்று.

ஏன் அப்படி என்று விளங்கவில்லை. அதற்கு முன், யார் முன்னும் எனக்கு அந்த உணர்வு ஏற்பட்டதில்லை.

வசந்தி, பார்வதி, அம்சா, குணவதி... யென்று ஊரில், உறவு முறையில் நிறைய

வசந்தகால நதிகளிலே...

பெண்கள்.

மாமன் மகள்கள்,

"என்னய்யா டி.எம்.எஸ்ஸு... எனக்கொரு பாட்டு பாடேன்" என்று வழி மறிப்பார்கள்.

பிகு பண்ணிக்கொள்வதில்லை.

அப்போதைக்குத் தோன்றும் ஒரு பாடலைப் பாடிவிட்டுப் போய்க்கொண்டேயிருப்பேன்.

முத்தழகுவிடம் மட்டும்தான் அப்படி.

"இதோ எந்தன் தெய்வம் முன்னாலே... 'நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே...' 'பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான்...' 'அவன் கருணையுள்ள நெஞ்சினிலே கோயில் கொள்கிறான்..." என்று பாடினேன்.

பாடி முடித்ததும் அவர்கள் கைதட்டி

னார்கள்.

அன்றைக்கெல்லாம் எனக்கு வேறு வேலையே ஓடவில்லை. எல்லாமே அழகாக, புதுமையாக இருந்தது.

''என்னடா நீயே சிரிச்சுக்கறே...?'' என்றார், அப்பா.

''சும்மாதான்...''

மறுபடியும் முத்தழகுவைப் பார்க்க வேண்டுமென்று மனம் கிடந்து தவித்தது.

இந்த முறை ஏதாவது பரிசுப் பொருளோடு போக வேண்டும்.

அப்போது 'இலந்தைப் பழம்' நினைவுக்கு வந்தது.

எனக்கு அந்தப் பழம் பிடிக்கும். ஆனால், அந்தச் செடியின் கொக்கி முட்களுக்குப் பயந்து நானாக பழம் பறிக்கப் போவதில்லை.

முத்தழகுவுக்கு நாமே நம் கையால் பறித்துத் தரவேண்டும் என்ற ஆசையில், இலந்தைச் செடிகளைத் தேடிப் போய்,

> **நான் கமலஹாசனாகவும் முத்தழகு ஸ்ரீதேவியாகவும் மாறி, உல்லாசமாகப் பாடி மகிழ்ந்தோம்.**

ரத்தக்காயம் ரணகாயமென்று உடம்பெல்லாம் கிறிக்கொண்டு, டிரவுசரின் இரண்டு பாக்கெட் நிறைய இலந்தைப் பழமாகவும் செங்காயாகவும் பறித்துப்போட்டுக் கொண்டேன்.

இதை யார் கண்ணிலும் படாமல், எப்படி அதனிடம் கொண்டு சேர்ப்பது என்று யோசனையாக இருந்தபோது, முத்தழகே என்னைத் தேடி வீட்டுக்குவர, ரொம்ப மகிழ்ச்சியாகிவிட்டது.

''இந்தா... எல்லாம் உனக்குதான்''

புன்னகையோட வாங்கிக்கொண்டு, நளினமாக ஒரு பழத்தை எடுத்து நாசுக்காகக் கடித்து,

''ரொம்ப டேஸ்ட்டா இருக்கு...'' என்று கொஞ்சும் குரலில் சொன்ன முத்தழகு... என் முகம், கைகளில் இருந்த கீறல்களைப் பார்த்துப் பதறியது.

''அச்சச்சோ... ரொம்ப காயமா?'' என்று கேட்டது. அந்த விசாரிப்பிலேயே காயம் ஆறிப்போனது.

அப்புறம், சாயங்காலம் மாமரக் கிளையில் ஊஞ்சல் கட்டி ஆடினர்; முத்தழகும் தோழிகளும். என்னையும் ஆடச் சொன்னார்கள்...

''ஆகாயப் பந்தலிலே பொன்னூஞ்சல் ஆடுதம்மா... ஊர்கோலம் போவோமா... உள்ளம் அங்கே ஓடுதம்மா...'' என்று பாடிக்கொண்டே ஆடினேன்.

அது வெறும் பாட்டாகப் பாடவில்லை; என் மனத்தை முத்தழகுக்குத் தெரிவிக்கும் விதமாக லயித்துப் பாடினேன்.

''நீ 'மூன்று முடிச்சு' படம் பார்த்தியா... சிவா...''

''மூன்று முடிச்சா...?''

''ரஜினி, கமல், ஸ்ரீதேவி நடிச்சது. அதுல கமல், ஸ்ரீதேவிக்கு ஒரு 'டூயட்' இருக்கும்...'' என்ற முத்தழகு, மெல்லிய குரலில்,

''வசந்த கால நதிகளிலே... வைரமணி நீரலைகள்... நீரலையின் நீரினிலே... நெஞ்சிரண்டின் நினைவலைகள்... ரேடியோவில்கூட இந்தப் பாட்டு அடிக்கடி வருமே'' என்றது.

நானும் அந்தப் பாட்டைக் கேட்டிருக்கிறேன்; படம் பார்த்ததில்லை.

முத்தழகு ரொம்ப அழகாகப் பாடியது.

எனக்குள் ஒரு வேகம் பிறந்தது. குறிப்பிட்ட அந்தப் பாட்டைத் தேடிக் கொண்டு

போனேன்.

விசாரித்ததில், அந்தப் படம் திருத்தணியில் ஓடிக்கொண்டிருக்கிற தகவல் கிடைத்தது.

வீட்டில் காக திருடிக்கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் பஸ் பிடித்து திருத்தணி போய், துர்கா டாக்கீஸில் படம் பார்த்து, அந்தப் பாட்டைக் குறிப்பெடுத்துக் கொண்டு மறு பஸ் பிடித்து ஊர் திரும்பினேன்.

அன்றே முத்தழகிடம் பாடிக் காட்டினேன். ரொம்ப ரசித்தது.

''நாம ரெண்டு பேரும் சேர்ந்து பாடலாமா?'' என்று முத்தழகு சொல்ல, நான் கமலஹாசனாகவும், முத்தழகு ஸ்ரீதேவியாகவும் மாறி, உல்லாசமாகப் பாடி மகிழ்ந்தோம்.

பாட்டின் இறுதியில் வில்லனாக வரும் ரஜினியின் வன்மமான குரல் வரிகளையும் பாடி முடித்தேன்.

அப்போது தெரியாது, பாட்டில் வருவது போல வில்லன் வந்து, என்னைத் தண்ணீரில் கவிழ்ப்பானென்று. முத்தழகுவைக் கட்டிக்கொண்ட பல்ராம், என்னைப் பொறுத்தவரை மானசீக வில்லன்தான்.

ஆனால் ஒன்று -

முத்தழகு என்னை வேடிக்கை காட்டும் பாட்டுக்காரனாக மட்டும் பார்த்ததா?

எனக்குள் நேர்ந்ததுபோல் அதனுள்ளும் சலனங்கள் உண்டாகியதா?

விடையில்லை. ஆனால், வாழ்க்கையில் வேறு பாதையில் நீண்ட பயணம் வந்துவிட்ட பின்னும், இதுபோன்ற சந்தர்ப்பங்களில் நெஞ்சில் அடிக்கத்தான் செய்கிறது, வசந்தகால நதியலைகள். ●

'பொய்' பற்றிய நிஜங்கள்!

- இயக்குனர் விஜய், இயக்கும் இரண்டாவது படம் 'பொய் சொல்லப் போறோம்'. 33 நாட்களில் இந்தப் படத்தை இயக்கி, தனது குருநாதர் ப்ரியதர்ஷனிடம் பாராட்டைப் பெற்றிருக்கிறார்.
- ப்ரியதர்ஷன் தமிழில் முதல்முறையாக UTV-யுடன் இணைந்து இந்தப் படத்தைத் தயாரிக்கிறார்.
- மலையாள திரைப்படத் துறையின் பிரபலமான இசையமைப்பாளர் M.G. ஸ்ரீகுமார் தமிழில் முதல்முறையாக இந்தப் படத்துக்கு இசையமைத்துள்ளார்.
- மலையாளத்தின் பிரபல தயாரிப்பாளரான 'செவன் ஆர்ட்ஸ்' விஜயகுமார் மேற்பார்வையில், இப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.
- நகைச்சுவை கலந்த வில்லன் வேடத்தில் நாசர் நடித்திருக்கிறார்.
- நடுத்தர குடும்பத்தினர் சந்திக்கும் பிரச்னைகள் பற்றிய கதை.

– அறிவுநிதி

''பொய் சொல்லப் போறோம்'' படக்காட்சி...





சிரிப்பு

இன்றைக்கு வரும் ஜோக்குகள் பெரும்பாலும் சாடல் அல்லது சாட்டையடி தான்.

அரசியல்வாதிகளைச் சாடும்; போலீஸ்காரர்களுக்குச் சாட்டையடி கொடுக்கும்; அல்லது காலாவதியான ராஜா - ராணிகளை அநியாயத்துக்கு முதுகில் குத்தும்.

இந்த மாதிரியெல்லாம் யாரையும் 'டார்ச்சர்' செய்யாத ஹார்ம்லெஸ் ஹெல்தி ஹ்யூமர், அரை நூறாண்டுக்கு முன் பத்திரிகைகளில் வலம் வந்தது. அதிலும் ஆனந்த விகடன் அட்டைப்பட ஜோக்ஸ் படு ஸ்பெஷல். ஆசிரியர் எஸ்.எஸ். வாசன், ''பல பல வேலைகளுக்கிடையே நாங்கள் வாராவாரம் போட்டு அனுப்பும் 'ஜோக்' கருத்துகளைப் (ஸ்கெட்ச்சுடன் கூடியது) பார்த்து, ரசித்து 'செலக்ட்' செய்வார். கண்ணும் கருத்துமாக, விகடன் ஹாஸ்யங்களின் மதிப்பு குறையக்கூடாது என்ற குறிக்கோளுடன் 'செலக்ட்' பண்ணுவார். மிகவும் நல்ல ஜோக்குகளை 'அட்டைப் படத்துக்கு' என்று குறிப்பிட்டு அனுப்புவார்'' என்று தமது விகடன் நாட்களை முன்னுரையில் நினைவு கூர்கிறார் கோபுலு.

1950 முதல் 1964 வரை வாராவாரம் (728 வாரங்களுக்கு) விகடன் அட்டையில் இடம்பெற்ற கோபுலு ஜோக்ஸ் சிலவற்றைத் தொகுத்து நூலாக்கியிருக்கிறது விகடன் பிரசுரம். அத்தனையும் இன்னொஸன்ட் ரகம்:

"ஏண்டா காலண்டர் தேதிகளை எல்லாம் ஒரே நாளில் கிழிக்கிறே?''

''இதிலே பதிமூணாம் தேதி வரபோது தான் தீபாவளி வரும்னு சொன்னே இல்ல...? அதை நான் சீக்கிரமா வரப் பண்ணிண்டிருக்கேன் அப்பா!''

ஹாஸ்யத்தின் எளிமைக்குப் போட்டியாக, அதற்கான படங்களின் உணர்ச்சி பாவம் மிகையின்றி நம்மை அப்படியே அரெஸ்ட் பண்ணிவிடுகிறது. ஜோக் படத்துக்குள் பல 'உப ஜோக்குகள்' சைலன்ட்டாகச் சிரிப்பூட்டுகின்றன!

தேதிக் கிரமத்தை மட்டும் மாற்றாமல் வெளியிட்டிருந்தால், இந்த ஜோக் புத்தகம் தமிழ்நாட்டின் சிரிப்பு டைரியாகவும் மிளிர்ந்திருக்கும். எப்படியாயினும் கோபுலு ஜோக்ஸ் பாகம் - 2 ஓர் அற்புத ஆவணம்.

விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை - 600 002, விலை: ரூ.60/-

ஆவணம்!

படிமம், சந்தம், பதறல்!

★ புகும் நீர் தாங்காத புழையாய்/ அடைத்துக்கொண்டோடும் மதகுகள்/ மலரும் நினைவுகளாய் மனதில்

★ காலியாய்க் கிடக்கும் கூடுகளில்/ குருவிக்காரர்கள்/ பசியால் நிரப்பிப்/ பலி கொள்கிறார்கள் பறவைகளை

★ துவைகல்லில்/ சிட்டுக்குருவி/ குரல் துவைக்கும் தன்னந்தனியாய்/ கனவின் வீட்டுக்குள்ளிருந்து -

- இந்த வரிகளை அப்பப்படியே தனிக் கவிதைகளாகத்தானே படிக்கிறீர்கள்...? இவை கவிதைக்குள் கிடைத்த கவிதைகள். நா.வே.அருளின் 'ஆயுதம்' தொகுப்பில் மூன்று வெவ்வேறு கவிதைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வரிகள்! இப்படியான நெஞ்சம் அதிரும் படிமங்களால் வளர்த்தமைத்த கவிதைகள் இந்த நூல் நிறைய உண்டு. கூடவே,

★ பூசாரியின் இடுப்பில் தொங்குகிறது/ கர்ப்பகிரகத்துக்கான/ கடவுளின் சாவி

★ தெருதான் பிடிக்கும்/ எப்போதும் பாதங்களின் ஸ்பரிசம்/

போன்று குறுந்தகட்டில் கிலோபைட்களை அடக்கும் அதிர்வுக் கவிதைகளும் இருக்கின்றன.

ஜதிபொங்கும் நதியிலே/ சதங்கையாய் நுரைகளும்/ சங்கீதம் பாடிப்போகும்/ சங்கீத நதியிலே/ யாரிட்ட சாபமோ/ சவங்களாய் மிதந்து போகும்

- போன்ற நேரடி பொருள் பேசும் தத்தகார துள்ளல்களும் உள்ளன.

★ என் மகன் கட்டிவைத்த/ மணல் வீட்டை/ கலைக்க விரும்பவில்லை நான்/ அலைகள் கலைத்துவிடக்/ கூடாதேயென்று கவலையுடன் அமர்ந்திருந்தேன்

★ பாதைமலர்ப் பழனியம்மா/ பட்டினிக்குப் பிறந்தவளே/ பாதமலர் புண்ணாகப்/ பாறைகளைச் சுமந்தவளே!

கோலங்கள் -

★ தரையில் கிடக்கும் மின்கம்பிகள்!/ மிதித்தால் அதிர்கிறது/ என் இதயம்!

- என்று பதறலும் கரிசனமும் மிக்க வரிகள். கவிஞரின் உணர்வும் கனவும் ஆதங்கமும் ஆதர்சமும் அடங்காமல் வெளிப்படும் தொகுப்பு ஆயுதம்.

இந்நூலுக்கு வண்ணதாசன் தந்துள்ள முன்னுரை இன்னொரு கவிதை. முகப் போவியமும் (வீர சந்தனம்) கோட்டுச் சித்திரங்களும் (கார்த்திகேயன், சௌ.புகழேந்தி) ஆயுதத்துக்கு மெருகேற்றுகின்றன.

பாரதி புத்தகாலயம், 421, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018, விலை: ரூ.50/-

- சாயா



உப்புமாவில் ஏதோ தப்பும்மா...!



"முதுகெலும்பு இல்லாதவன்னு என்னைத் திட்டறாங்க டாக்டர்..."

"உட்காருங்க. ஒரு ஸ்கேன் எடுத்துப் பார்த்து இருக்குன்னு சொல்லிடறேன்!"

– பம்மல் நாகராஜன்

"நீ செஞ்ச உப்புமாவில ஏதோ தப்பு நடந்திருக்குன்னு நெனைக்கிறேன்"

"வழக்கம்போலத்தானே செஞ்சேன்"

"அப்புறம் என் வழக்கமா வர்ற வயித்துவலி, இன்னும் வரலே!"

– மா.கண்ணன்





"பணம் திருட்டுப் போச்சுன்னா, போலீஸ்ல புகார் கொடுக்க வேண்டியதுதானே சார்...?"

"போலீஸுக்குக் கொடுக்கக்கூட எதையும் விட்டுட்டுப் போகலையே அந்தப் பாவி...!"

– சீர்காழி வி.ரேவதி

"தீயணைப்பு வீரரைக் கட்டிக்கிட்டது வம்பாப் போச்சு!"

"ஏன்...என்னாச்சு...?"

"அடுப்புப் பத்த வைக்கும்போதெல்லாம், தண்ணி ஊத்தி அணைச்சுடறாரு!"

– குருமலை கேசவன்



Welcome to affordable luxury

HANSA CHITRA
PALLAVARAM

Close to GST Road,
Leading Schools & Colleges
Market & Railway Station,
10 minutes drive from Airport.

836 Sq.ft. to 1543 Sq.ft.,
2 & 3 Bedroom Flats
Rs. 26* to Rs. 48* Lakhs
with all amenities



Location : 91, Dargah Road, Pallavaram, Chennai - 43 ✆ 6525 7519



HANSA COURTYARD
THIRUVOTTIYUR

Opp. to Thiruvottiyur Bus Terminus,
very near to Markets,
Schools & Railway Stations

511 Sq.ft. to 999 Sq.ft.,
1, 2 & 3 Bedroom Flats
Rs. 12.40* to Rs. 24.20* Lakhs
with all amenities

Location : 643, Thiruvottiyur High Road, Chennai - 19. ✆ 6525 7518

Contact

HANSA Estates

Sharika Mansion, 2, Lake Area First Street,
Nungambakkam, Chennai - 600 034.
Tel : 4221 0343 / 48 /00 Mobile : 93807 18993 / 93807 18992
Email: sales@hansaestates.com

*Exclusive of Taxes & Charges

பேராண்மை

கண்களை எவ்வளவு இறுக்கி மூடினாலும், உறக்கம் வர மறுத்தது முருகேசனுக்கு. எப்படி வரும்? நாளை வழக்கம் போல் எல்லாரும் விழித்தெழும் வேளையில், தாம் மட்டும் நிரந்தர உறக்கத்தில் ஆழ்த்தப்படப் போகிறோம் என்ற உண்மை, உலர்ந்த தொண்டைக் குழியில் ஒரு வறண்ட துணிப்பந்தாய்ச் சிக்கிக் கிடந்தது.

சிறை கட்டடத்தின் சின்ன அறையெங்கும் இறுக்கம் நிறைந்திருந்தது.

மற்றவர்கள் விஷயத்தில் எப்படியோ? முருகேசன் விஷயத்தில் நீதி வென்றுவிட்டது. நெல்லையின் நட்டநடுவீதியொன்றில் பட்டப்பகலில், அழகு சுந்தரத்தையும் முத்துவேலையும் வெட்டிச் சாய்த்ததை உச்ச நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.

விடிந்தால், உலகம் தனது போக்கில் இயங்கிக்கொண்டேதான் இருக்கப் போகிறது. ஆனால், காண்பதற்குதான் முருகேசன் இருக்கப் போவதில்லை.

திரைப்படங்களில் கேட்பதுபோல் கடைசி ஆசை என்னவென்று கேட்கும் வழக்கம் உண்டா... இல்லையா? அப்படிக் கேட்டால் கடைசி ஆசையாய் எதைச் சொல்வது? 'மனைவி மக்களின் புகைப்படத்தைக் கடைசியாய் ஒரு முறை காண வேண்டும்' என்று சொன்னால், ஒப்புக் கொள்வார்களா? கறுப்பு உறையால் முகத்தை மூடிவிட்டால் எப்படிக் காண்பது?

'முழு எடை



இரா. இரமேஷ்

யுடன் தூக்குக் குழிக்குள் விழுந்த மறு நொடி, பின்கழுத்து எலும்பு மளுக்கென்று முறிந்து, உடலுக்கும் மூளைக்குமான தொடர்பு அற்றுப்போகும். வலி தெரியாமல்தான் மரணம் சம்பவிக்கும்; பயப்படாதே' என்று சக கைதி சொன்ன முரட்டுச் சமாதானம், ஒரு குரூரமான தைரியத்தைக் கொடுத்தது.

கழுத்தெலும்பு முறிந்த மறுகணமே, உயிர் பிரிந்து சொர்க்கம்..., நரகம்... இரண்டில் ஒன்றில் போய் விழுந்துவிடுவோமா? அல்லது ஆன்மிகக் கதைகளில் வருவதுபோல், முடிவற்ற பேரண்ட வெளியில் பல்லாயிரம் வருடங்கள் பறந்தும், இருட்டுக் குகைகளில் தவழ்ந்தும், இரத்த ஆற்றில் நீந்தியும் செல்ல வேண்டுமோ? பிரம்மாண்டமான கதவுகளுக்கு முன் பல ஊழிக்காலங்கள் காத்திருக்க வேண்டுமோ?

அழகுசுந்தரமும் முத்துவேலும் சொர்க்கத்துக்கோ நரகத்துக்கோ போய்ச் சேர்ந்திருப்பார்களா? அல்லது முன்னால் நடந்து போய்க்கொண்டு இருப்பார்களா? ஒரு வேளை எனக்காக ஏதேனுமொரு இருட்டுக் குகையில் ஆத்திரத்தோடு காத்திருந்தால்? செத்த பிறகு நாமும் பேயாகிப் பலம் கூடிவிடுமோ? ஏற்கெனவே செத்து ஆவியாகிவிட்ட உயிர், மறுபடி கொல்லப்பட முடியுமா என்ன? எண்ணங்கள் விரிய விரிய இமைகள் நடுங்கி, நா உலர்ந்து போனது முருகேசனுக்கு. நேரம் எவ்வளவு மீதமிருக்கிறதென்று எண்ணிப் பார்க்க மனது மறுத்தது.

வல்லநாடு...

அகரம் விலக்கில், இன்னும் பெயர் முடிவு செய்யாத கைக்குழந்தையை மார்போடு அணைத்துக்கொண்டும், ஐந்து வயது பெண் குழந்தையை இன்னொரு கையால் இழுத்துக்கொண்டும், காவல் துறை வாகனத்தின் பின்னால் உச்சி வெயிலில் எவ்வளவு தூரம் ஓடி வந்தாள் கலையரசி?

''சாமி, ராசாவ தூக்குல கீக்குல போட்டுராதீய ஐயா. செயில்லயே ஆயுசு பூரா வேணாலும் வெச்சுக்கிருங்க மொதலாளி. கொன்னு மட்டும் போட்டுராதியப்பா சாமி!'' ஓலமிட்டபடி என்ன ஓட்டம் ஓடி வந்தாள் பச்சை உடம்புக்காரி.

ஒரு கட்டத்தில் ஜீப்புக்கும் அவளுக்குமான இடைவெளி தொடர முடியாத



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் ரூ. 10,000 முதல் பரிசு பெறும் சிறுகதை

தூரமாய் மாறிப்போக, பொதேரென்று தார்ச் சாலையில் அமர்ந்து எவ்வளவு ஆக்ரோஷமாய் முகத்திலும் வயிற்றிலும் மாறிமாறி அறைந்து கொண்டாள்.

ஒரு வாரம் கழித்து மதுரை ஜெயிலுக்கு 'மனு' பார்க்க வந்தாள் கலையரசி. குழந்தையின் புருவத்திலும் மூக்கிலும் காயம் உலர்ந்திருந்தது.

திருமணமான புதிதில் நெல்லையப்பர் கோயிலுக்கு வந்தபோது, நகரத்தின் பிரம்மாண்டத்தில் கோழிக்குஞ்சாய் ஒடுங்கி, அவனின் சட்டை நுனியைப் பிடித்தபடி கலையரசி பின் தொடர்ந்தது நினைவு வந்தது. எவ்வளவு சொல்லியும் கேட்காமல் அந்தக் கோழிக்குஞ்சு, எப்படி யாரிடம் கேட்டு விசாரித்து, பஸ் பிடித்து மதுரை வரை வந்து மனு பார்த்தது? நெடுநேரம் அழுது ஓய்ந்தவன் போல் நெஞ்சு விம்மியது முருகேசனுக்கு.

"ஏய்யா அந்த நாதாரிக என்ன பேசுனா என்ன? யாரை வெட்டுனா என்ன? இப்ப நானும் புள்ளைகளுமில்ல தெருவுல நிக்கோம். பசிக்குதுங்காங்க! ஒண்ணு நல்ல தங்கா கணக்கா, பிள்ளைகளோட கிணத்துல குதிக்கணும். இல்லாட்டி, அந்த டபுள் மீனிங் மேஸ்த்திரிகிட்ட.... ஏய்யா இப்படி" என்றவள் வெகுநேரம் விசும்பினாள். அதன் பிறகு ஒன்றிரண்டு முறை வந்திருந்தாள். ஒவ்வொரு சிறையாக மாற்றிக் கொண்டே இருந்ததில் இடம் தெரியாமல் போனதோ என்னவோ பிறகு அவள் வரவே இல்லை.

"அந்தாளு என்னமோ டபுள் மீனிங்காமுல்ல. எப்ப வாயைத் தொறந்தாலும் அதான் பேசுவானாம்! அவன் சிரிப்பு வேற எப்படியோ இருக்கு மாமா! வேற மேஸ்த்திரி பார் மாமா" என்று கட்டட வேலைக்கு முருகேசனுடன் வருவதை நிறுத்தியவள், இப்போது சாப்பாட்டுக்கு என்ன செய்கிறாள்?

நாளைக்குத் தூக்கு என்ற தகவல் அவளுக்குத் தெரியுமா? ஒரே ஒரு நொடி கலையரசியையும் குழந்தைகளையும் பார்க்க முடியுமா? மூத்த மகளுக்கு இப்போது பதிமூன்று வயதிருக்கும். பருவம் துவங்கும் தளிர் வயது. எப்படி இருப்பாள்? பள்ளிக்குப் போகிறாளா அல்லது கலையரசிக்குத் துணையாய்க் கட்டட வேலைக்குப் போகிறாளா? டபுள் மீனிங் மேஸ்த்திரியைப் பற்றிய எண்ணங்கள் வேறு மனத்தை அறுக்க ஆரம்பிக்க, எப்போது என்றே தெரியாமல் உறங்கிப் போனான் முருகேசன்.

'சொல்' எஜமான்!

"ஒருவர் சொல்லக்கூடாத சொல்லைச் சொல்லிவிட்டதற்காக, வாழ்நாள் முழுக்க அவரோடு பேசாமல் இருப்பவர்கள் ஏராளம். ஏனெனில், ஒரு சொல்லைச் சொல்கிறவரை அதற்கு நாம் எஜமான். சொல்லிவிட்ட பிறகு அந்தச் சொல்தான் நமக்கு எஜமான்" என்று யோகி போல பேசுகிறார் 'லாடம்' படத்தின் இயக்குநர் பிரபு சாலமன்.

ஏனிந்த சொல்புராணம் என்றால், "லாடம் படத்தின் கதையே ஒரு சொல்லைச் சுற்றித்தான் வலம் வருகிறது. ஒரு சாஃப்ட்வேர் என்ஜினியர் ஒரு சொல்லைச் சொல்லிவிட அந்தச் சொல் அவருக்கு



எதிராக எப்படி மாறுகிறது என்பதுதான் திரைக்கதை. அதைத் திகைப்பும் சிலிர்ப்பு மாகச் சொல்ல முற்பட்டிருக்கிறோம். 16 நாட்களில் நடக்கும் சம்பவங்களின் தொகுப்புதான் இந்தப் படம். அதனால்தான் 16 Days என்ற பெயரில் தெலுங்கிலும் இந்தப் படம் தயாராகி வருகிறது" என்றவரி டம் ஏன் கதாநாயகன் புதுமுகம் என்றால், "பாப்புலரான முகத்தைக் கதாநாயகனாகப் போட்டால், இந்தக் கதை செத்துவிடும். அதனால்தான் அரவிந்த்தைத் தேர்வு செய் தேன்" என்கிறார் பிரபு சாலமன்.

- மஹாரான்ஜி



சிறைக்காவலர்கள் தோள்தொட்டு மென்மையாய் உலுக்கினார்கள்.

''முருகேசு நேரமாயிட்டுப்பா. எல்லாம் ரெடி மெதுவா எந்திரி! ஐயா கூட்டியாரச் சொன்னாங்க.''

''நேரம் முடிஞ்சுருச்சாய்யா. யாரும் காப்பாத்த வரலையாய்யா? கருணை மனு செல்லாம போச்சாய்யா? இந்த ஒரு தடவை என்ன விட்டுருங்கய்யா. இனிமே இந்த மாதிரி பண்ணமாட்டேன்யா. ரெண்டு பொம்பளப் புள்ளைங்க இருக் குய்யா. அதுகளைக் கரையேத்திட்டு வந்துகூட தொங்கிக்கறேன்யா. ஐயா! ஐயா!''

கதறியபடி விழித்தெழுந்தான் முரு கேசன். இன்னமும் இருள் பிரியாத அதி காலை, குடிசையின் சிம்னி வெளிச்சத்தில் எதிரில் கலையரசி.

''என்ன மாமா கெட்ட கனாக் கண்டியா? நானும் ரொம்ப நேரமா பாக் கேன். வார்த்தையே வராம ஊளையிட்டுக் கிட்டு பொரள்ற. ஏன் இப்புடி வேர்க்குது? ஒடம்புக்கு ஒண்ணுமில்லையே!''

பதற்றமாய் நெருங்கி முந்தானையால் முகம் துடைத்தவளைச் சட்டென்று இழுத்து பக்கத்தில் உட்கார வைத்தான்.

''சீ! என்ன மாமா இது. காலங்கார்த்தால பாப்பா வேற முழிச்சிட்டிருக்கு.''

''என் நெலமை புரியாம பேசாத கலை. இதுவேற விஷயம்.''

சொல்லியபடி கலையரசியின் கைகளை இறுக்கிப் பிடித்துக்கொண்டான். நெஞ்சு படபடப்பு அடங்கவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தான். புத்தகப் பையும் சிலேட்டும் குச்சிகளும் இறைந் திருந்தன. கைக் குழந்தை தூளியில் ஆடிக் கொண்டிருந்தது. மூத்தவள் சுவரைப் பார்த் துத் திரும்பித் தூங்கிக் கொண்டிருந்தாள்.

''இரு மாமா ஒனக்கு என்னமோ பண்ணுது போல! வறக்காப்பி போட்டுத் தர்றேன்.'' எழுந்த கலையரசி தயங்கி நின்றாள். வாசலில் பாலுவும் சேகரும்.

''என்ன முருகேசு! எவ்வளவு நேரமா நிக்கறோம். நீ பாட்டுக்குத் தூங்கிட்டு இருக்க. அந்தப் பரதேசிங்க இன்னிக்குத் கோர்ட்டுக்கு வர்றதுதான் கடைசி தட வையா இருக்கணும். ஒருத்தன்கூட வீடு திரும்பக் கூடாது. நாய்ங்க மூஞ்சிகளை ஃபோட்டோவுக்குக்கூட தெரியாத அளவு கொதறணும். வண்டி ரெடி. சட்னு கௌம்பு, இருவது பேர் கூடியிருக்கோம்.''

''இல்ல பாலு, கொஞ்சம் ஒடம்புக்குச்



சொகமில்லாம இருக்கு. தவிர, இது தேவையான்னு வேற யோசனையா இருக்கு. அதான் கோர்ட்டு போலீஸுன்னு ஆயிரம் இருக்கே பாலு! கேஸு நல்லாத் தான் நடக்குது. தீர்ப்பும் கடுமையாத்தான் இருக்கும்ங்கறாங்களே.''

''என்னாச்சு! முருகேசு, எப்ப இருந்து பொட்டை நாயா ஆன? நம்ம சாதிக்காரன் ஆறு பேருடா. ஆறு பேரையும் பொதைச்ச எடத்துல புல்லு என்ன; சின்ன மரமே வளந்துருச்சு. கேஸு இன்னும் நடக்குது, இன்னும் அவனுங்க தெனாவட்டா நட மாடிக்கிட்டு இருக்கானுங்க. நீ சொரணை யத்த நாயா படுத்துருக்க மொதல்ல எந்திரா'' பாலு சூடாகியிருந்தான்.

உடன் வந்த சேகர் எழுந்துகொண்டான்.

''இந்த மானங்கெட்ட பொட்டைப் பயல விட்ரு பாலு! ஆம்பளைங்க நாம இருக்கமுல்ல. பாத்துக்கிருவோம் வா!'' வாகனம் ஒன்று சீறிப் பாய்ந்து புறப்பட்டுப் போனது.

ஓசை அடங்கியதும் மெதுவாக அருகில் அமர்ந்துகொண்டாள் கலையரசி.

''இந்தப் பிரச்னைலதான் மனசப் போட்டு ஒழட்டிக்கிட்டு இருந்தியா மாமா?''

''ஆமா கலை. நேத்து பூரா என்னென்ன கனவு தெரியுமா?''

அனைத்தையும் முருகேசன் விவரித்து முடித்தபோது, மிரண்டு வியர்த்திருந்தாள் கலையரசி.

''ஆனா நீ எடுத்த முடிவு சரிதான் மாமா! பொண்டாட்டி புள்ளைங்களக் காப்பாத்தணுமேன்னு நியாயமா நடக்கற பாரு, நீதான் மாமா ஆம்பள.

கதறியபடி விழித்தெழுந்தான் முருகேசன். எதிரே முகம் முழுக்கக் கலக்கத்துடன் கலையரசி!

அவங்களுக்கு வேணா நீ பொட்டைப் பயலா இருக்கலாம். இனிமே ஒனக்கு எந்தக் கெட்ட கனவும் வராது.''

கலையரசி, பேசிக்கொண்டே போக முருகேசன் சட்டையை மாட்டிக்கொண்டு தலைசீவத் தொடங்கினான்.

''என்ன மாமா! நான் பாட்டுக்குப் பேசிக்கிட்டே இருக்கேன். நீ கேட்டவாக்குல புறப்படறே! எங்க மாமா போற?''

''என் வீட்டுல கலையரசி இருக்கற மாதிரி வெட்டப் போனவனுங்க, வெட்டுப் படப்போறவனுங்க எல்லார் வீட்டுலயும் எத்தனையோ கலையரசிங்க புள்ள குட்டிங்களோட தூங்கிக்கிட்டு இருப்பாங்கல்ல. அவங்களையும் காப்பாத்தணும்ல.''

மண் சுவர்மீது சாத்தியிருந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு, டவுன் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி மிதிக்க ஆரம்பித்தான் முருகேசன். ஊர் எல்லையைத் தாண்டும் போது, பொழுது கறுகறுவென்று விடிந்துகொண்டிருந்தது. ●



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்.
(வழி) தாம்பரம். சென்னை - 63. போன் : 22760612, 22762299
City Office No.7, முதல் மாடி. வேலு தெரு. மேற்கு மாம்பலம்.
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன் : 23714942

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 19 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற, மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ. 1,000/-
• மதிய உணவு	ரூ. 2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ. 1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ. 12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ. 2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் /வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்.

ஜீரோ பட்ஜெட் ஹீரோயின்!

"நமக்கு இயற்கை உரமளிக்கக் கூடியவை, பசுக்கள். இறைச்சிக்காக அவற்றை 'அடிமாடுகளாக' வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைத்துவிட்டு, தற்போது செயற்கை உரம் தட்டுப்பாடு என்றவுடன், அவசரம் அவசரமாக வெளிநாடுகளிலிருந்து ரசாயன உரங்களை இறக்குமதி செய்கிறோம். தமிழக விவசாயிகள் ஒவ்வொருவரும் 'ஜீரோ பட்ஜெட்' வேளாண்மைக்கு வந்துவிட்டால், உள்நாட்டில் ரசாயன உரங்களை உற்பத்தி செய்யும் அவசியமும் வேண்டாம்; வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய தேவையும் இருக்காது!'' எனப் பொரிந்து தள்ளுகிறார் பத்மாவதி.

அதென்ன ஜீரோ பட்ஜெட் விவசாயம்? என்றால், ''முழுவதுமாக ரசாயன உரம் தவிர்க்கப்பட்ட விவசாயம்தான், ஜீரோ பட்ஜெட் விவசாயம். மகாராஷ்டிரா மாநிலத்தின் சுபாஷ் பாலேகர், ஜீரோ பட்ஜெட் விவசாயத்தின் தந்தை'' என்றவர் மேலும் பேசினார்.

''ரசாயன உரங்களால், நம்முடைய விளைநிலங்களின் நுண்ணுயிரிகளைக் கொன்றுவிட்டோம். அடை மழைக்காலங்களில், வீதியில் நெளிந்து செல்லும் மண் புழுக்களைக்கூட விட்டுவைக்கவில்லை. நாட்டுப் பசுவின் ஒரு கிராம் சாணத்தில் சுமார் முன்னூறு கோடி நுண்ணுயிரிகள் உள்ளன. கலப்பினப் பசுவின் ஒரு கிராம் சாணத்தில் முப்பது லட்சம் நுண்ணுயிரிகள் மட்டுமே இருப்பதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன?'' என்று அடுக்கிக்கொண்டே போனவரை, 'அம்மணி பி.எஸ்சி. அக்ரி படித்துள்ளவரா? என ஒற்றை வரியில் மடக்கினோம்.

''அஞ்சல் வழிக் கல்வி வாயிலாக நான் படிச்சது பி.ஏ.வரலாறு; சொல்லிட்டு வர்றதோ நம்ப மண்ணோட வரலாறு. இன்னைக்குப் பல கிராமங்



* பத்மாவதி



'' விவ்சாயிகள், ஜீரோ பட்ஜெட்டுக்கு மாறினால் கடனின்றி வாழலாம்!''

களில் பத்து - இருபது வருஷங் களுக்கு முன்னாடி இருந்து வந்த கால்நடைகளின் மொத்த எண்ணிக் கையில், இப்ப நாலுல ஒரு பங்கு கால் நடைதான் இருக்குது. எனக்கு இப்ப வயசு இருபத்தி நாலு. என்னோட இருபது வயசுல இந்த 'ஜீரோ பட்ஜெட்' விவசாயத்துக்கு வந்தேன். கடந்த நாலு வருசமா வெற்றிகரமான 'ஜீரோ பட் ஜெட்' விவசாயியாக இயங்கி வரு கிறேன்'' எனக் கூறும் பத்மாவதிக்குச் சொந்த ஊர் ஈரோடு மாவட்டம் ஆதி ரெட்டியூர்.

ஜீரோ பட்ஜெட் விவசாயத்தைத் எங்கு கற்றுக்கொண்டீர்கள் என்று கேட்டால், ''மைரடா என்னும் அமைப்பின் மூலமாக கே.வி.கே. வேளாண் அறிவியல் நிலையத்தில் தங்கியிருந்து, இதுக்கான பயிற்சிகள் எடுத்துக்கிட்டேன். நம் விளைநிலங்களின் அற்புதமான மண் வளத்தினை, எந்தளவு சீரழித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அங்குதான் உணர்ந்தேன். அன்றிலிருந்து ஜீரோ பட்ஜெட் விவசாயி ஆக நான் இயங்கத் தொடங்கிவிட்டேன்'' என்றவர் மேலும் தொடர்ந்தார்.

''ஒவ்வொரு விவசாயியும் கடன் சுமைகளின்றி வாழ வேண்டும். அதற்கு அவர்களை ஜீரோ பட்ஜெட் வேளாண்மைக்கு மாற்றிக்கொண்டு வர வேண்டும். குறைந்த பட்சம் இரண்டு நாட்டுப் பசுக்கள் வைத்திருந்தாலே போதும். அவர் வெற்றிகரமான 'ஜீரோ பட்ஜெட்' விவசாயி ஆகிவிடலாம்.

நாட்டுப் பசுவின் கோமியம் மற்றும் சாணம் இதற்கு மிக அவசியம். அவற்றுடன் சில இயற்கை இடுபொருட்களைச் சேர்த்துப் பக்குவமாகத் தயாரிக்கப்படுவது 'ஜீவாமிர்தம்'. ரசாயன உரங்களைவிட மிகுந்த பயன்களையும், மண் வளத்தைக் காக்கவும் பயன்படுகிறது. அடுத்து தயாரிப்பது பூச்சி விரட்டி. தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை சாகுபடி பயிர்களின் அருகிலேயே இது அண்ட விடாது. கடந்த நான்கு வருடங்களாகவே நஞ்சு கலக்காத உணவுப் பொருட்களையும், அதே நேரத்தில் அமோக விளைச்சலையும் கண்டு வருகிறோம்!'' என்கிறார் இளம் விவசாயி பத்மாவதி.

செய்தியும், சித்திரங்களும்:
ஸ்ரீரங்கம் திருநாவு



உலகே மாயம்





மீசை வைத்தால்

✱ அலெக்ஸாண்டர் ஸ்டம்

பின்லாந்து அன்புமணி:

நம் நாட்டில் அன்புமணி மாதிரி, எல்லா நாட்டிலுமே சுகாதார மந்திரிகள் அதிரடி அறிக்கை விடுபவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

பின்லாந்து நாட்டின் சுகாதார அமைச்சர் பாலோ ரிசிக்கோ, ஓர் அறிக்கைவிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார். அவர் சொல்லியிருக்கும் அறிவுரை மக்களுக்கு அல்ல; மந்திரிகளுக்கு.

'ஒரு நாளைக்கு இருபது மீட்டிங்கில் கூட என்னால் உட்கார முடியவில்லை. மந்திரிகளே இப்படி உடல்வலிமை இல்லாமலிருந்தால், நாட்டு மக்களின் நலம் எப்படி நன்றாக இருக்க முடியும்? எனவே, எல்லா மந்திரிகளும் காலையில் எழுந்து ஜாக்கிங் செய்ய வேண்டும். ஏதாவது ஒரு விளையாட்டைப் பயிற்சி செய்யவேண்டும். முக்கியமாகத் தொப்பை விழுந்து விடாமல், உடம்பைக் கவனிக்க வேண்டும்.'

அறிக்கையைப் பார்த்த மந்திரிகள் ரிசிக்கோவைக் கமென்ட் அடித்துக் கலாய்த்திருக்கிறார்களாம். ஏன்? கேபினட்டில் மெஜாரிட்டி மெம்பர்கள் விளையாட்டு வீரர்களாக இருந்தவர்கள்.

அதுவும் வெளியுறவுத் துறை அமைச்சர் அலெக்ஸாண்டர் ஸ்டம், போன வாரம்தான் இரண்டு கிலோமீட்டர் நீந்தி, 90 கி.மீ பைக் ஓட்டி, 21 கி.மீ ஓடி 'ட்ரை-அத்தலான்' போட்டியில் கலக்கியிருக்கிறார்.

பின்னே சிரிக்காமல் என்னதான் செய்வார்கள்?

க்ளோனிங் நாய்க்குட்டி

ஆட்டுக்குட்டியில் ஆரம்பித்த க்ளோனிங் விளையாட்டு, இப்போது செல்லப் பிராணிகளின் பக்கம் திரும்பியிருக்கிறது. தென்கொரியாவைச் சேர்ந்த ஆர்.என்.எல். பயோ ஜோ மற்றும் சோயெம் பயோடெக் ரிசர்ச் பவுண்டேஷன்... என்ற இரண்டு நிறுவனங்கள், ஒரே நேரத்தில் செல்லப் பிராணிகளை க்ளோனிங் செய்துகொடுக்

கும் தொழிலில் களமிறங்கியிருக்கின்றன.

ஒரு நாய்க்குட்டியை க்ளோனிங் முறையில் உருவாக்க, ஐம்பதாயிரத்திலிருந்து ஒரு லட்சம் அமெரிக்கன் டாலர்கள் செலவு பிடிக்கறதாம். அடுத்த ஆண்டுக்குள் நூறு நாய்களுக்கு மேல், க்ளோனிங் முறையில் உருவாக்கிவிடுவோம் என்று உறுதியாக நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள்.



உஷ்ஷ்வெவண்ட்!

தொழில் முறைப் போட்டியில் இறங்கியிருக்கும் இரண்டு நிறுவனங்களுமே கூட்டாளிகளைச் சேர்த்துக்கொண்டு, உலகெங்கும் கிளைகள் விரிக்கும் ஆசையில் இருக்கின்றன. அந்த விருப்பம் நிறைவேறிவிட்டால், பப்பிக்கு ஏதாவது ஏடாகூடம் என்றாலும், கன்னத்தில் கை வைக்க வேண்டாம்.

மீசை வைத்தால் குற்றம்?

ஜப்பான் நாட்டு வக்கீல்கள், தபால்காரர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். காரணம்?

* க்ளோனிங் பப்பிகள்...





* மீசையில்லா தபால் ஊழியர்...

உலகிலேயே அதிகளவில் பணம் புழங்கும் நிறுவனங்களில் ஒன்றான 'ஜப்பான் போஸ்ட்', தம் ஊழியர்களுக்கு ஒரு புதுக் கட்டளை போட்டிருக்கிறது. அதன்படி, இனிமேல் தபால் ஊழியர்கள் யாரும், கண்டிப்பாக மீசை வைத்துக் கொள்ளக்கூடாது. அப்படி வைத்துக்கொண்டால் வீட்டுக்குப் போக வேண்டியிருக்கும்.

வேலைக்கு ஆபத்து என்று எல்லா ஊழியர்களும், ஒத்துப்போக, 'நொபோரு நகமுரா' என்பவர் மட்டும் அடம் பிடித்திருக்கிறார். பதினெட்டு வருஷமாய் ஆசைஆசையாய் வளர்த்த மீசையை, இப்படி ஒரே நாளில் ஷேவ் செய்யச் சொன்னால், அது சரியா என்று எதிர்கேள்வியும் கேட்டிருக்கிறார்.

'மீசை வைத்துக்கொள்வது ஒருவரின் தனிப்பட்ட சுதந்திரம். அதில் தலையிடுவது மனித உரிமைகளை மறுப்பதாகும்' என்று ஜப்பான் நாட்டு வழக்கறிஞர் கூட்டமைப்புக் கண்டித்திருக்கிறது.

சரி... மீசையை ஏன் ஷேவ் செய்யச் சொல்கிறார்கள்? கடிதம் பெறுபவர் எரிச்சலடையக் கூடாதாம். என்ன கொடுமை சார் இது?

– ஸாந்த்

அன்று முழுவதும் கரண்ட் கட். எல்லாம் ஸ்தம்பித்து விட்டது. லிஃப்ட் இல்லாமல், முதல் மாடிக்கு ஏறி இறங்குவதே பிரம்மப் பிரயத்தனமாய் இருந்தது. 'என்னடா இது, இந்த அளவுக்கு இடம்கொடுத்து விட்டோமா என்று தன்னைத் தானே நொந்துகொண்டாள் அருணா.



✱ லக்ஷ்மி மோகன்


கொஞ்ச நாட்களாகவே வியர்வை அதிகம். பத்து அடி நடந்தாலே மூச்சு வாங்குகிறது. அவள் எண்ணத்தைக் கலைத்தது ஃபோன்கால்.

50 Kg தாஜ்மஹால்!

எதிர்முனையில், ''அருணா, மறந்துடாம ஈவ்னிங் ஆறு மணிக்கெல்லாம் ஸ்வேதாவைக் கூட்டிட்டு வந்துடு; டின்னர் இங்கதான்'' என்றாள் உமா. முடித்தவள் உடனே திரும்பவும் கூப்பிட்டு, ''ஏய், நாமல்லாம் சேர்ந்து வாங்கினோமே. அந்த பிங்க் கலர் சாரி, அதைக் கட்டிட்டு வா. நம்ம குரூப் எல்லார்கிட்டயும் சொல்லியிருக்கேன்'' என்றாள். பர்த் டே பார்ட்டிக்குக் கிளம்பத் தயாரானாள் அருணா.

''அம்மா எந்த டிரஸ்ஸப் போட்டுக்க'' என்ற ஸ்வேதாவுக்கு காக்ரா சோளியைப் போட்டுவிட்டு, தான் அணிவதற்கு அயர்ன் செய்து வைத்திருந்த, டிசைனர் ப்ளவுஸ்ஸுக்குள் கையை நுழைத்தாள் அருணா.

ஸ்கூலுக்குள் நுழையமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கும் குழந்தை மாதிரி, ப்ளவுஸ் முழங்கைக்குமேல் ஏறாமல் அடம் பிடித்தது. என்னடா இது வம்பாப் போச்சு. சரி அவிழ்க்கலாம் என்று கீழே பிடித்து இழுத்



தால், 'உத்தமபுத்திரன்' சிவாஜியின் தலையில் மாட்டிக் கொண்ட மாஸ்க் போல, இறுக்கிப் பிடித்துக்கொண்டு பாடாய்ப் படுத்தியது. இப்போது பார்த்தா கேஸ் சிலிண்டர் வர வேண்டும்! ''அம்மா கேஸ்'' ஸ்வேதா டம் டம் என்று கதவை இடித்தாள். ஒரு வழியாய்க் கிட்டத்தட்ட கிழிக்கும் நிலையில் ப்ளவுஸை அவிழ்த்து எறிந்துவிட்டு வேகமாக நைட்டிக்கு மாறினாள். சிலிண்டர்காரரை அனுப்பினாள்.





அருணாவுக்கு இப்போது இரண்டு பிரச்னைகள். ஒன்று ப்ளவுஸ் சரியில்லை; மற்றொன்று கேட்கும் தோழிகளிடம் என்ன சொல்வது. ஏற்கெனவே பத்மா, வாய்க்கு ஏதுடா அவல்னு பார்ப்பா. 'மூணு மாசம் முன்னாடி வாங்கின ப்ளவுஸ் பத்தலை'ன்னு சொன்னா, ஹெல்த் கான்ஷியஸ் கொஞ்சமாவது வேணும்னு லெக்சர் அடிக்க ஆரம்பிச்சுருவா. அதைக் கேட்கப் பொறுமை இல்லை அருணாவுக்கு. சுடிதார்தான் இந்த நேரத்தில் கை கொடுக்கும் தெய்வம். சட்டென்று ஒரு சுடிதாரை எடுத்து மாட்டிக்கொண்டு கிளம்பினாள்.

உமாவின் ஐந்து வயது குழந்தையின் பிறந்த நாள் பார்ட்டி களைகட்டியிருந்தது. அருணாவைத் தவிர தோழிகள் எல்லோரும் பிங்க் கலர் புடைவையில் ஆஜர். உள்ளே நுழையும்போதே, ''என்னடி இது?'' என்ற கோரஸ் குரல் மனத்தைச் சங்கடப்படுத்தியது.

யோசித்து வைத்திருந்த சாக்கை அவிழ்த்துவிட்டாள். ''அயர்ன்பையன் தொலைத்து விட்டான்'' என்றாள்.

''அச்சச்சோ அழகான ப்ளவுஸ் இப்படி

1 லக்ஷ்மி மோகன்

யாப் பண்ணுவான்'' என்று ஆளாளுக்கு அவனைத் திட்டித் தீர்த்தார்கள்.

பர்த் டே பார்ட்டிக்கு ஆர்டர் செய்யப் பட்ட கேக், சமோசா எல்லாம் பேப்பர் பிளேட்டில் பரிமாறப்பட்டன. எல்லாம் அருணாவுக்குப் பிடித்த ஐட்டங்கள். வெயிட் ஏறி விட்டது என்ற கவலையைப் போக்க, அந்த ட்ரீட் அப்போதைக்கு ஆறுதல் அளித்தது. ஆனாலும் எப்படி இது என்று மனம் காரணத்தைத் தேடியது.

பாழாய்ப்போன அந்த ஃபேமஸ் கேக் ஷாப், போன வருஷம் வீட்டுக்கு அருகில் வந்ததிலிருந்துதான் என்று பிடிபட்டு விட்டது. ஸ்வேதாவுக்கு ஸ்கூல்விட்டு வந்தவுடன் வாங்கிக் கொடுக்கும் சாக்கில், தானும் பீட்ஸா, கேக், சமோசா என்று அடைத்துக்கொண்டதே முழு முதற்காரணம் என்று நினைத்துக்கொண்டாள். ஆனாலும் பாழும் மனம் கேட்கிறதா? மறுநாள் காலையில் நடக்க இருக்கும் விபரீதத்தை உணராமல், ஒரு வெட்டு வெட்டத் தொடங்கினாள். அவள் சாப்பிட்ட உணவிலிருக்கும் கொழுப்பின் 'கொழுப்பான' வேலையைத் தெரிந்து கொள்ளாமல். சரி கொஞ்சம் கொழுப்பின் கதையைப் பார்ப்போம்.



ஒரு கிராம் கொழுப்பிலிருந்து ஒன்பது கலோரிகள் சத்து கிடைக்கின்றன.

கொழுப்பு உடலுக்கு அவசியமா... அது எப்படி அதிகரிக்கிறது?

மிதமான கொழுப்பு உடலுக்கு அவசியமே. ஒரு கிராம் கொழுப்பிலிருந்து 9 கலோரிகள் கிடைக்கின்றன. இது விட்டமின் ஏ, டி, ஈ, கே ஆகியவற்றைக் கரைந்த நிலையில் வைக்க உதவுகிறது. வெறும் எண்ணெயில் மட்டுமின்றி தேவைக்கு அதிகமாக உண்ணப்படும் புரதச் சத்தும், மாவுச் சத்தும் உடலில் கொழுப்பாக மாற்றப்படுகிறது.

கொழுப்புச் சத்தில் கொழுப்பு அமிலங்கள் உள்ளன. லினொலெனிக் அமிலம், லினொலியிக் அமிலம், அராக்கி டோனிக் அமிலம் என்று மூன்று முக்கிய கொழுப்பு அமிலங்கள் உள்ளன. இவற்றைத்தான் எஸ்ஸென்ஷியல் ஃபேட்டி ஆஸிட்ஸ் என்கிறோம்.

அதெல்லாம் சரி அருணாவுக்கு என்னாவயிற்று?

(தொடரும்)

விரும்பிச் சாப்பிடும் சமோசாவில் 150 கலோரி, ஸாண்ட்விச்சில் 170 கலோரி, ஒரு கேக் துண்டில் 190 கலோரி இருக்கின்றன. இந்தக் கலோரிகளை எரிக்க ½ மணி நேர நீச்சல், ½ மணி நேர நடை, ½ மணி நேரம் சைக்கிளிங்கும் தேவை.


கலக்கல் விற்பனையில்...
கல்கி
வண்ணத்துப்பூச்சியும் சின்ன தேவதையும்!
கவர் ஸ்டோரி
ரியல் ஸ்டோரி
நகைச்சுவை நாயகன் மிஸ்டர் பீன்
கலர்ஃபுல் ஸ்டோரி: அகர வரிசைக் கதைகள்
கோகுலம்
ஆகஸ்ட் 2008 விலை ரூ.8/-
குழந்தைகளின் குதூகலம்!



இன்னொரு மிஸ் யூனிவர்ஸ் அறிவிக்கப் பட்டுள்ள இந்த சுப முகூர்த்தத்தில் தமிழ் சினிமா வேடந்தாங்கலுக்கு வந்துபோன 'ராய்'களும்... 'சென்'களும் ஞாபகம் வருகிறார்கள். அந்த அழகு தேவதைகள் இப்போது என்ன செய்கிறார்கள்?


ப்ரியங்கா சோப்ரா: 'தமிழன்' படத்தில் விஜய்யுடன் அறிமுகமானார் ப்ரியங்கா சோப்ரா. காற்றடித்தாலே ஒடிந்து விடும் இவரது தேகமும், கொஞ்சம் உறுத்திய முகமும் அதே காலகட்டத்தில் தமிழுக்கு வந்த கொழுகொழு, 'ஜெமினி' கிரண் ஃபீவரில் தோற்றுப் போயின. 'உலக அழகி இல்லை... உப்புமா அழகி!' என்ற நெகட்டிவ் விமர்சனங்களோடு மும்பைக்கே திரும்பிய ப்ரியங்கா, தற்போது பாலிவுட்டின் சூப்பர் கேர்ள்! கோலிவுட்டுக்கு இப்போ வரக் கூடாதா? என்று நம்மவர்களை ஏங்க வைக்கும் ரகத்தில் இருக்கிறார் அம்மணி. 'ரோபோ'வுக்கு ஐஸ்வர்யா

தேவதைகள்

குட்டை சொல்லியிருந்தால், ப்ரியங்காதான் ஷங்கரின் வெல்கம் சாய்ஸாய் இருந்திருப்பார். 'லவ் ஸ்டோரி 2050' படத்தில் ரோபோவாய் நடித்து அசத்தியிருக்கிறார் அம்மணி.

லாரா தத்தா: கிராமத்துக் கிழவி சாயலை மட்டும் தவிர்த்துப் பார்த்தால், குறையொன்றும் இல்லாத அழகிதான் லாரா. இவரின் சினிமா பிரவேசம் 'அரசாட்சி' படத்தில்தான் அரங்கேறியது . ப்ரியங்காவுக்குக் கிடைத்த நெகட்டிவ் முணுமுணுப்புகள்கூட லாராவுக்கு... மூச்! கடந்த ஆண்டு வரிசையாக 'ஹிட்'கள் கொடுத்து பாலிவுட்டில் சூப்பராகவே இருக்கிறார்.

யுக்தா முகி: குதுப்மினார் உயரமும், முற்றிய முகமுமாய் வந்த இந்த உலக அழகியைப் பார்த்து, அரண்டுதான் போனார்கள் தமிழ் ரசிகர்கள். 'பூவெல்லாம்





சௌக்கியமா?

உன் வாசம்' படத்தில் 'யுக்தா முகி...' என்ற பாட்டுக்கு ஆடி! (ஓடி?!) வந்த இவருக்குச் சமமாகத் தெரிய, அஜீத்தே 'ஹை ஹீல்ஸ் ஷு' போட்டுதான் ஆடினாராம். எந்தவித 'அட்ராக்ஷனு'ம் இல்லாமல், உயரமான ஹீரோக்கள் இருக்கும் பாலிவுட்டிலும் இவரால் உயரம் தொடமுடியவில்லை. வெறும் உலக அழகி இமேஜை வைத்து என்ன செய்ய முடியும்? சில சிறு பட்ஜெட் படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார். அப்படி டைட்டில் ரோலில் இவர் நடித்த 'மெம்ஸஹாப்' என்ற படம், தற்போது மும்பை புறநகர்ப் பகுதிகளில் செமகல்லா கட்டி வருகிறது.

சுஷ்மிதாசென்; ஆத்மார்த்தமான காதலைக்கூட பணமாக்கும் பாலிவுட்டில், மனிதநேயம், குடும்பம், ஆன்மிகம், தத்துவம்... போன்ற மனம் தொடர்பான விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரே தங்க மனசு சுஷ்மிதாவுக்கு. ராணி லக்ஷ்மிபாயின் வாழ்க்கை வரலாற்றில் கிறங்கி, அதைத் தம் நடிப்பில் படமாக்கும் முயற்சியில் இறங்கியிருக்கும் இந்த 35 வயது தாண்டிய முதிர்கன்னிக்கு, ஒரு குழந்தையும் இருக்கிறது. தத்துக்குழந்தைதான். தம் மனத்தைக் கவ்வும் ஆண்மகனை இன்னும் சந்திக்காததால் திருமணத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லை என்று கூறும் இந்த இந்தியாவின் இரண்டாவது மிஸ்.யூனிவர்ஸுக்கு, ராணி லக்ஷ்மிபாயைப் பிடிக்க இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, இருவரும் ஒரே தேதியில் பிறந்தவர்கள். மற்றொன்று லக்ஷ்மிபாயும் சுஷ்மிதாவைப் போல் குமந்தையைத் தத்தெடுத்து வளர்த்தவர்.

- **வி.ஜே.விமல்**

பாங்கர் விநாயகராவ் என்ற நூலுக்கு அமரர் கல்கி எழுதிய முன்னுரையிலிருந்து...

விமோசனம் பத்திரிகை நடந்து கொண்டிருந்த காலத்தில், சென்னையில் இரட்டை ஆட்சி நடந்துகொண்டிருந்தது. இரட்டையாட்சி சர்க்கார், மாகாணத்தில் மது அரக்கனுடைய தீமையைப் பிரசாரம் செய்வதற்காக, ஒவ்வொரு ஜில்லாவிலும் கமிட்டிகளையும் பிரசாரகர்களையும் ஏற்படுத்தியிருந்தார்கள். 'டெம்பரன்ஸ் கமிட்டி' என்று பெயர் கொண்டிருந்த இந்தக் கமிட்டிகளைச் சிலர் 'மிதக் குடிப் பிரசாரக் கமிட்டி' என்று பரிகாசம் செய்தார்கள். ஆயினும், மேற்படி கமிட்டிகள் சில ஜில்லாக்களில் சிறந்த வேலை செய்து வந்தன. அந்தக் கமிட்டிகளின் வேலைக்கு 'விமோசனம்' மிக்க உதவியாக இருந்தது. சில ஜில்லாக் கமிட்டிகள் பத்துப் பிரதிகள், பதினைந்து பிரதிகள் தருவித்து மதுவிலக்குப் பிரசாரகர்களுக்குக் கொடுத்தன.

பொதுவாக அச்சமயம் தமிழ் நாடெங்

அன்றும் இன்றும் என்றும்

அமரர் கல்கி



"டாக்டர், பேஷண்ட்டோட 'வெல்த்' செக்கப் பண்ணிட்டேன்; நீங்க தாராளமா அவருக்கு 'ஹெல்த்' செக்கப் பண்ண லாம்!"

- அனன்யா



கும் மதுவிலக்குப் பிரசாரத்தில் உற்சாகம் ஏற்பட்டிருந்தது. காந்தி ஆசிரமத் தொண்டர்கள், தீவிரமான மதுவிலக்குப் பிரசாரம் செய்தார்கள். விமோசனத்தில் வெளியான படங்கள் பிரசாரத்துக்கு மிக்க உதவியாயிருந்தன. மேற்படி படங்களைப் பெரிதாக எழுதச் செய்து, துணியில் ஒட்டி வைத்திருந்தோம். மொத்தம் சுமார் முப்பத்திரண்டு படங்கள் இருந்தன. இந்தப் படங்களையும் பெட்ரோமாக்ஸ் விளக்கையும் எடுத்துக் கொண்டு, ஆசிரமத்தின் பெரிய கட்டை வண்டியில் ஏறி, வாரத்துக்கு இரண்டு நாள், கிராமப் பிரசாரத்துக்குச் செல்லுவோம். ஆசிரமத்தில் ராஜாஜி இருந்தபோதெல்லாம் அவர்களும் வருவார்கள்.

ஒரு கிராமத்துக்குப் போனதும், முதலில் கிராமத்துச் சாவடிக்குச் சென்று பெட்ரோமாக்ஸ் விளக்கை ஏற்றிக் கொள்வோம். பிறகு மதுவிலக்குப் பாட்டுப் பாடிக்கொண்டு ஊரைச் சுற்றி வருவோம். அந்தச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றது போல் நாமக்கல் கவிஞர் மதுவிலக்குப் பாட்டு ஒன்று பாடிக் கொடுத்தார்:

குற்றமென்று யாருமே கூறுமிந்தக் கள்ளினை
விற்கவிட்டுத் தீமையை விதைப்பதென்ன விந்தையே!
பாடுபட்ட கூலியைப் பறிக்கும் இந்தக் கள்ளினை
வீடு விட்டு நாடு விட்டு வெளியிலே துரத்துவோம்!

என்பது போன்ற பாட்டின் அடிகள் கிராமவாசிகளுக்கு எளிதில் புரியக் கூடியதாயும், அவர்கள் மனத்தில் பதியக் கூடியதாயும் இருந்தன.

புதுப்பாளையம் காந்தி ஆசிரமம் ஏற்பட்ட பிறகு, நூற்றல் கூலி, நெசவுக்கூலி மூலமாய்ப் பக்கத்துக் கிராமங்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய் பட்டுவாடா ஆகி வந்தது. ஆயினும், கிராமவாசிகளின் நிலைமை மொத்தத்தில் அபிவிருத்தி அடையவில்லை. தரித்திர நாராயணர்களின் வாசஸ்தலங்களாகவே கிராமங்கள் இருந்து வந்தன. இதற்குக் காரணம் கள்ளு, சாராயக் கடைகளே என்பதை ராஜாஜி கண்டார். மதுபானத்தில் ஏழை எளிய மக்களின் வீடுகள் நரகக் குழிகளாகி இருப்பதையும், அவர்கள் நாளுக்கு நாள் க்ஷீணமடைந்து வருவதையும் ராஜாஜி பார்த்தார். கள்ளுக்

மதுவிலக்கு

கடைகளை மூடினால் ஒழிய, கிராமவாசிகளுக்கு விமோசனமே கிடையாது என்ற உறுதியான எண்ணம் அவர் மனத்தில் நிலைபெற்றது தேசத்தில் எந்தத் திட்டமும் இதைப் போல் முக்கியமானதல்ல என்ற எண்ணமும் உண்டாயிற்று. அதனால்தான் மதுவிலக்குப் பிரசாரத்துக்காக ஆரம்பித்த பத்திரிகைக்கு 'விமோசனம்' என்று பெயரிட்டார்.

பெட்ரோமாக்ஸ் விளக்கைப் பொருத்தி வைத்துவிட்டு மதுவிலக்குப் பாட்டைப் பாடிக்கொண்டு ஊரைச் சுற்றி வருவோம். எங்களைத் தொடர்ந்து கிராமவாசிகள் சிலரும் வருவார்கள். வரவரக் கூட்டம் அதிகமாகும். கடைசியில் வசதியான இடம் ஒன்றில் ஊர்வலம் முடிந்து பொதுக் கூட்டம் ஆரம்பமாகும். மதுவிலக்குப் பிரசாரப் படங்களை ஒவ்வொன்றாக விரித்து, விளக்கு வெளிச்சத்தில் ஒருவர் காட்ட, இன்னொருவர் அதைச் சுட்டிக் காட்டி விளக்கிப் பேசியது கிராமவாசிகளின் மனத்தில் மிகவும் நன்றாகப் பதிந்தது.

"2011-ல் ஆட்சியைப் பிடிப்போம்னு எந்த தைரியத்துல தலைவா அறிக்கை விடறீங்க?"

"நமக்குப் பின்னால கட்சி ஆரம்பிச்சவனெல்லாம் சொல்லும்போது நாம சொன்னா தப்பா..?"

- சீர்காழி வி. ரேவதி



விமோசனத்தில் வெளியான படத்தொகுதிகளில் ஒரு குறிப்பிட்ட தொகுதியைக் கிராமவாசிகள், முக்கியமாகப் பெண்கள், மிகவும் ரசித்துச் சிரிப்பார்கள்.

அந்தப் படத்தொகுப்பில், சட்டை தொப்பி போட்ட மனிதன் ஒருவன், ஒரு சாராயப் புட்டியை முதலில் ஒரு மாட்டிடம் கொண்டு நீட்டுகிறான். மாடு குடிக்க மாட்டேன் என்கிறது. பிறகு குதிரையிடம் போகிறான். குதிரையும் வேண்டாம் என்கிறது. பிறகு நாய் குடிக்க மறுக்கிறது. பன்றிகூட வேண்டாம் என்று மறுதளிக்கிறது. கடைசியில் அந்தச் சட்டைக்காரன் ஒரு கிராமத்துக் குடியானவனிடம் கொண்டு போய்ப் புட்டியை நீட்டுகிறான். அந்தக் குடியானவன் அதை வாங்கிக் குடிக்கிறான். "நாயும் பன்றியும்கூட விஷம் என்று குடிக்க மறுக்கும் மதுவை மனிதன் குடிக்கிறான். பார்த்தீர்களா?" என்று படத்தைச் சுட்டிக்காட்டிப் பிரசங்கி சொன்னதும் கூட்டத்தில் உள்ள ஸ்திரீகள் எல்லோரும் சிரிப்பார்கள். ஆண்களில் சிலர் சிரிப்பார்கள். இன்னும் சிலர், "ஆமாம், அது வாஸ்தவம்தானே!" என்பார்கள்.

படங்களைச் சுட்டிக்காட்டி நாங்கள் ஒவ்வொருவரும் பிரசங்கம் செய்வதுண்டு. படங்களின் உதவி இல்லாமல் பேசுவதும் உண்டு. ஆயினும் ராஜாஜி பேசும்போது கிராமத்து ஜனங்களின் மனத்திலே பதிவது போல் எங்களுடைய பேச்சுப் பதிவதில்லை. ஏனெனில், ராஜாஜியைப் போலக் கிராமத்து ஜனங்களின் கஷ்டங்களை நாங்கள் உணரவில்லை. எங்கள் பேச்செல்லாம் பள்ளிக் கூடத்தில் உபாத்தியாயர் பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிப்பது போலிருக்கும். ராஜாஜியின் பேச்சோ குழந்தையிடம் உயிரை வைத்திருக்கும் தாயார் அன்புடன் புத்தி சொல்வது போலிருக்கும். ●



பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு

யுவஸ்ரீ கலா பாரதி விருது

மதுரை பாரதி யுவ கேந்திரா சார்பில் இசை, படிப்பு, ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பேச்சு, கவிதை, விளையாட்டு ஆகிய துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் சிறந்து விளங்குகிற L.K.G முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியருக்கு **'யுவஸ்ரீ கலா பாரதி'** என்ற விருதினையும் கல்லூரி மாணவ மாணவியருக்கு **'சுவாமி விவேகானந்தர்'** விருதினையும் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட வாரியாக வழங்கி வருகிறோம். ஒவ்வொருவருக்கும் வெள்ளிக்கேடயம் மற்றும் விருதுக்கான பெரிய அளவிலான பட்டயமும், ஸ்படிக மாலையும் வழங்கப்படும்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள அனைத்து மாவட்டத்தைச் சார்ந்த பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு இவ்விருது வழங்கும் நிகழ்ச்சி அந்தந்த மாவட்டத்தில் நடைபெற உள்ளது.

ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ஒவ்வொரு வகுப்பில் உள்ள அனைத்து பிரிவுகளில் இருந்தும் முதல் 5 ரேங்க் பெற்ற மாணவ மாணவியர் மற்றும் இசை, UC MAS, ABACUS ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பேச்சு, கவிதை, அனைத்துவிளையாட்டு, பொது அறிவுத்திறன், யோகா ஆகிய துறைகளில் தகுதியுடைய பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் தாங்கள் பெற்ற பரிசுக்கான ஜெராக்ஸ் பிரதிகளின் நகல்களுடன் அடியிற்கண்ட முகவரிக்கு ஒவ்வொருவருக்கும் வீட்டு முகவரி, தொலைபேசி எண்ணுடன் கூடிய ரூ.10 அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட கவருடன் உடன் அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் 10ம் வகுப்பு மற்றும் +2 பொதுத்தேர்வில் 80% மற்றும் அதற்கு மேலும் மதிப்பெண் பெற்றவர்கள் தங்கள் பெற்ற மதிப்பெண் பட்டியலின் ஜெராக்ஸ் பிரதியுடனும் விண்ணப்பிக்கலாம்.

தேர்வு செய்யப்பட்டவர்களின் விவரம் அவர்களது வீட்டு முகவரிக்கு அனுப்பப்படும். விருது வழங்கும் விழாவில் அவரவருக்கு எடுக்கப்படும் புகைப்படச் செலவை ஒவ்வொருவரும் கண்டிப்பாக ஏற்க வேண்டும்.



அரிமா நெல்லை பாலு,
நிறுவனர்-பாரதி யுவ கேந்திரா,
G-28, சாந்தி சதன் குடியிருப்பு,
கோச்சடை, மதுரை-625 016.
செல் 94439-30815, 94426 30815.

டிஜிட்டல் கேன்டீன் -17




நாக்கு. ஆறு சென்டிமீட்டர் நீளம். மேல் பரப்பு முழுக்க சுவை அரும்பு என்ற நரம்பு முனை சென்சார்கள். இனிப்பு, துவர்ப்பு, கசப்பு இத்யாதி அறுசுவைகள். எந்தக் கலவையில் வந்தாலும், சட்டென்று அதை ருசிபார்த்து மூளைக்கு அனுப்ப, தலைக்குள் நியூரானில் மின்சார ஓட்டம். 'காஃபிக்குச் சர்க்கரை போடலியா?' நாக்கு கேட்கும்; சுவைக்கும். ஆறடி மனிதனை வளைத்துக் கட்டிப்போடும்.

வாயில் நாக்குப் புரள ஒலிப்பது பேச்சு. அதை கம்ப்யூட்டர் தொழில்நுட்பம் நகல் எடுக்க முடியுமானால், அதே நாக்கு ருசித்து அனுபவிப்பதையும், செயற்கையாக சிலிக்கான் சில்லை வைத்துச் செய்துகாட்ட முடியாதா? இதோ, டிஜிட்டல் நாக்கு.



ஊசிமுனையில் ஓராயிரம் குளம் வெட்டுவதைச் சாத்தியமாக்கித் தருவது நானோ டெக்னாலஜி. நானோ உருவாக்கிய டிஜிட்டல் நாக்கு முழுக்க சின்னச் சின்னக் குளமாகக் குழித்து வைத்திருக்கும்.




உணவுப் பதார்த்தமோ, திரவமோ டிஜிட்டல் நாக்கில் படியும்போது, குழிகள் நிரம்பும். வேறுவேறு வேதியல் அணுக்களாக உணவுத் துணுக்குக் கூறுபோடப்பட்டு, அந்தத் தகவல் கம்ப்யூட்டருக்குப் போகும். ஒவ்வொரு வேதியியல் அணுவுக்கும் ஒவ்வொரு சுவை என்று, கம்ப்யூட்டரில் ஏற்கெனவே பதிவாகி இருக்கும். வந்த தகவலை அதோடு ஒப்பிட்டு, என்ன சுவை என்று கம்ப்யூட்டர் உடனே சொல்லிவிடும். எதுக்குப் பிரயோஜனம் இதெல்லாம்?

டீத்தூள், குளிர்பானங்கள், மதுவகைகள்... போன்றவற்றை உற்பத்தி செய்யும் பெரிய நிறுவனங்களில், அவற்றை அவ்வப்போது சுவைத்துப் பார்த்து, ருசி அடிப்படையில் நிராகரிக்கவோ, விற்பனைக்கு அனுமதிக்கவோ டேஸ்டர்கள் இருப்பார்கள். இந்தச் சுவைஞர்கள் நாள் முழுக்க தங்கள் கம்பெனி சரக்கை ருசி பார்க்கிறதோடு, போட்டி

-இரா.முருகன்

கம்பெனிகள் உண்டாக்கும் அதே மாதிரி சமாசாரங்களையும் சுவைத்து ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ரெட்டை ஆயுள் தண்டனை போல பெரிய கொடுமை இது. டிஜிட்டல் நாக்கு, புழக்கத்தில் வரும்போது டேஸ்டர்கள் சுவை பார்க்கிற வேலையை அதனிடம் விட்டுவிட்டு, கணக்கு வழக்கு பணிக்கு மாறிக் கொள்ளலாம். நாள் முழுக்க ஒயினை ருசித்தாலும் இந்த டிஜிட்டல் நாக்குக்குப் போதை ஏறாது!

சகலவிதமான வாசனைகளும் அடுக்கடுக்காகப் பதிவான இந்த டிஜிட்டல் மூக்கை, ஜன நெரிசல் உள்ள மூக்கர் நல்லமுத்து தெரு போன்ற இடங்களில் நுழைத்தால், காற்றில் எவ்வளவு மாசு பரவியுள்ளது என்று உடனே மோப்பம் பிடித்து அறிவித்துவிடும். வாயு கசிவு மெலிதாகக் கிளம்பும்போதே டிஜிட்டல் மூக்கு எச்சரித்து அலறுவதால், போபால் நகர விஷ வாயு விபத்து போன்றவை நிகழும் முன்



அஃறா... அஃறா... 'நானோ' நாக்கு மூக்கு

மூக்கு மட்டும் சும்மா இருக்கலாமா? டிஜிட்டல் மூக்கும் ரெடி. அடிப்படை வாடையிலிருந்து தொடங்கி, காய்ந்து கிடந்த மண்ணில் மழை விழுந்ததும் எழுகிற சுகமான நெடி... வரை ஒற்றை சிலிக்கான் சில்லில் பதிந்து வைக்க, இங்கேயும் 'நானோ'தான் உதவி. பாலிமர் பொருளியல் (polymer physics) என்ற அறிவியல் துறை முன்னேற்றங்களின் அடிப்படையில் இது சாத்தியமாகும். நுகரப்படும்

தடுக்கப்படும்.

அண்மையில், டிஜிட்டல் நாக்கும் டிஜிட்டல் மூக்கும் சேர்ந்த உபகரணம் ஒன்றை உருவாக்கி வெற்றிகரமாகச் சோதனை செய்திருக்கிறார்கள். வேறு ஒன்றுமில்லை. மணக்கமணக்க ஃபில்டர் காஃபி வாசனையை டிஜிட்டல் மூக்கு அனுபவிக்கும்போதே இரண்டு சொட்டு 'பருகிய' டிஜிட்டல் நாக்கு, பானத்தை வர்ணிக்க ஆரம்பித்து விடும். பீபெரியா, ரொபஸ்டாவா, எந்த காஃபிக் கொட்டை, அதைக் கருகாமல், பிரவுன் நிறத்தில் வறுத்திருக்கிறதா, சரியான பதத்தில் அரைத்து, சரியான அளவு ஃபில்ட்டரில் போட்டு, டிகாஷன் இறக்க கச்சிதமாகச் சுடுநீர் சேர்க்கப்பட்டதா என்று தொடங்கி, காஃபியின் மணமும் ருசியும் அப்பீலுக்கு இடமில்லாதபடி அறிவிக்கப்படும். பேஷ் பேஷ், ரொம்ப நன்னா இருக்கு!

தஞ்சை பரத்வாஜ்

மேஷம்: துணிச்சலோடு செயல்படும் மேஷராசிக்காரர்களே... குடும்பச் சொத்துல இருந்து வந்த பிரச்னைங்க முடிவுக்கு வரும். சுபச்செலவுகள் உண்டுங்க. கடன் தொல்லைங்க முடிவுக்கு வருமுங்க. வியாபாரம் நல்ல படியா போகும். ராகு /கேது / குரு / சனி வழிபாடு நன்மையைத் தரும்.

ரிஷபம்: பேச்சுவன்மை மிக்க ரிஷப ராசிக்காரர்களே... உத்தியோக இடமாற்றம் உண்டுங்க. குடும்பத்துல பிரச்னை

இப்படி ஆடுனா 'ஜோடி நம்பர் ஒன்' ஆயிட முடியுமா? பரத் ஸார்!

கள் இருக்காது. கல்வியில் நல்ல முன்னேற்றம் காண லாம். வேலைப்பளு அதிகமாகும். திருமண பாக்கியம் உண்டாகப் போகுது. நண்பர்கள் தேடி வந்து உதவுவாங்க.

மிதுனம்: பழகுவதற்கு இனிமையான மிதுன ராசிக்காரர்களே... தடைப்பட்ட காரியங்கள் மளமளன்னு நடக்கப்போவுது. குடும்பத்துல மகிழ்ச்சி பொங்குமுங்க. உல்லாசப் பயணம் போவீங்க. கடன் தொல்லைங்க இருக்காது. பணம் பல வகையில வருமுங்க. ஆஞ்சநேயர் வழிபாடு நன்மையை அதிகப்படுத்தும்.

கடகம்: கண்டிப்பும் பாசமும் சரிவிகித கலவையான கடக ராசிக்காரர்களே... உத்தியோகத்துல நல்ல பெயர் வாங்குவீங்க. கடன் பாக்கிகள் வசூலாகும். நண்பர்கள் உதவி செய்வாங்க. சாப்பாட்டு விஷயத்துல கவனமா இருங்க. ராகு / கேது / குரு வழிபாடு நன்மையைத் தருமுங்க.

சிம்மம்: தளராத மனமுதிர்ச்சி



27.07.08 முதல் 02.08.08 வரை

நடக்குமென்பார்; நடக்கும்!

கொண்ட சிம்ம ராசிக்காரர்களே... மனத்தில் இருந்த குழப்பங்கள் தீருமுங்க. ஆரோக்கியம் நல்லபடியாக இருக்கும். பிரிந்த குடும்பம் ஒன்னு சேரும். தொழில்ல நல்ல ஏற்றம் இருக்குமுங்க. வெளிநாடு போற வாய்ப்பு வரும். ராகு / கேது / குரு வழிபாடு நன்மையைத் தரும்.

கன்னி: கண்ணியமிக்க கன்னி ராசிக்காரர்களே... இது ரொம்ப அருமையான வாரமுங்க. நீங்க தொட்டால் மண்கூடப் பொன்னாகுமுங்க. வியாபாரத்துல நல்ல முன்னேற்றம் இருக்குமுங்க! கல்வியில மேன்மை அடைவீங்க. சனீஸ்வர வழிபாடு நன்மையளிக்குமுங்க.

துலாம்: விவேகம் நிறைந்த துலா ராசிக்காரர்களே... வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வந்து சேருமுங்க. பூர்வீக சொத்து பிரச்னை தீர்ந்து போகும். தொழில் செய்ய உதவிங்க கிடைக்கும். அடிக்கடி மன உளைச்சல் ஏற்பட்டாலும் நன்மைக்குக் குறைவு இருக்காதுங்க. ராகு / கேது / குரு வழிபாடு நல்ல பலன்களை அளிக்குமுங்க.

விருச்சிகம்: நகைச்சுவையுடன் பேசும் விருச்சிக ராசிக்காரர்களே... அதிக மதிப்பெண்கள் பெறுவீங்க. வருவாய் பெருகுமுங்க. புதிய வேலைவாய்ப்புங்க தேடி வரும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். புதிய தொழில் தொடங்கப் போறீங்க. நாணயமாக நடந்துக்குவீங்க. ராகு / கேது / சனி வழிபாடு நன்மையளிக்குமுங்க.

தனுசு: புண்ணியப் பயணம் மேற்கொள்வதில் மிகுந்த ஆர்வம்கொண்ட தனுசு ராசிக்காரர்களே... வாழ்க்கை இனிமையாக இருக்கும். வசதிவாய்ப்புகள் பெருகப் போவுது. வேலையில் சுமை இருக்காது. வியாபாரம் சூடுபிடிக்கும். குரு / சனி வழிபாடு நன்மையை அதிகப்படுத்தும்.

மகரம்: தெய்வ நம்பிக்கையோடு காரியங்களில் ஈடுபடும் மகர ராசிக்காரர்களே... சுபகாரியங்கள் தடையில்லாம நடைபெறப் போகுது. வாக்கு மேன்மையை அடையும். வேலையும் கொஞ்சம் அதிகரிக்குமுங்க. கைப் பொருள் மீது கவனமா இருங்க. ராகு / கேது வழிபாடு நன்மையளிக்குமுங்க.

கும்பம்: விரைந்து முடிவெடுக்கும் கும்ப ராசிக்காரர்களே... வேலையில சுமை அதிகமாகும். குடும்ப வாழ்க்கையில விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. மறைமுக எதிர்ப்புகளும் இருக்கும். உடல் ஆரோக்கியம் நல்ல நிலையில் இருக்கும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு நன்மை தரும்.

மீனம்: எதிரிகளையும் நண்பர்களாக்கும் மீனராசிக்காரர்களே... இந்த வாரம் சிறப்பாக அமையும். ஆரோக்கியம் நல்லபடியாக இருக்கும். வியாபாரம் ஜோரா இருக்கும். குடும்பத்துல மகிழ்ச்சி பொங்கும். ஆடை ஆபரணங்கள் வாங்கிக் குவிப்பீங்க. வெளிநாடு போற வாய்ப்பு வரும். ஆஞ்சநேயர் வழிபாடு நன்மையைத் தரும்.

ஹாப்பி

சிவசங்கரி



* ராஜலக்ஷ்மி சூரி

அம்மா, இன்று (மே 10) உனக்குப் பிறந்தநாள். போன வருஷம் நினைவிருக்கிறதா? நீ தூங்கிக்கொண்டிருந்த போது, வண்ண பலூன்களைக் கொத்துக்கொத்தாக உன் அறை முழுவதும் தொங்க விட்டு, கட்டிலுக்குப் பக்கத்து மேஜை மேல், பெரிய கேக்கை வைத்து, 'ஹாப்பி பர்த்டே டு யூ' என்று உரக்கப் பாடி உன்னை எழுப்ப... கண் விழித்த உன் முகத்தில்தான் எத்தனை சந்தோஷம்!

கடந்த மூன்று வருஷங்களாய் நீ படுத்தபடுக்கையாக இருந்தபோதும், உன் மனசின் இளமை மட்டும் குறையவேயில்லை. பத்து வருஷங்களுக்கு முன்னர்கூட 'வீட்டிலேயே இருப்பதற்குப் பதில், வெளியில் எங்காவது போய், உறவினர் அல்லது சிநேகிதர்களைப் பார்த்துவிட்டு வாயேன்' என்றால், ''யார் வீட்டுக்குப் போனாலும், வயசானவர்கள் தங்கள் உடம்பைப் பற்றிப் பேசுகிறார்கள்; மற்றவர்கள் மேல் புகார் சொல்லிப் புலம்புகிறார்கள். இரண்டுமே எனக்குப் பிடிக்கவில்லை!'' என்றாய். என்னமோ உனக்கு இளவயசு என்பது போலவும்... மற்றவர்கள் கிழங்கள் என்பது போலவும் நீ பேசும்போது சிரிப்புத்தான் வரும்!

உன் திருமண வாழ்க்கையின் துவக்க காலத்தில், உனக்குக் கெடுதல் செய்தவர்களைக்கூட பின்னாளில் அரவணைத்து நீ உதவியதைக் கண்டு, ''இது எப்படிச் சாத்தியம், அம்மா?'' என்று பல முறைகள் கேட்டிருக்கிறேன். அழகாய்ப் புன்னகைத்தாய். ''ஏதோ தெரியாத்தனம்... போனால் போகட்டுமென்று விடக் கற்றுவிட்டால், எந்தக் கசப்பும் இல்லாமல் வாழ்க்கை நிம்மதியாய் இருக்கும்'' என்றாய்.

அப்போது நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன். ஒரு ஞாயிற்றுக்கிழமை. சிநேகிதிகள் ஒன்றாய் அமர்ந்து, 'கோயில், பூஜையறை... போன்ற குறிப்பிட்ட இடங்களில் இறைவனை வழிபடுவது தேவையா?' என்று விவாதித்துக் கொண்டிருந்தோம். நீ எப்படி எங்கள் பேச்சைக் கேட்டாய் என்று தெரியாது! சிநேகிதி வைத்திருந்த டிரான்ஸிஸ்டர் ரேடியோவைக் கையில் எடுத்தாய். 'காற்றில், ஆகாசத்தில் ஓசை அலைகள் நிறைந்திருக்கின்றன என்பதால், வெறும் காதால் திருச்சி, சென்னை வானொலிகளின் ஒலிபரப்பைக் கேட்க முடியுமா? நிலையத்தில் ஒலிபரப்புவதை ட்யூன் செய்து கேட்க, ஒரு ரேடியோ டிரான்ஸிஸ்டர் தேவைப்படுகிறது அல்லவா? கோயில்களும் பூஜையறைகளும் அப்படிப்பட்ட ட்யூனிங் ஸ்டேஷன்கள்தாம். எங்கும் கடவுள் நிறைந்திருந்தாலும், அவரோடு தொடர்புகொள்ள தேவை' என்று நிதானமாய்க் கூறினாய். நீ நகர்ந்ததும், என் சிநேகிதிகளில் ஒருத்தி வியப்பால், ''உங்கம்மா என்ன படித்திருக்கிறார்கள்?'' என்று கேட்டதும், எனக்கு மறக்கவில்லை.

தாழம்பூ நிறம், வாட்டசாட்டமான உடம்பு, ஒன்பது கஜப் புடைவை, மூக்கின் இரு பக்கங்களிலும் ஜொலிக்கும் மூக்குத்திகள், பிச்சோடா, வளைந்த மல்லிகை, பெரிய குங்குமப்பொட்டு, கலீரென்று ஓசையெழுப்பும் வண்டிச் சகட மெட்டிகள்... அப்பா இருந்த வரையில், ரவிவர்மாவின் ஓவியம் ஒன்று உயிர்பெற்றுவிட்ட மாதிரிதானே நீ வளைய வந்தாய்.

உனக்கு இருந்த கற்பனைத்திறனுக்கும், குரல்வளம், சங்கீத ஞானத்துக்கும், சந்தர்ப்பச் சூழல் சரியாக இருந்திருந்தால், நிச்சயம் நீ ஒரு பெரிய எழுத்தாளராய், வித்வாம்சினியாய் ஆகியிருப்பாய்! அந்தக் குறையைத் தீர்க்கத்தான், எனக்கு நடனம் சொல்லிக் கொடுத்து மேடையேற்றினாய்; நான் எழுத்தாளரானதும் பரவசப்பட்டாய். அண்மைக் காலத்தில், கையில் பொருத்தியிருந்த உலோகத்தகடு, சதையைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்து உடல் உபாதை அதிகமாக இருந்த சமயத்தில் கூட, உனக்குப் பிடித்த பாடகரின் இசையைக் கேட்பதுதானே உனக்கு அரு மருந்தாக அமைந்தது!

அறுவை சிகிச்சை செய்து, வெளியே துருத்திக்கொண்டிருந்த தகட்டை வெற்றிகரமாய் அகற்றிவிட்டபோதும், அந்த அதிர்ச்சியை, உன் தளர்ந்த உடம்பால் தாங்கிக்கொள்ள இயலாமல் போய்விட்டது. உன் பக்கத்தில் அமர்ந்து உனக்குப் பிடித்தமான யமுனா கல்யாணிராக 'ஸ்ரீதேவி ரமணம்' பாடலை நான் பாடியபோது, மூடிய கண்கள் மூடியபடி இருக்க, வீங்கிய விரல்களைச் சிரமப்பட்டுத் தூக்கி மெதுவாகத் தாளம் போட்டாயே, அம்மா...

பர்த்டே டு யூ



✱ தாயாருடன் சிவசங்கரி...

நான் பாடி, நீ தாளம் போட்டது அன்றுதான் கடைசி.

இன்று நீ இல்லாமல் உன் அறை, இந்த வீடு மட்டுமல்ல, என் வாழ்க்கையும் வெறிச்சோடிவிட்டது.

இருபத்து நான்கு வருஷங்களாக இரவும், பகலும், முதலில் எனக்கு அம்மாவாக, அப்புறம் தோழியாக, இறுதியில் கைக்குழந்தையாக, என்னுடனே இருந்து பழகிவிட்ட உன்னைப் பிரிந்திருப்பது, ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. ○

நில்... கவனி... கொல்! ~~செல்!~~

"ஒண்ணு, ரெண்டு, மூணு, நாலு, கைப் பையைச் சேர்த்தால் அஞ்சு" என்று வாய்விட்டு தனது லக்கேஜ்களை எண்ணினாள் பவித்ரா.

கூடவே '74' என்ற எண்ணும் அவள் நினைவில் எட்டிப் பார்த்தது. இந்தியாவிலிருந்து கிளம்பி வந்து அத்தனை நாட்கள் ஆகிவிட்டன. இன்று சிங்கப்பூர் ஏர்லைன்ஸ், அவளை மீண்டும் இந்தியாவுக்குச் சுமந்துசெல்லப் போகிறது. குடியிருப்புப் பகுதியின் சாவியை எடுத்துக்கொண்டாள். சுமந்த் டாக்ஸியை அழைத்து வரச் சென்றிருந்தான். சிங்கப்பூர் வாசத்தில் கிடைத்த நல்ல நண்பன்.

மொபைலைப் பார்த்தாள். அவள் விரல்கள் தானாக அந்த எண்களை ஒற்றின. எப்போதும் போல தொடர்ந்து ஒலித்துவிட்டு அது எடுக்கப்படாமலே இருப்பது, வழக்கமான சங்கதிகள் ஆகிவிட்டன. இன்றும் அதே விளைவுதான்.

ஒருவேளை கணினியின் தபால்பெட்டியில் ஷிப்ராவின் கடிதம் வந்திருக்குமோ?

கணினியின் மின் இணைப்பை உயிர்ப்பித்தாள். எதிர்பார்த்த அஞ்சல் வரவில்லை.

"பவித்ரா, டாக்ஸி வந்தாச்சு" என்றபடியே நுழைந்த சுமந்த், அவள் கணினியின் முன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துத் திகைத்தான். பிறகு, "உனக்கு உங்க நிறுவனத்தின் தலைமை பதவியை ஏற்கும் தகுதி வந்தாச்சு. ஒரு நாளைக்கு எட்டு முறை ஈமெயில் செக் பண்றே" என்றான் கிண்டலாக.

அந்தக் கிண்டல் எதுவும் உரைக்கவில்லை. 'ஷிப்ராவுக்கு என்ன ஆச்சு?'

விமான நிலையம் வரை சென்ற டாக்ஸியும், அங்கிருந்து கிளம்பிய விமானமும் மெகா சீரியல்களைவிட மெதுவாகச் செல்வதாக உணர்ந்தாள் பவித்ரா.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பவித்ராவிடம் சொல்ல நிறைய விஷயங்கள் இருந்தன.

தொலைபேசியில் சுருக்கமாகப் பேசியதையெல்லாம் விவரமாக வெளிப்படுத்திக்கொண்டிருந்தனர். சட்டென்று பேச்சை நிறுத்திய அப்பா, "உன் கவனம் இங்கே இல்லேன்னு நினைக்கிறேன். என்னவோ மனசிலே உறுத்திக்கிட்டு இருக்கு" என்றார்.

"ஷிப்ரா..." என்று பவித்ரா தொடங்க, "ஏன், அவளுக்கு என்ன உடம்பு சரியில்லையா? விமான நிலையத்துக்கே அவ வருவான்னு எதிர்பார்த்தோமே..." என்றார் அப்பா.

மர்மம் அதிகமானது. அப்படியானால்

திக்திக் தொடர்கதை-1



அருண்சரண்யா

ஷிப்ராவைப் பற்றிய எந்தப் புதிய தகவலும் பெற்றோரிடமும் இல்லை.

''உனக்குப் பிடித்த காஜூ கத்லி வாங்கி வெச்சிருக்கேன். இன்னிக்கு மட்டும் கலோரி கணக்குப் பார்க்க வேண்டாம்.'' அம்மா, ஷிப்ராவிலிருந்து பேச்சுத் தடத்தைச் சட்டென்று மாற்றி விட்டாள்.

'கண் பார்வையிலிருந்து மறைந்தால், மனத்திலிருந்தும் மறைந்த மாதிரிதான்' என்கிற ஆங்கிலப் பழமொழி உண்மைதானோ? ஷிப்ராவுடன் முதல் சந்திப்பில் உண்டான விரிசல், பவித்ராவுக்கு நினைவுக்கு வந்தது.

''**நா**ன் பவித்ரா; உங்க பெயர் சித்ரா; சரிதானே? அட்டண்டென்ஸ் எடுத்தபோது கவனித்தேன்.''

''என் பெயர் சித்ரா இல்லை. 'ஷிப்ரா!'''

''ஓ, ஐ. அம் சாரி. உங்க வீடு எங்கே





இருக்கு ஷில்பா?''

இப்போது ஷிப்ராவின் முகத்தில் கோபம் தெரிந்தது. ''தெரியாமல் சொல்றீங்களா? அல்லது கிண்டல் செய்யறீங்களா?''

''ப்ராமிஸா உங்க வீடு எங்க இருக்குன்னு எனக்குத் தெரியாது.''

இதுவும் அப்பாவித்தனமா? கிண்டலின் தொடர்ச்சியா? பவித்ராவின் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

''என் பேர் ஷிப்ரா. ஷி....ப்...ரா. புரிஞ்சுதா?''

பவித்ராவின் கண்கள் விரிந்தன. ''அதாவது S...H...I...P...R...A. சரியா?''

''கங்கான்னு பேர் வெச்சிக்கலாம்; காவேரின்னு இருக்கலாம். கோமதி, நர்மதா இதெல்லாம்கூட ஓகே. ஆனால், ஷிப்ரான்னா கேள்விப்பட்டதில்லையா?'' என்று படபடவெனக் கூறிவிட்டு, அங்கிருந்து நகர்ந்து சென்றுவிட்டாள் ஷிப்ரா.

'எதற்காக இவள் இப்படிக் கோபப்படுகிறாள்?'

அன்று வீட்டுக்குப் போனவுடன் ''ஷிப்ரான்னு ஒரு நதி இருக்கா?'' என்று கேட்க, அம்மா உதட்டைப் பிதுக்கினாள்; அப்பா அட்லஸைக் கொண்டு வந்து அவள் கையில் திணித்தார்.

இந்தியாவின் மையப் பகுதியில் விந்திய மலைப் பகுதியில் பிறந்து, மால்வா பீடபூமியில் பாய்ந்து, சம்பல் நதியில் கலக்கும் நதி. உஜ்ஜெயின் நகரம் அதன் கரையில் அமைந்ததுதான்.

இந்த விவரங்களையெல்லாம் மனப்பாடம் செய்து, அடுத்தநாள் ஒப்பித்தபோது, ஷிப்ராவின் முகத்தில் ஒரு புன்னகை தெரிந்தது.

''விநாயகர் காக்கையாக வந்து கமண்டலத்தைத் தட்டிவிட்டு விரிவடைந்ததால் காவிரின்னு பேரு'' என்றாள் பவித்ரா.

"இங்கிலீஷ் படத்துல நீங்க நடிக்க ஒப்பந்தம் ஆயிருக்கீங்களாமே...?"

"'டைவர்ஸ்'ங்கிற டைட்டிலைக் கேட்டதுமே 'இம்ப்ரஸ்' ஆகி, நடிக்க ஒத்துக்கிட்டேன்...!"

– சீர்காழி வி.ரேவதி

எதற்காக இந்த வியாக்யானம்? ஷிப்ரா வியப்பாகப் பார்க்க, பவித்ரா தொடர்ந்தாள்.

''நர்மதா என்றால் 'மகிழ்ச்சியைக் கொடு'ன்னு அர்த்தமாம்.''

ஷிப்ரா சிரித்தாள். ''புரியுது. ஷிப்ரான்னா என்ன அர்த்தம்னு கேக்கறீங்க. புனிதம்னு அர்த்தம்; தெளிவுன்னு இன்னொரு அர்த்தமும் உண்டு.''

''கையை நீட்டுங்க'' என்றபடி அவள் கையைத் தட்டினாள் பவித்ரா. ''ஸேம்-ஸேம். என் பெயருக்கும் புனிதம்னுதான் அர்த்தம்.''

'தெளிவு என்று இன்னொரு அர்த்தம்!' இப்போது யோசித்தால் எரிச்சலாக வந்தது. 'எதற்காக உன் மௌனத்தால் என்னைக் குழப்பிக்கொண்டிருக்கிறாய்?' என்று ஷிப்ராவை உலுக்க வேண்டும் போல் இருந்தது.





உடனே கிளம்பிப் போகலாம்தான். ஆனால், 'அவள் ஆஃபீஸுக்குக் கிளம்பியிருப்பாள். சாயங்காலமா வீட்டுக்குப் போய்ப் பார்க்கலாமே' என்று அம்மா தடுத்துவிடுவாள்.

மேலும் யோசிக்கவிடாமல் வாசலில் ஏதோ சத்தம்; புரிந்துவிட்டது. அகிலா வந்திருக்கிறாள். கனத்த குரல்.

ஆனால், அன்று அவள் அவ்வளவு உருப்படியான ஒரு தகவலை அளிக்கப் போகிறாள் என்று பவித்ரா சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அது ஷிப்ராவின் புதிய தொலைபேசி எண். ''நம்பர் மாற்றி ஒரு மாசமாச்சே. உன்கிட்டே சொல்லல்லியா?'' என்றாள் ஆச்சரியமாக.

அகிலா, கிளம்பிய அடுத்த சில நொடிகளுக்குள் புதிய எண்ணில் ஷிப்ராவைத் தொடர்புகொண்டாள் பவித்ரா.

சுமார் இருபது நொடிகளுக்குப் பிறகுதான் எதிர்முனையிலிருந்து குரல் கேட்டது. ஏதோ கிணற்றுக்குள் பேசுவது போன்ற பலவீனமான குரல். ஆனால், சந்தேகமின்றி ஷிப்ராதான்.

''பவித்ரா பேசறேன். பேர் எங்கயோ கேள்விப்பட்ட மாதிரி இருக்கா?''

''ஸாரி... ரொம்ப ஸாரி...'' என்றாள் ஷிப்ரா. மன்னிப்பை இவ்வளவு இயந்திரத்தனமாகக்கூட ஒருத்தியால் சொல்ல முடியுமா என்ன?

படபடவெனப் பல கேள்விகளைக் கொட்டினாள் பவித்ரா. 'ஏன் என்னைத் தொடர்பு கொள்ளவில்லை? நான் தொடர்பு கொண்டபோதும் ஏன் பதில் பேசவில்லை? இப்போது எங்கே இருக்கிறாய்? கணவர் எப்படி இருக்கிறார்? எப்போது சந்திக்கலாம்?'

பதில்களை அடுத்தடுத்து ஷிப்ரா கூறி வருகையில், திடீரென அவள் குரல் தடைப்பட்டது. மறுமுனையில் 'ஆ'வென்ற அலறல் ஒலி கேட்டது. ரயிலின் ஒலி மிகச் சமீபத்தில் கேட்டது. பிறகு சட்டென்று மௌனம்.

என்னவானது? பதற்றத்துடன் மீண்டும் மீண்டும் ஷிப்ராவைத் தொடர்பு கொள்ள முயற்சி செய்ய, மறுமுனையில் எந்த ஒலியும் கிட்டவில்லை. அப்போதுதான் கேட்ட ஒரு கேள்விக்கு ஷிப்ரா அளித்த பதில் நினைவுக்கு வந்தது.

''ஷிப்ரா இப்போ எங்கே இருக்கே?''

''தெருவிலே நடந்துக்கிட்டிருக்கேன். இதோ ரயில்வே லெவல் க்ராஸிங்கைக் கடக்கப் போறேன்.''

'ஷிப்ரா!?!?' அடிவயிற்றிலிருந்து எழுந்த ஓலத்தை அடக்கிக்கொண்டு வாசலுக்கு ஓடிய பவித்ரா, அருகில் வந்த ஆட்டோவைக் கைகாட்டி நிறுத்தினாள்

(திக்திக் திக்திக்)

''எங்க தலைவர் யார்கிட்ட எதை வாங்கினாலும் உடனே திருப்பிக் கொடுத்துடுவார்.''

''ரொம்ப நல்லவரா?''

''ஆமாம். திருவோடு சின்னத்துல நின்னு வோட்டு வாங்கி ஜெயித்து, அதையே ஜனங்களுக்குத் திருப்பிக் கொடுத்துட்டார்!''

– **மு.செந்தில்குமார்**

கற்பகக் கனி



பாட்டியின் பாட்டி சொன்னதாய்
அம்மா ஒருநாள் சொன்னாள்
கேட்டதைத் தரும்
கற்பக மரம் ஒன்று வளர்ப்பதாக

அற்புத ரகசியம் கேட்பதாய்க்
கேட்டுக்கொண்டிருந்தேன்
விழிகள் விரிய

நீராய் தினமும்
எதை ஊற்றுகிறோமோ
அதுவாய்த் தாணகவே விளையுமாம்.

அன்றே விளையலாம்
அடுத்தநாள் விளையலாம்
அடுத்த மாதமோ வருடமோ

தொடர்ந்து துவளாது
பொறுமையாய் வளர்க்க வேண்டும்
பாதுகாப்பாய் மனதில்
என்பது மட்டும் விதி

கிடைத்தது கற்பகக் கனி
பொறுமைக்கும்
பெரும் போராட்டத்துக்கும் பின்
எதிர்பாரா அற்புத கணத்தில்
பேரொளியாய் சாந்த ருசியாய்

தொடர் பயிற்சி செய்கிறேன்
என் மகளின் மகளுக்கு
இதைச் சேர்த்துவிடும் முனைப்புடன்

மதுமிதா

சில பேரைப் பார்த்திருப்பீர்கள்... வயசு ஒன்றும் அதிகமாயிருக்காது... ஆனால் நடக்கும் போது ஒருவித வேதனையோடு காலை இழுத்து இழுத்து நடப்பார்கள்... இவர்கள் சையாட்டிகா... என்ற நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

- டாக்டர் பானுமதி

சென்னை, தி.நகரில் "ஸன் ரைஸ் ஹெர்பல் க்ளினிக்" என்ற பெயரில் மூலிகை மருத்துவம்

ஸன்ரைஸ்

ஹெர்பல் க்ளினிக்

மூலிகை மருத்துவம்

மூட்டுவலி முற்றிலும் நீங்க...

- ஆன்மிக மருத்துவம் செய்து வரும் டாக்டர் ஆர். பானுமதி.

"சையாட்டிகா" என்பது தொடை நரம்பு பாதிக்கப்பட்டதால் ஏற்படும் ஒருவிதமான வாதம். இந்த வாதம் ஏற்பட்டவர்களுக்கு முழங்கால் வலி மற்றும் வீக்கம், பாதத்தில் எரிச்சல் இருக்கும். தகுந்த ஆயில், மூலிகை ஒத்தடம், பிளட்சர்க்குலேஷன் செய்வதன் மூலமும் மூலிகை மருந்து மூலம் இதை குணம் செய்யலாம்.

மூட்டுவலி ஏற்பட முக்கிய காரணம் அதிக உடல்எடை, வாதம் அதிகமாகி மூட்டுகளில் உள்ள கால்சியம் பசை உலர்வதால் வருவதே முக்கிய காரணம்.

முதலில் உடல் எடையை ஆயில் மசாஜ் மூலம் குறைத்து, வலி, தேய்மானம் எப்பேர்ப்பட்ட மூட்டு, நரம்பு பிரச்சனைகளுக்கும் மூலிகை மருந்து மூலம் சரி செய்கிறோம்.

ஆயுர்வேதம் மருத்துவத்துக்கு முறைபடி பயிற்சி எப்படி பெற்றீர்கள்?

என் மாமனார் மகான் காரை சித்தர் அருளால், அவர் எழுதிய கனக வைப்பு புத்தகத்தில் மூலிகை வைப்பு பகுதி ஆராய்ந்து பாரம்பரிய வைத்தியமுறைபடியும், சித்தா படித்தும் "உச்சி முதல் பாதம் வரை" அனைத்து நோய்களுக்கும் சீனியர் டாக்டர்கள் கூட்டு முயற்சியுடன் கோயம்புத்தூர், சென்னையில் வைத்தியம் செய்கிறோம்.




இது இயற்கை வைத்தியமா? என்று கேட்டால்... ஆன்மீக முறைப்படி இது இயற்கை வைத்தியமே என்று சிரிக்கிறார்கள். கூடவே உச்சி முதல் பாதம் வரை 108 சிட்டிகை வைத்தியம், சர்க்கரைக்கு பை... பை... பை... மகான் காரைசித்தர் எழுதிய கனகவைப்பு போன்ற நூல்களை எழுதிய தோடல்லாமல் தலை பராமரிப்பு, முக பராமரிப்பு, பெண்களுக்கான அனைத்து வகை பிரச்சனைகள், கிட்னி பிரச்சனை போன்ற அனைத்து - பிரச்சனைக்கு மருந்து மற்றும் "Ceragem" மிஷின் மூலம் **எங்கள் கிளினிக்கில் சிகிச்சை அளிக்கிறோம்.** நம்பிக்கையோடு வாருங்கள்! என்கிறார்.

சென்னை தி.நகர், 10, மன்னார் தெரு, செல்: 92824 27772, 6534 1646
கோயம்புத்தூர் : செல்: 9994327016,

Advt.

கண்ணனைத் தேடி...

15



எம்பெருமான் மிக மதுரமாக பகவத் கீதா சாஸ்திரத்தைப் பாடினான். நம்மாழ்வாரோ, அதன் அர்த்தங்களையெல்லாம் தம் திருவாய்மொழியிலே மதுரமாக எடுத்துரைத்தார். நம்மாழ்வாரைப் பாடுவதற்கென்றே இப்பூவுலகில் அவதரித்தார் மதுரகவி ஆழ்வார்!

ஏரார் மதுரகவி, இவ்வுலகில்
வந்துதித்த
சீராரும் சித்திரையில் சித்திரை நாள்...

என்கிற பாசுரத்துக்கு ஏற்றாற்போலே, சித்திரை மாதம், சித்திரை நட்சத்திரத்தில் **திருக்கோளூர்** என்கிற திவ்ய தேசத்தில் மதுரகவி ஆழ்வார் அவதரித்தார். நம்மாழ்வார் அவதார ஸ்தலமான ஆழ்வார்திருநகரியின் அருகே உள்ளது **திருக்கோளூர்**. இதுவும் நவதிருப்பதிகளிலே ஒன்று. இந்த திவ்யதேசம், வைத்த மாநிதிப் பெருமானுடைய ஆஸ்தானம். திருக்கோளூர்வல்லிநாச்சியாருடன் அவன் இங்கே ஸேவை சாதிக்கிறான். ஸ்ரீதேவி - பூதேவி நாச்சியார்களும் இருக்கிறார்கள்.

இந்த வைத்த மாநிதி எம்பெருமானைப் பற்றி நாம் விரிவாகப் பார்ப்பதற்கு முன், இங்கே அவதரித்த மதுரகவி ஆழ்வாரின் புகழைப் பார்ப்போம். தமிழ் மறைகளான திவ்ய பிரபந்தங்கள் என்கிற மாநிதியை (அரும்பெரும் செல்வத்தை) நம்மாழ்வாரிடம் கேட்டு எழுதி, இவ்வுலகு அறியச் செய்தவர் மதுரகவி ஆழ்வாரே அல்லவா!



வேளுக்குடி ஸ்ரீ க்ருஷ்ணன் சுவாமிகள்



வைத்த மாநிதி!

தேவு மற்றறியேன், குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித்
திரிவனே

என்று, நம்மாழ்வாரே தமக்குத் தெய்வம் என்று போற்றியவர் மதுரகவியாழ்வார். கண்ணினுண் சிறுதாம்பு என்கிற பதினொரு பாசுரங்களை, தமது குருவான நம்மாழ்வாரைக் குறித்துப் பாடியவர்.

நம்மாழ்வார் பிறந்து 32 ஆண்டுகள் தான் இவ்வுலகிலே வாழ்ந்தார். அவர் ஸ்ரீவைகுண்டம் ஏகிய பின், அவருடைய பிரபந்தங்களைப் பரப்ப ஆசையோடு புறப்பட்டார் மதுரகவியாழ்வார். ஆழ்வாருடைய நூல்களையெல்லாம் ஒரு சிறு பல்லக்கிலே ஏற்றிக்கொண்டு போனார். சங்கப் புலவர்கள் வாழ்ந்த மதுரையை அடைந்தார். அங்கே, அப் புலவர்களிடம் அவற்றைக் காட்டியபோது, அவர்கள் படித்துப் பார்த்துவிட்டு, ''இவை என்ன பக்திப் பாடல்கள்; காதல் பாடல்கள் - ஏதோ ஆண் பாவனையாம், பெண் பாவனையாம்! இவற்றைச் சங்க கால புலவர்கள் ஏற்க மாட்டார்கள்'' என்று சொல்லிவிட்டனர்!



பிறகு, சங்க மரபுப்படி, ''ஆழ்வாரது பாசுரங்களை ஒரு பலகையிலே ஏற்றும்; நாங்கள் ஒரு பலகையிலே ஏறிக்கொள்கிறோம். சங்கப் பலகை எங்களை ஏற்கிறதா? நம்மாழ்வார் பாசுரங்களை ஏற்கிறதா என்று பார்ப்போம்'' என்று பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

மதுரகவியாழ்வார் ஒப்புக்கொண்டார். எந்தப் பாசுரத்தைச் சங்கப் பலகையிலே வைக்கலாம் என்று யோசித்தார். பிறகு திருவாய்மொழியில் இரண்டே வரிகளைத் தேர்வு செய்து ஓலையில் எழுதினார்.

'கண்ணன் கழலிணை நண்ணும்
மனமுடையீர்;
எண்ணும் திருநாமம் திண்ணம்
நாரணனே'

என்று எழுதி, அதைச் சங்கப் பலகையில் வைத்தார். 'கண்ணனுடைய திருவடிகளைப் பற்றுங்கள் போதும். எல்லா இன்பமும் கிட்டும்' என்று பொருள். சங்கப்

பலகை இந்த இரு வரிகளை ஏற்றுக் கொண்டு, மற்றையோரைத் தள்ளிவிட்ட தாம்!

அப்போதுதான் சங்கப் புலவர்கள் எல்லோரும் நம்மாழ்வாரின் பெருமையை உணர்ந்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒரு பாடலை, நம்மாழ்வாரைக் குறித்து எழுதியிருக்கிறார்கள். தனித்தனியே அவர்கள் எழுதிக்கொண்டு வந்த பாடல்களைப் படித்தபோது ஒரே வியப்பு! அத்தனையும் ஒரே பாடலாகவே இருந்தது:

சேமம் குருகையோ, செய்ய
திருப்பாற்கடலோ,
நாமம் பராங்குசமோ, நாரணமோ
தாமம் துளவமோ வகுளமோ
தோளும் இரண்டோ நாலோ
பெருமான் உனக்கு?

- என்ற அவ்வழகான பாடலால் 'இவர் ஆழ்வாரா அல்லது நாராயணனா?' என்று வியந்துபோற்றினர். மேலும்

வைத்த மாநிதி பெருமானைத் தொழுதால், தர்மத்தின் வழி நிற்றலாகிற மிகப் பெரிய செல்வத்தை, அவன் நமக்கு அருள்வான்!

ஓவாதுரை ஆயிர மாமறையின்
ஒரு சொற்பெறுமோ உலகிற்கவியே

என்ற பாடலால் 'உலகின் எந்தக் கவிதையை எடுத்துக்கொண்டாலும், அது நம்மாழ்வார் பாடிய ஒரு கவிதையின் ஒரு வரியில் உள்ள ஒரு சொல்லுக்குக்கூட ஈடாகாது' என்றும் போற்றினர்.


இந்த நிகழ்வு ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர் மதுரகவியாழ்வார். முன்னமேயே வடதேசம் சென்றார் என்றும், அங்கிருந்து பார்த்தபோது தெற்கே ஒரு பிரகாசமான ஜோதியைக் கண்டார் என்றும் அதைப் பின் தொடர்ந்து வந்து ஆழ்வார்த் திருநகரியை அடைந்தார் என்றும் பார்த்தோம். நம்மாழ்வாரைத் தரிசித்தவர், அவர் ஏதோ பிறந்தார், பாடினார், புறப்பட்டுவிட்டார் என்று இருந்துவிடாமல், முயற்சி எடுத்து அப்பாடல்களைப் பரப்பினாரே, அந்த முயற்சிதான் உயரிய தர்மம்.

திருக்கோளூர் ஸ்தல புராணமும் நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் சரிதை போலவே வியக்கத்தக்கதாக உள்ளது.

ஒருமுறை பார்வதி தேவியும் பரமசிவனும் ஏகாந்தத்தில் இருந்தபோது, குபேரன் அவர்களை வணங்கச் சென்றான். தாயான பார்வதி தேவியை தவறான நோக்கில் அவன் பார்த்தான் என்றும் அதனால் சபிக்கப்பட்டான் என்றும் புராணம் சொல்கிறது. ஒரு கண் இழந்து, மேனி விகாரமாகிப் போய், நவநிதிகளையும் இழந்தான், குபேரன். வருந்தி, தவறுக்கு மன்னிப்புக் கேட்டான். பார்வதிதேவி அவனுக்குப் பரிகாரம் சொன்னாள்.

''திருக்கோளூருக்குச் சென்று தாமிரபரணி ஆற்றிலே நீராடி, அங்கிருக்கக்கூடிய எம்பெருமானை வணங்குவாய்; உனக்கு நல்லது செய்வான்'' என்றாள்.

குபேரன் இந்தப் பட்டணத்துக்கு வந்தான். இங்கே சயனத் திருக்கோலத்தில் ஸேவை சாதிக்கின்ற எம்பெருமானை வணங்கினான். அப்போது அந்த எம்பெருமான், குபேரன் இழந்த ஒன்பது செல்வங்களுக்குள்ளே (நவநிதி)



திருக்கோளூர் ஸ்தல புராணமும் மதுரகவியாழ்வார் நம்மாழ்வார் சரிதை போலவே வியக்கத்தக்கது

ஒன்றை முதல் தவணையாக மீட்டுக் கொடுத்தான். மற்றதையும் பெற குபேரன் இந்த எம்பெருமானிடத் திலேயே சரணாகதி பண்ண, அவற்றை யெல்லாம் மரக்கால் கொண்டு மீண்டும் அவனுக்குப் படியளந்தார் இந்தப் பெருமான். ஆகவேதான் இவருக்கு வைத்த - மா - நிதி என்ற திருநாமம் வழங்குகிறது. வடமொழியில் நிக்ஷேப வித்தன் (மறைத்து வைக்கப்பட்ட செல்வமுடையவன்) என்று சொல்வார்கள்.

தன் ஒரு திருக்கையை திரு மேனிக்கு மேலே வைத்துக் கொண்டு, உலகத்திலே எங் கெங்கே செல்வம் இருக்கிறது என்பதை 'மை போட்டு', தன் உள் ளங்கையிலேயே பார்க்கிற திருக் கோலத்திலே எம்பெருமான் சயனித்திருக்கிறான். வேண்டிக் கேட்போருக்குப் படியளிப்பதற் காக, தம் தலைக்குக் கீழே மரக் காலையும் வைத்திருக்கிறான்!

மற்றொரு புராணமும் இத் தலம் குறித்து வழங்குகிறது: ஒரு முறை உலகிலே அதர்மம் பரவி தர்மம் தலைகுனிந்தது. உடனே தர்மம் இங்கே வந்து, இந்தப் பெருமானின் திருவடிகளிலே சரணாகதி பண்ணிற்று. இத்தலத் திலேயே தர்ம - அதர்மங்களுக் கிடையே சண்டையும் மூண் டது. வைத்த மாநிதி பெரு மானுடைய அருளோடு, அவன் கொடுத்த பலத்தாலே தர்மம் வென்றது. ஆகவே இந்தத் திருக்கோளூர் தர்ம க்ஷேத்திரம் என்றும் சொல்லலாம்.

ஆக, வைத்தமாநிதி பெருமானைத் தொழுதால், தர்மத்தின் வழி நிற்றலாகிற மிகப் பெரிய செல்வத்தை அவன் நமக்கு அருள்வான். மற்ற செல்வங்கள் வரும், போகும். ஆனால், தர்மத்தின் வழி நாம் நின்றோமேயானால், வைத்த மாநிதி என்ற செல்வம் நம்மை விட்டு என்றுமே வில காது. **அவனே** நிதிதான். அந்த நிதி நமக்குக் கிடைத்துவிட்டால், நாம் கேட்காமலே மற்றெல்லா நிதிகளும் நமக்குக் கிட்டும்.

(தேடுவோம்)

படங்கள்: **ஸ்ரீஹரி**

சித்திரம்: **வேதா**

அணி மாறிய சந்தீப் குமார்!

ச.ந.கண்ணன்

ஒலிம்பிக் தொடங்க இன்னும் சில நாட்களே இருக்கும் நிலையில், இந்திய ஒலிம்பிக் கவுன்சிலுக்கு இன்னொரு தர்ம சங்கடம் உண்டாகியிருக்கிறது. இவ்வளவு வருடங்களாக இந்திய மல்யுத்த வீரராக இருந்த சந்தீப் குமார், அடுத்த வாரம் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டியில், ஆஸ்திரேலிய அணி சார்பாகக் களம் இறங்க இருக்கிறார்.



பணி நிமித்தமாகவோ சிட்னியில் பெண் எடுத்து விட்டார் என்பதாலோ நேர்ந்த மாற்றம் அல்ல இது. பஞ்சாப் போலீஸ் கான்ஸ்டபிளாக இருந்த சந்தீப் குமாருக்கு, இந்திய விளையாட்டு ஆணையத்தில் நிலவிய அரசியல்சூழல்கள் பிடிக்கவில்லை. அவருடைய வாய்ப்புகளை யாரோ அபகரிக்கிறார்கள் என்கிற உறுத்தல். சமயம் பார்த்து மெல்போர்ன் மல்யுத்தக் கிளப்பைச் சேர்ந்த குதீப் பாஸி என்கிற இந்தியரின் கண்ணில் பட்டார் சந்தீப். உடனே பாஸி உதவியோடு ஆஸ்திரேலியாவுக்குப் பறந்தார். சந்தீப்குமாருக்கு ஆஸ்திரேலிய குடியுரிமையைப் பெற்றுத்தந்து, அவரை கங்காரு நாட்டின் குடிமகனாகவும் ஆக்கி விட்டார். இப்போது, 'ஐ ஆம் ஃப்ரம் ஆஸ்திரேலியா' என்று சந்தீப் தம்மை அடையாளப் படுத்திக் கொள்கிறார்.



ஆஸ்திரேலியா குடிமகனாகிவிட்டாலும், இன்று வரை ஆஸ்திரேலியாவில் சந்தீபுக்கு, தேவையான ஸ்பான்ஸர்கள் அகப்படவில்லை. ஆகவே, மெல்பர்னில் டாக்ஸி ஓட்டி பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்.

2004ல் நடந்த ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கு, இந்திய அணி சார்பாக 78 வீரர்கள், 14 விளையாட்டுகளில் பங்கேற்றார்கள். அவர்களில் ராஜ்யவர்தன் சிங் ரத்தோர் மட்டும், துப்பாக்கி சுடும் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்று இந்தியாவின் மானத்தைக் காத்தார். மிக மோசமான அனுபவமாக, பளு தூக்கும் போட்டியில் கலந்துகொண்ட பிரதிமா குமாரி, சனாமாச்சா சானு இருவரும்

ஊக்க மருந்து உட்கொண்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டார்கள். அரசிடமிருந்து ஊக்கத்தொகையும் ஊக்க வார்த்தை களும் கிடைக்காததால்தான் ஊக்க மருந்தை நாடுகிறார்களோ?

ஒரு கோடிக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட பெலாரஸ், சென்ற ஒலிம்பிக்கில் 14 பதக்கங்களைத் தட்டிச் சென்றது. இந்தியாவில் மட்டும் ஏன் இப்படி? இங்கு ஒவ்வொரு மாநிலத் தில் விளையாட்டுக்கு என்று ஒரு துறை உண்டு. தனி அமைச்சர்கள். தனி ஐ.ஏ.எஸ் அதிகாரிகள், வருடா வருடம் நிதி ஒதுக்கீடு வேறு. ஆனால், அது சரியானபடி பகிர்ந்து அளிக்கப்படு







கிறதா என்பது பெரிய கேள்வி. விளையாட்டு வீரர்களும் அவர்களது கோரிக்கைகளும் எப்போதும் அர சுக்கு இளப்பம்தான். சென்னையைத் தவிர ஒழுங்கான நீச்சல் குளம் இல்லா மல் தமிழக நீச்சல் வீராங்கனைகள் தவிக்கின்றனர். அவர்களுக்கு இன்று வரை வேண்டிய வசதி வாய்ப்புகள் நிறைவேற்றித் தரப்படவில்லை. அத் லெடிக் வீரர்களுக்குச் சரியான மைதா னங்கள் இல்லை.

கிரிக்கெட், டென்னிஸ் இரண்டுமே தனியார்வசம் உள்ளன. இந்த இரு விளையாட்டுகளிலும் உலகத் தரமான வீரர்கள் உருவாகிறார்கள். ஆனால், அரசுக் கட்டுப்பாட்டில் இருந்த ஹாக் கிக்கு நேர்ந்த கதியைத்தான் எல்லோ ரும் பார்த்தோமே! லஞ்ச லாவண்யங் களால் முதல்முறையாக ஒலிம்பிக் ஸ்டேடியத்தில் கால் வைக்க முடியாத அவலம். ஒலிம்பிக்கில் தங்கம் வென் றால், ஒரு கோடி பரிசு கொடுக்கும் அரசு, தேசிய மற்றும் மாநில அள விலான போட்டிகளில் ஜெயித்தால் திரும் பிக்கூடப் பார்ப்ப தில்லை! ஜூனியர் வீரர்கள் சர்வதேச அளவில் சாதித்துக் காட்டினாலும் அலட்சியப் பார்வைதான். 'ஏழை நாடு'களில் கூட இந்த நிலைமை கிடையாது. இந்தியாவுக்கு கார்ல் லூயிஸ் களும் செர்ஜி புப்காக்களும் கிடைப்பார்கள் என்று கனவில்கூட எதிர்பார்க்க முடி யாது.

ஒரு மத்திய சிறை வளாகத்தில் பட்டமளிப்பு விழா நடைபெற இருப்பது ஆசியாவிலேயே இதுதான் முதல் முறை. அதுவும், பட்டம் பெற இருப்பவர்கள் அனைவரும் ஆயுள் தண்டனைக் கைதிகள்.

பாளையங்கோட்டை மத்திய சிறை ஆயுள் கைதிகள் பதினைந்து பேரும் முதுகலைப் பட்டம் பெற இருக்கிறார்கள். தொலைதூர அஞ்சல் வழிக் கல்வி வாயிலாக, அனைவருக்கும் பட்டம் தரவுள்ளது நெல்லை மனோன் மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம்.

"மாவட்ட நிர்வாகம் மூலமாக, வளர் கல்வித் திட்டம் சிறைக்குள் அடியெடுத்து வைத்தது. கைரேகை



✱ பட்டதாரி பறவைகள்...

மட்டுமே வைக்கத் தெரிந்த கைதிகள் பலரும், தங்களை ஆர்வமுடன் அந்தத் திட்டத்தில் இணைத்துக் கொண்டனர். விளைவு இன்று முதுகலை பட்டதாரிகள். 'என்னலே... உள்ளே கம்பி எண்ண போனப்ப, நீ வெறும் கைநாட்டு... இப்ப என்னடான்னா டீக்கடை பெஞ்ச்சல குந்திக்கிட்டு, ஒரு எழுத்து விடாம ஒரு மணி நேரமா பேப்பரைப் படிச்சிட்டு இருக்குதீரு...' என்று ஊர்க்காரர்கள், நையாண்டி செய்வதாக பரோல் விடுப்பில் சென்றுவரும் கைதிகள் பலரும் கூறுவர்!"- சிறை நல அலுவலர் ஆறுமுகமும், சிறைக் காவலர் செல்வராஜும் பெருமைப்படுகின்றனர்.

பாளையங்கோட்டை மத்திய சிறைக்குள் இயங்கி வரும் நூலகத்தில், ஆயிரத்து ஐந்நூறு புத்தகங்கள் உள்ளன. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அந்தப் புத்தகங்களை மாற்றி, சுழற்சி முறையில் அனுப்பி வைக்கிறது மாவட்ட மைய நூலகம்.

கே.ஆர்.சுப்பிரமணியன், இங்கு பயின்ற எம்.ஏ. தமிழ், அவரை கட்டுரை களையும் புதுக்கவிதைகளையும் எழுதத் தூண்டியுள்ளது. 'மானுட இம்சைகளால் / கடல்வாழ் உயிரினங்கள் / உகுத்த கண்ணீரினால் / கரிக்கிறது கடல் நீர்' என்றும், 'ஊழலின் இலக்கணம் / செல்லாக்காசும் செல்லுபடியாகும்' போன்ற சின்னச் சின்ன புதுக்கவிதைகளாலும், சமூகப் பார்வை கொண்ட கட்டுரைகளாலும் நிரம்பியுள்ளது அவரது நோட்டு.

நன்னடத்தை விதிகளின்படியும், எம்.ஃபில்.ஆய்வுக்காகவும் சிறையிலிருந்து ஒரு மாத விடுப்பில், தங்கள் ஊருக்கு வந்திருந்த இரண்டு நபர்களைச் சந்தித்தோம்.

நெல்லை டவுன். ஜாமியா பள்ளிவாசல் தெரு. மில்லத் இஸ்மாயில் வீடு எங்கிருக்கிறது எனக் கேட்டால், 'சோஷியல் சர்வீஸ் மில்லத் வீடுதானே?' என்று அனைவரும் வழிகாட்டுகின்றனர். மில்லத் இஸ்மாயில் சமூகசேவைப் பணிகளில் அத்தனை பிரபலம். பிரபல நாளிதழில் முதல் பக்கச் செய்திகளில்



✱ அறிவுடைநம்பி



✱ ஆறுமுகம்



~~சிறைப்~~ பட்டதாரிப் பறவைகள்!

இடம்பெறுமளவுக்கு!

"ஒரு கொடுஞ்செயல் காரணமாக ஆயுள் தண்டனைக் கைதி நான். மனைவி, ரெண்டு பெண் குழந்தைகள். என் குடும்பத்துச் செலவுகளை என் நண்பர்களே கவனித்துக்கொண்டு வருகின்றனர். மத்திய சிறை நூலகம்தான், என் மனத்தைப் பக்குவப்படுத்தியது. வாசிப்பு ஆர்வம் மேலிட, எம்.ஏ. வரலாறு தேர்ச்சி பெற்றேன். தற்போது 'இஸ்லாமியக் குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள்' எனும் தலைப்பில் எம்.ஃபில்" என்கிறார் மில்லத் இஸ்மாயில்.

"**நா**ன் படிச்சது எட்டாங்கிளாஸ்தான். பங்காளிங்க நெறைஞ்ச குடும்பம். சொத்தும் நெறைய. அந்தத் தகராறுல என்னோட அப்பனை, என்னோட சித்தப்பனே வெட்டிக் கொன்னுட்டான். அடுத்த பத்தே நாள்ல என்னோட சித்தப்பனை, நான் வெட்டிக் கொன்னுட்டேன். என் சம்சாரம் நாங்குனேரி பேரூராட்சியில பதிமூனாவது வார்டு மெம்பர். எட்டாவது படிச்ச ஆளு, ஜெயிலுக்குப் போயி எம்.ஏ. படிச்சு, இப்ப எம்.ஃபில்லும் படிக்கறான்னு ஊருக்குள்ள பேசிக்கறாங்க. அதுவே மனசுக்குச் சந்தோஷமா இருக்கு" எனச் சொல்கிறார் நாங்குனேரி பெருமாள்.

அஞ்சல் வழிக்கல்வி பயிலும் இதர மாணவர்கள் போலவே, செமினார் வகுப்புகள், தேர்வுகள் ஆகியன சிறைக்குள்ளேயே இவர்களுக்கும் நடத்தப்பட்டன. இவை அனைத்துக்கும் துணை நின்று உதவியது மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம்.

"சிறைக் கைதிகளுக்குப் பட்டமளிப்பு கறுப்பு அங்கி அணிவித்து அவர்களிடம் நேரடியாகவே சான்றிதழ் அளிப்பது சிறந்த மாற்றமாக அமையுமெனத் தோன்றியது. இதற்கென தமிழக சிறைத்துறை ஏ.டி.ஜி.பி. ஆர்.நடராஜ் பெரு முயற்சி எடுத்துக் கொண்டார்" எனக் கூறுகிறார் பாளையங்கோட்டை மத்திய சிறை கண்காணிப்பாளர் (பொறுப்பு) அறிவுடை நம்பி.

செய்தியும், சித்திரங்களும்:
ஸ்ரீரங்கம் திருநாவு



'ஸாரி' கேட்பதுதான் 'சரி!'

அன்றைக்கு, விஜய்க்கு ஷூட்டிங் ராத்திரி பத்து மணிக்குதான் முடிஞ்சது. அவன் வீட்டுக்கு வர்றப்போ பதினொரு மணி ஆயிடுச்சு. வந்தவன் டிரெஸ் ஸைக்கூட மாத்தலை. ஃபோன் அடிச்சது. விஜய் தான் எடுத்துப் பேசினான். மறுமுனையில் யாரோ ஒரு பொண்ணு பேசிச்சாம்.

''சார்! நான் சென்னை கேன்ஸர் இன்ஸ்டிடியூட்ல இருந்து பேசறேன். என் மகளுக்கு அஞ்சு வயசு. தொண்டைல கேன்ஸர். பிழைக்காதுன்னு டாக்டர் சொல்லிட்டாங்க. இந்த ஹாஸ்பிடல்ல ஒரு மாசமா இருக்கோம். என் பொண்ணு அடிக்கடி, 'விஜய் அங்கிளைப் பாக்கணும், பாக்கணும்'னு சொல்லிக்கிட்டு இருக்கா. சரியா சாப்பிட மாட்டேங்கறா. டாக்டர்ல ருந்து வார்டு கூட்டுற ஆயா வரைக்கும் சொல்லிட்டாங்க. வேற வழியில்லாம யார் யார்கிட்டயோ பேசி, உங்க ஃபோன் நம்ப ரைக் கஷ்டப்பட்டு வாங்கிட்டேன். தயவு செஞ்சு, ஒரே ஒரு தடவை நீங்க வந்து, என் மகளைப் பாக்கணும் சார். அவளுக்கு ரொம்பத் தெம்பா இருக்கும்.''

இப்படியெல்லாம் பேசியிருக்கு அந்தப் பொண்ணு. இதையெல்லாம் அப்புறமாத்தான் விஜய் என்கிட்ட சொன்னான். ஃபோனை வெச்சதும் உடனே காரை எடுத்துக்கிட்டுக் கிளம்பிட்டான். என்ன, ஏதுன்னு எங்க யார்கிட்டயும் சொல்லலை.

அந்த நடுராத்திரில போய் அந்தக் குழந்தையைப் பாத்துட்டு வந்தான். நாங்களே கேன்ஸருக்கு ஒரு குழந்தையைப் பறிக் கொடுத்திருந்தோம் இல்லியா? அதனால அந்த வேதனை விஜய்க்கு ரொம்ப நல்லாவே தெரியும்.

இந்த மாதிரி ஒருத்தர் இல்ல; நிறையபேர் எங்கிட்ட சொல்லியிருக்காங்க. அது என்னவோ விஜய்கிட்ட ஓர் ஈர்ப்பு இருக்கத்தான் செய்யுது.

வீட்ல என் கணவரும் விஜய்யும் பேசிக்கிட்டு இருப்பாங்க. மெல்ல ரெண்டு பேரோட குரலும் உயர ஆரம்பிக்கும். ஓஹோ இன்னிக்கு ரெண்டுபேருக்கும் ஆர்க்யூமெண்ட் சூடு பிடிக்கப் போகுதுன்னு நான் நினைச்சுக்குவேன். இப்பிடி ரெண்டுபேரும் வாதம் பண்றதுகூட சொந்தக் காரணத்துக்காக இருக்காது. புதுசா விஜய் நடிக்கப் போற படத்தோடு கதை, இல்லன்னா படத்தோட லைன் சம்பந்தப் பட்டதா இருக்கும். அவருக்குப் பிடிச்சது விஜய்க்குப் பிடிச்சிருக்காது; இல்லன்னா விஜய்க்குப் பிடிச்சது அவருக்குப் பிடிச்சிருக்காது.

நடிகை ஜெயசித்ரா மேடம் அப்பப்போ லயோலா காலேஜுக்கு வாக்கிங் வருவாங்க. அவங்க விஜய்யோட ஒரே ஒரு படத்துலதான் நடிச்சிருந்தாங்க. என் கணவர் டைரக்ட் பண்ணின ஒரு படத்துலயும் நடிச்சிருக்காங்க. ரொம்ப வருஷமாவே அவங்களுக்கு எங்களைத் தெரியும்.

ஒரு நாள் லயோலா காலேஜ்ல வாக்கிங் வந்தப்போ அவங்க, என்கிட்ட விஜய்யைப் பத்திப் பேசினாங்க. 'உங்க புள்ளை ரொம்ப அருமையான புள்ளை. இந்த மாதிரி புள்ளை பெற கொடுத்து வெச்சிருக்கணும்...' அப்படி இப்படினு புகழ்ந்து தள்ளிக்கிட்டே இருந்தாங்க. நான் 'அப்படியா?'ன்னு கேட்டுக்கிட்டே இருந்தேன். 'எல்லாம் கடவுளோட கிருபை மேடம்'னு சொல்லிட்டு வீட்டுக்கு வந்தேன்.

விஜய் டைனிங் டேபிள்ல உட்கார்ந்திருந்தான். நான் அவன்கிட்ட ரொம்ப கூலா சொன்னேன். 'இன்னிக்கு ஜெயசித்ரா மேடத்தைப் பார்த்தேன். அவங்க உன்னை ரொம்பப் பெருமையாப் பேசினாங்க. உனக்குக் கோபம் வந்தா; வீட்டுல உடையற பொருட்களோட லிஸ்ட் எனக்குத்தானே தெரியும். அவங்களுக்குத் தெரியாதுல்ல'ன்னேன். உடனே விஜய் அடக்க முடியாம சிரிச்சுட்டான்.

விஜய்யைப் பாத்தா ரொம்ப மேலோட்டமா இருக்கற மாதிரி தெரியும். ஆனா, அவன் ரொம்ப டீப். ஒவ்வொரு விஷயத்தையும் நுணுக்கமா வாட்ச் பண்ணுவான்; கொஞ்சமாத்தான் பேசுவான். அதனாலதான் அவனால கோபத்தைக் கட்டுக்குள்ள வெச்சிருக்க முடியுது.





ஷோபா சந்திரசேகர்

அவன் ஃபிலிம் இண்டஸ்ட்ரியில இருக்கறதனாலயோ என்னவோ, விஜய் எந்தப் படத்தையும் விமர்சிக்க மாட்டான்; எந்த நடிகர் நடிகையைப் பற்றியும் குறை சொல்லவே மாட்டான்.

அவன் மனைவி சங்கீதாவும் அப்படித் தான். விஜய்யோட படத்தைப் பாத்துக் கூடக் கருத்துச் சொல்லாது. ரொம்ப சுமாரான படத்தைக்கூட 'நல்லாருக்கு'ன்னு சொல்லும். இல்லன்னா 'ஓ.கே., பாக்கலாம்'னு சொல்லும். மத்தவங்க காயப் படற மாதிரி ஒரு வார்த்தை சொல்லாது. ஆனா நான் அப்படி இல்ல. ஒரு படம் எனக்குப் பிடிக்கலைன்னா, மண்டைல அடிச்ச மாதிரி, என் கருத்தைச் சொல்லிடுவேன்.

விஜய்கிட்ட நான் கத்துக்க வேண்டியது நிறைய இருக்கு. நிதானம், அதிர்ந்து பேசாம மெதுவாப் பேசறது. பேசறதுக்கு முன்னாடி யோசிச்சிட்டுப் பேசறது இன்னும் நிறைய...

நாம ஏதாவது தப்புப் பண்ணிட்டா மத்தவங்ககிட்ட, 'சாரி' கேக்கறோம். ஆனா, புள்ளைங்ககிட்ட கேக்கறது இல்ல. ஏன்? நாம தப்புப் பண்ணினா, நம்ம பிள்ளைகள்கிட்டயும் 'சாரி' கேக்கணும். அப்பதான் அது சரி. அப்பதான் நம்மகிட்டருந்து முழுசா ஈகோ போயிடுச்சுன்னு அர்த்தம்- இது எனக்குப் புரிஞ்சதுக்குக்கூட விஜய் தான் காரணம்.எப்படி?



என்ன பரிசு?

- சரியான விடைகளுடன் வரும் முதல் 10 கூப்பன்களுக்கு விஜய் படம் பொறித்த டி-ஷர்ட்...
- குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு விஜய் கையெழுத்திட்ட ஸ்டில்ஸ்...

(தொடரும்)

எழுத்து வடிவம்: **பாலு சத்யா**



ஹலோ வாசகர்களே!

ஷோபா சந்திரசேகர் எழுதற, 'என் செல்ல தளபதி' தொடர் அசத்தலா இருக்குதானே? நீங்களும் சும்மா அசத்தறீங்க இல்ல. போன வாரப் போட்டிக்கு மளமளன்னு என்ட்ரீஸ் குவியுது!

- விஜய் வின்னர்ஸ் - 10 தொடர் சங்கிலிப் போட்டிக்கான முடிவும், இந்த வார கூப்பனும் பக்கம்-80ல் உள்ளன.
- பதிமூனு வாரமும் அதிரடிப் போட்டி தொடரப் போகுது. ஒவ்வொரு வாரமும் பரிசு! பதிமூன்றாவது வாரம் பம்பர் போட்டி, வியப்பான மெகா பரிசுகள்!
- நீங்க செய்ய வேண்டியது ரொம்ப சிம்பிள்! ஒவ்வொரு வாரமும் ஐந்து கேள்விகள் கேட்போம். அதுல ஒண்ணு தொடரி லிருந்து வரும். சரியான விடைகளை 'டிக்' அடிச்சு கூப்பனையும் நிரப்பி, அந்தப் பக்கத்தைக் கத்தரிச்சு அனுப்பணும்.
- ஒருவரே எத்தனை கூப்பன் வேணும் னாலும் அனுப்பலாம். ஆனா ஜெராக்ஸ் கூடாது. எவ்வளவு வேகமா அனுப்பறீங் களோ அந்தளவுக்குப் பரிசு பெற சான்ஸ் இருக்கு!
- வெய்ட்! பதிமூன்றாவது வார பம்பர் போட்டியில நீங்க கலந்துக்கணும்னா 'விஜய்' ஸ்டில் போட்ட 'தொடர் சங்கிலி கூப்பனை' பத்திரமா சேகரிக்கணும். (இந்த வாரம்-79ஆம் பக்கம் இருக்கு)
- பதிமூன்றாவது வார போட்டியோடு தொடர் சங்கிலி கூப்பன்கள் அனைத் தையும் இணைச்சு அனுப்பணும். ஒரு கூப்பனை 'மிஸ்' பண்ணினாலும், நீங்க அந்த வியப்பான பரிசுகளை 'மிஸ்' பண்ணிடுவீங்க.
- இந்த பதிமூன்று வாரத்தில் உங்களுக்கு ஒரு இதழ் கிடைக்காமப் போனாலும், உடனே எங்களுக்கு ஃபோன் பண்ணுங்க. உங்க நகரத்து ஏஜென்ட் மூலமா கிடைக்க உதவி செய்யறோம்.
  ஸோ, டயல் : 4343 8888
- போட்டி குறித்த முடிவுகளில் ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.



விஜய் வின்னர்ஸ்-10

தொடர் சங்கிலிப் போட்டி பரிசு பெற்றோர் விவரம்...

1. வ.விக்னேஷ், திருச்சி 2. ஜி.சரண்யா, தருமபுரி 3. கே.ரவி, ஈரோடு 4. எம்.அக்ஷரா, கும்பகோணம் 5. ஜே.ஆர்.ஏ. சத்தார், கடையநல்லூர் 6. ஆர்.முத்துமாணிக்கம், திருவண்ணாமலை 7. எம்.கலைவாணி, திருவண்ணாமலை 8. க.ராஜேஸ்வரி கண்ணன், நெய்வேலி 9. வி.ஸ்ரீராம், ஸ்ரீரங்கம் 10. சுகன்யா சுரேஷ், திருச்சி.

* *முதல் பத்து கூப்பன்களை அனுப்பிய மேற்கண்டோருக்கு விஜய் படம் பொறித்த டி-ஷர்ட் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.*
* *குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு விஜய் கையெழுத்திட்ட ஸ்டில்ஸ் அனுப்பி வைக்கப்படும்.*

இந்த வாரக் கேள்விகள்!

கடைசி தேதி : 14.08.2008

1. விஜய் நடுராத்திரியில் எங்கு போனார்...?
   - ☐ கேன்சர் இன்ஸ்டிடியூட்
   - ☐ அப்பல்லோ மருத்துவமனை
2. விஜய்யைப் பாராட்டிய மூத்த நடிகை?
   - ☐ ஜெயசித்ரா ☐ மனோரமா
3. விஜய்-சந்திரசேகர் விவாதம் எப்படி இருக்கும்?
   - ☐ சத்தமாக ☐ அமைதியாக
4. விஜய்க்கு எத்தனை குழந்தைகள்?
   - ☐ இரண்டு ☐ மூன்று
5. 'குருவி' படத்தில் விஜய்யின் தந்தையாக நடித்தவர்?
   - ☐ மணிவண்ணன் ☐ ராதா ரவி

பெயர் : .... வயது : ....

முகவரி : ....

....

செல் : .... இ.மெயில் : ....

போட்டி கூப்பன் அனுப்ப வேண்டிய முகவரி :

விஜய் வின்னர்ஸ் போட்டி - 7,

கல்கி, 47-NP, ஜவாஹர்லால் நேரு ரோடு,

ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032



* கும்பாபிஷேகத்தில் வி.கிருஷ்ணமூர்த்தி, வி.வைத்தியநாதன், திருமதி வைத்தியநாதன்

கருவேலியில்

கும்பகோணத்திலிருந்து கருவேலி நோக்கி சாலை வழியே பயணம் செய்கிற போது, எதிர்ப்புறத்திலிருந்து, ஐந்து நிமிடத்துக்கொரு மடாடார் வேன் கடந்து சென்றபடியிருக்கிறது. ஒவ்வொரு வேனிலும் பூத்த பனி மலர்களைப் போல் பள்ளிக் குழந்தைகள். ஒவ்வொரு குழந்தையின் நெற்றியிலும் பளிச்சென்று துலங்கும் திருநீறு!

நாச்சியார் கோயிலைக் கடந்து பூந்தோட்டம் நோக்கித் திரும்ப, அரசலாறு கூடவே ஓடி வர, சற்றைக்கெல்லாம் வந்துவிடுகிறது கருவேலி கிராமம்!

சாரி சாரியாக மக்கள், புதுசு உடுத்தி, பூச்சூடி, நடந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். சர்வாங்கசுந்தரி உடனுறை சற்குணேசுவரர் ஆலய கும்பாபிஷேகத்துக்குத்தான்!

யாகசாலையில் முந்தைய தினங்களில் பூர்வாங்க ஹோம-யாகங்கள் நடந்து முடிந்திருக்கின்றன. வெகு சிரத்தையாக நால்வேதங்களும் ஓதி, திருமுறை இசைத்து, மங்கள வாத்தியம் முழங்க, கலச பூஜைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஜூலை 14, காலை ஒன்பது மணிக்கு, குறித்த முஹூர்த்தத்தில் பூர்ணாஹுதி முடிந்து ராஜகோபுரத்துக்கு விமரிசையாக மஹா கும்பாபிஷேகம்! நீல வானப் பின்னணியில் வெண்பூச்சுடன் மூன்று நிலை கோபுரம் நம் மனம் குவியச் செய்ய, கலசங்களின் மேல் விரிந்து நிற்கும் அழகிய குடையின் வண்ணங்கள் மின்ன, குஞ்சங்கள் காற்றில் இலேசாக அசைகின்றன.

புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் விநாயகர், வள்ளி - தெய்வானை ஸமேத முருகன் சன்னிதிகளிலும் அபிஷேகமும் ஆராதனையும், அர்ச்சனையும் நடக்கின்றன.

கருவேலி கிராமத்தில் புதர் மண்டிக்

கும்பாபிஷேகம்

சீதாரவி

கிடந்த கோயிலை சீர் செய்து கும்பாபிஷேகம் செய்தனர் 1997ல். இவ்வூர் மக்கள் கேட்டுக் கொண்டதன் பேரில், வி.கிருஷ்ணமூர்த்தி (செயில், மாருதி உத்யோக், பி.எச்.ஈ.எல். புகழ் கிருஷ்ணமூர்த்திதான்), வி.வைத்யநாதன் (இவர் கல்கி நிறுவன சேர்மன்) சகோதரர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு நிதி திரட்டி அதனை கோலாகலமாக நடத்தினார்கள். அதன் பிறகு கோயில் அழகாக, தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு, படிப்படியாக மேம்பாடுகள் கண்டுள்ளது. சலவைக் கல் தரை, வடநாட்டுப் பாணியில் ஆஞ்சனேயர், துர்கை, உறுத்தாத குழல் விளக்குகள் என்று அவசியமான நவீனங்களைச் சேர்த்த போதிலும் கோயிலின் பிராசீன அம்சங்களை மாற்றாமல் பாதுகாத்திருக்கிறார்கள்.

மூலவர் எளிய அலங்காரத்தில் அருள்பாலிக்கிறார். லிங்கத் திருமேனியின் உச்சியில் விசேஷமான ஒன்பது தள மஹாவில்வ தளங்கள் - கோயில் நந்தனவனத்திலேயே இந்த மரம் இருக்கிறது.

ஸர்வாங்கசுந்தரி மாம்பழ வர்ணத்தில் அரக்கு கரை கொண்ட பட்டுடுத்தி அழகும் அமைதியும் ததும்ப நிற்கிறாள். கிரீடம் சார்த்தாத சடைமுடி உயர்ந்து நிற்க, தீக்ஷண்யம் மிக்க கண்கள் கருணை பொழிகின்றன.

கருவேலி கோவிலின் அறங்காவலர் குழுவும், அறநிலையத்துறையும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட கைங்கர்ய சபையும் இணைந்து ராஜகோபுர கும்பாபிஷேகத்தை நடத்தியுள்ளனர். வைதீக காரியங்களில் அவர்களது அர்ப்பணிப்பு தெரிகிறது; ஏற்பாடுகளிலும் விருந்தோம்பலிலும் உழைப்பு தெரிகிறது. திருப்பணிகள் கணபதி ஸ்தபதியின் தலைமையில். பூஜை, யாகங்களுக்கு ராமநாத சிவாச்சார்யாரும் நாகராஜ குருக்களும் பொறுப்பு.

மக்கள் பரவசத்தில் கரங்களைத் தலைக்குமேல் தூக்கித் தொழுகிறார்கள்; அபிஷேக தீர்த்தம் தங்கள் மேல் விழுவதை சிலிர்ப்புடன் ஏற்கிறார்கள். திருநீறு விநியோகத்தின்போது உள்ளங்கைகளைக் குழித்து நீட்டி பவ்யமாகப் பெற்று, பக்தியோடு நெற்றியில் அணிகிறார்கள். கையில் தங்கும் திருநீறை பத்திரமாகத் துண்டுக் காகிதத்தில் மடித்து பத்திரப் படுத்துகிறார்கள்! 'மந்திரமாவது நீறு' என்று முந்தைய நாள் ஓதுவாமூர்த்தி கணீரென்று பாடியது நினைவுக்கு வருகிறது - கூடவே, வழிநெடுகப் பார்த்த பள்ளிக் குழந்தைகளின் நெற்றியில் கண்ட திருநீறும் ஞாபக அடுக்கிலிருந்து எட்டிப் பார்க்கிறது!



ஏழையின் சிரிப்பில் 'மின்சாரம்'!

மாண்புமிகு தமிழக மின்சாரத்துறை அமைச்சர் ஆற்காடு வீராசாமி, சமீபத்தில் தமிழக மக்களின் வயிற்றில் பாலை வார்ப்பதுபோல 'அதிகாரபூர்வ மின் வெட்டு இனிமேல் இருக்கும்' என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

இந்நிலையில், அவர் எப்படி பவர் கட்டை சமாளிக்கிறார் என்று தெரிந்து கொள்ள அவருடைய அதிபிரம்மாண்ட இல்லத்துக்கு ஒரு **கற்பனை விஜயம்** செய்தோம். நாம் விஷயத்தைச் சொன் னதும், அவரே தம்முடைய அன்றாடப் பணிகளை லிஸ்ட் போட்டுக் கொடுத்து விட்டார்.

காலை:

6.00: எலக்ட்ரிக் டூத் பிரஷ்ஷால் மாத்தி ரமே பல் துலக்குகிறேன்.

6.30: ஏ.ஸி. போட்டுக்கொண்டு அறை யில் அமர்ந்து, ஒரு மணி நேரமாவது யோகாசனம் செய்வது அபரிமிதமான சந் தோஷம் தரும் அனுபவம்.

7.00: எலக்ட்ரிக் கெட்டிலில் நீர் கொதிக்க வைத்துத் தயாரித்த ஏலக்காய் தேநீருக்கு ஈடு இணையே இல்லை.

7.30: கால வேகத்துக்கு ஈடுகொடுக்கும் விதமாக எலக்டரிக் ரேசருக்கு மாறிவிட் டேன். என்ன, மழுமழுவென்று இருக் கிறதா முகம்?

8.00: வெந்நீரில் குளித்தால்தான் இத மாக இருக்கிறது. வாட்டர் ஹீட்டர் சூப்பர் ஃபாஸ்டாக வேலை செய்கிறது. எலக்ட்ரிக் ட்ரையர் இருந்தாலும்கூட அதைப் பயன் படுத்தும் அளவுக்கு சிகை அதிர்ஷ்டம் எனக்கில்லை.

11.00: மின்வெட்டு பற்றியோ அல்லது காடு வெட்டி குரு பற்றியோ, செய்தியா ளர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லியே தொண்டை வறண்டு போகும் சமயத்தில் தொண்டையைக் கொஞ்சம் நனைத்துக்கொள்ள, ஃப்ரிட்ஜில் வைத்த குளிர்பானங்கள் கைகொடுக்கின்றன.

நண்பகல்:


12.00: அன்றைய செய்திகளை, கலைஞர் தொலைக்காட்சியில் பார்த்துத் தெரிந்து கொள்கிறேன். அக்கம் பக்கத்துச் செய்தி களுக்காக அவ்வப்போது ஐபிஎன், என்டிடீவி, டைம்ஸ் நவ் போன்ற தொலைக்காட்சி சேனல்களையும் பார்த்து விடுகிறேன்.

மதியம்:

1.00: எலக்ட்ரிக் குக்கரில் வேகவைக் கப்பட்ட சாதம்தான் மல்லிகைப்பூ போன்று மெதுமெதுவென்று இருக்கிறது.

2.00: அறிவாலயத்தில் எனக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் நிரந்தரப் பொரு ளாளர் அறையில், கணக்கு வழக்குகள் கவனிப்பு. அப்பாடி! ஏ.ஸி. போட்டிருந் தாலும் வியர்க்குது.

3.30: மைக்ரோவேவ் அவனில் டோஸ்ட் செய்யப்பட்ட நான்கைந்து பிரெட் துண்டுகளை ஜாம் வைத்துச் சாப்பிட்டால்தான் ஜாம் ஜாமென்று நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடி கிறது.



மாலை:

4.00: அறிவாலயத்திலேயே கம்ப்யூட்டர், இன்டர்நெட் இணைப்பு இருப்பதால் வெப்சைட் மூலமாகவே தினசரி இதழ்களைப் பார்த்துவிடுகிறேன்.

6.00: எதிர்க்கட்சிகள் அல்லது முன்னாள் கூட்டணிக் கட்சியினர் அவரவர் பொதுக்குழு, செயற்குழு, சந்துமுனைப் பொதுக் கூட்டங்களில் பேசிய பேச்சுகளை, டி.வி.டி. ட்ரைவில் போட்டுப் பார்த்தும் கேட்டும் குறிப்புகள் எடுக்கிறேன்.

இரவு:

7.00: தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் தொடர் கொண்டாட்டமாக குழல் விளக்கொளியில் வாலிபால் மேட்ச். தலைமை தாங்கும்போது, தெருக்கம்பங்களிலிருந்து மின்சாரம் இழுக்கும் எதிர்க்கட்சியினரை மறக்காமல் சாடுகிறேன்.

10.00: ஏ.ஸி.யைப் போட்டுக்கொண்டு தூங்கப் போய்விடுவேன். அறையில் இருக்கும் மியூஸிக் சிஸ்டத்தில் இருந்து மெல்லிய பாடல் ஒலித்துக் கொண்டிருக்கும்.

நான் நினைத்தால் விறகை வைத்து வெந்நீர் போட்டுக்கொள்ளலாம், மண்ணெண்ணெய் அடுப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இட்லி சுட இட்லிப் பானையையே பயன்படுத்தலாம். அறிக்கையை எழுத பேனா, பேப்பரே பயன்படுத்தலாம், இரண்டு ரூபாய் கொடுத்து தமிழ் முரசு வாங்கலாம். ஆனால், மின்சாரத்தைத் தவிர்ப்பதற்காக இதையெல்லாம் நான் பயன்படுத்த ஆரம்பித்தால், சாதாரண பொதுமக்களுக்கும் ஏழைகளுக்கும் இவை கிடைக்காமல் பற்றாக்குறை ஏற்பட்டு விடாதா! கழகம், கண்ணியத்துக்குரியது! அதனால்தான் எங்களைப் போல் ஏழைப் பங்காளிகள் வீடுகளுக்கு பவர்கட் இல்லை. அப்படியே இருந்தாலும் சமாளிக்க ஜென்ஸெட்கள் தாராளமாக வழங்கப்பட்டுள்ளன.

கொம்பன்



கிரேஸியைக் கேளுங்கள்

காதல்

● **எஸ்.வி.பார்த்தசாரதி, திருச்சி**

நீங்கள் ஏன் ஒரு சரித்திர நாவல் எழுதக் கூடாது...?

சரித்திரத்தில் நான் ஒரு சிற்றறிவரசன். எனக்குத் தெரிந்த கி.மு.-கி.பி. எல்லாம் 'கிரேஸிக்கு முன் - கிரேஸிக்குப் பின்தான்'. ஓரளவு தெரிந்த நகைச்சுவையே பாதி சமயம், புற முதுகு காட்டி ஓடிவிடுகிறது. சரித்திர அரசனை நம்பி, காமெடி புருஷனைக் கைவிட நான் இன்னும் தயாராகவில்லை. 'கே.பி.டி. சிரிப்பு ராஜன்' என்ற சிரித்திர நகைச்சுவை நாவலை 'ஜூனியர் விகடனி'ல் எழுதினேன். சரித்திரக் கதைக்கு உரிய சகல சாமுத்ரிகா லக்ஷணங்களும் அதற்கு உண்டு. சரித்திர ஆதாரம் என்ற ஸல்லாத் துணி ஆடைதான் அதில் மிஸ்ஸிங்!

● **ரா.பிரசன்னா, மதுரை**

ஒரு யானைக்கு குறுக்கே ஒரு பூனை போனால்... சகுனம் யாருக்குச் சரியில்லை? யானைக்கா... இல்லை பூனைக்கா...?

வழக்கமாக யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பார்கள். குறுக்கே போகப் போகும் பூனைக்கு யாராவது கழுத்தில் மணி கட்டியிருந்தால், 'என்னடா இது, நமது மணியோசைக்கு முன் புதுசாக வேறு ஒரு மணியோசை கேட்கிறதே' என்ற ஆவலில் அதைப் பார்க்க யானை வேகமாக ஓடலாம். அதனால் பூனை தாண்டுவதற்குள், யானை பூனைக்குக் குறுக்கே போகலாம். வேடிக்கை பார்க்க வேகமாக ஓடிய யானைக்கும் அடி சறுக்கலாம். அதனால் காலை ஒடித்துக் கொண்ட யானைக்கும் சகுனம் சரியில்லை. அடி சறுக்கிய யானையின் அடியில் மாட்டிக்கொண்டு நசுங்கிய பூனைக்கும் சகுனம் சரியில்லை!

● **வைஜயந்தி, கோயம்புத்தூர்**

நடிகர் திலகத்தின் 'நவராத்திரி', உலக நாயகனின் 'தசாவதாரம்'- உங்கள் பார்வையில்...?

இதற்கும் மேல் ஒரு சாதனை உண்டா என்ற 'கேள்வி பிறந்தது அன்று... நல்ல பதில் கிடைத்தது இன்று...'

● **எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி**

திடீரென்று பெண்கள் அனைவரும் ஊமையாகிவிட்டால் என்னாகும்?

பாவம் எழுதப் படிக்கத் தெரியாத பெண்கள்தான் ரொம்ப சிரமப்படுவார்கள். கேட்ட ரகசியத்தை மனசுக்குள் வைத்துப் பூட்ட முடியாமலும், எழுதிக் காட்ட முடியாமலும் அல்லாடுவார்கள்!

● **பி.சிவா, பாளையங்கோட்டை**

ஆண்கள் காதலிக்கும்போது கொடுக்கும் வாக்குறுதிகளை, கல்யாணத்துக்குப்

பின் மறந்து விடுகிறார்களே...?

காதல் தேர்தல்... கல்யாணம் ஆட்சி... காதலின்போது வாக்குறுதி கொடுப்பது ஆண்கள்; கல்யாணத்துக்குப் பிறகு ஆள்வது பெண்கள்!

● ராஜகோபாலன், சென்னை

தாலிக்குத் தரப்படும் மரியாதையை பெண்கள், தங்கள் கணவன்மார்களுக்குத் தருகிறார்களா...?

தாலியைக் கழுத்தில் முடிந்துகொண்டு, தங்கள் கணவன்மார்களைக் கழுத்துக்குக் கீழே முந்தானையில் முடிந்து கொள்வதால், மரியாதை ஒரு படி கீழேதான் இருக்க வாய்ப்பு!

● சொர்ணா, சென்னை

தங்களை மிகவும் பாதித்த கவிதை வரிகள்?

'பசித்து அழும் பிள்ளைக்காக பாற்கடல் நெஞ்சில் ஏந்திய தாயே...' லஜ்ஜாவதியே புகழ் மலையாளக் கவிஞர் கைதப்ரம் தாமோதரன் நம்பூத்ரியின் மூலத்தின் சாரத்தை மொழி பெயர்த்து எஸ்லெம்பிஸ்த்தார் இரா.முருகன். இதன் பாதிப்பால் விளைந்த வெண்பா...

'பாற்கடல் ஏந்தினாள் பிள்ளை பசிக்காக
நேர்த்திக் கடனிருந்தாள் நோயுற்றால் - தீர்த்தம்
தரக்கூட ஆளில்லை தாய்க்கிங்கு, மகனோ
இருக்கான் அமரிக்கையாய்...'

வாக்குறுதி



க ல்லில் வடித்தெடுத்த சிற்பங்களைப் பார்த்தே மலைத்து நிற்கிறார்கள் பிறநாட்டவர்கள். கல்லிலும் மண்ணிலும் பொதிந்திருக்கும் கனிமங்களைக் கண்டறிந்து, அவற்றிலிருந்து உலோகத்தைப் பிரித்தெடுக்கும் அறிவியல் நுட்பங்களை, நம் பழந்தமிழ் கலைஞர்கள் அறிந்திருக்கிறார்கள். உலோகங்களை உருக்கி, ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து பித்தளை, வெண்கலம், பஞ்சலோகம் ஆகிய உலோகக் கலவையை உருவாக்கும் நுட்பத்தை அறிந்துகொண்டது, அவர்களின் அறிவியல் பரிமாணம் என்றால், அத்தகைய உலோகங்களைக்கொண்டு காலத்தை வென்று நிற்கும் படிமங்களை வார்த்தெடுத்தது, அவர்களின் கலைப்பரிமாணம். அதே படிமங்களில் தெய்வ சாந்நித்யம் விளங்குமாறு ஆக்கியது அவர்களின் ஆன்மிகப் பரிமாணம்.

உருக்கி வார்த்த உலோக வடிவங்களில், தெய்வீகம் காண்பது எப்படிச் சாத்தியமாயிற்று? ஒவ்வொரு தெய்வத்துக்கும் உரிய தியான சுலோகத்தை அடிப்படையாக வைத்து, அந்தந்த உருவங்கள் வடிவமைக்கப்படுகின்றன. இந்தச் சுலோகங்கள், மந்திரங்கள் அவற்றுக்கு உயிரோட்டம் அளிக்கின்றன. புராண, இதிகாச, வேத, ஆகமங்களின் அடிப்படையில், விதவிதமான கோலங்களில் வடிவங்கள் அமைகின்றன.

எனினும், கற்பனைவளத்துக்கும் போதிய இடம் தந்திருக்கிறார்கள். அந்த வகையில் வார்த்தெடுக்கப்பட்ட வடிவங்களிலும் விநாயகப்பெருமானுக்கே முதலிடம்!

வேண்டியவர்களுக்கு வேண்டியவாறெல்லாம் வளைந்து கொடுத்து, வரம் தரும் ஒரே தெய்வம் விநாயகப் பெருமான். அவருக்குத் தான் எத்தனை எத்தனை ரசிகர் கூட்டம்! பக்தர்களின் எண்ணத்துக்குத் தக்கபடி இருப்பார் அவர். உட்கார்ந்தபடி, நின்றபடி, சாய்ந்தபடி, இன்னும் எத்தனையோ 'படி'கள்... எப்படியெப்படியெல்லாமோ நாம் நம் பிள்ளையாரை ஆட்டி வைக்கிறோம். அவரும் வளைந்து கொடுக்கிறார். ஆகமங்கள், மந்திர சாஸ்திரங்கள் ஆகியவை வகுத்த எல்லைக் கோடுகளை எல்லாம் தாண்டி, கால, தேச, வர்த்தமானங்களையெல்லாம் தம் பருத்த தொந்தியுள் அடக்கியவாறு, எப்போதும் சிரித்த, மலர்ந்த முகத்துடன் விளங்கும் தெய்வம் கணபதி. 'பிரசன்ன வதனன்' ஆக மலர்ச்சியை வெளிக்காட்டும் மர்மம்தான் என்ன!

அழகின் வடிவே...

அருளின் வடிவே...

- த.கி. நீலகண்டன்



'ஏக தந்தம்; சூர்ப்ப கர்ணம்; கஜ வக்த்ரம்; சதுர்புஜம்
பாசாங்குசதரம்; தேவம், த்யாயேத் சித்தி விநாயகம்'

என்று விநாயகரின் தியான சுலோகம் அவரை வர்ணிக்கிறது. 'ஒற்றைத் தந்தம், முறம் போன்ற காது, யானை முகம், நான்கு கரங்கள், அவற்றில் இரண்டில் பாசம் அங்குசம் தரித்த தேவனை சித்தி விநாயகனைத் தியானிக்கிறேன்' என்று அவரது தோற்றத்தை மனத்தில் கொண்டு வந்து நிறுத்துகிறது இந்த தியான சுலோகம். 'பிரஸன்ன வதனம் த்யாயேத்' என்று மலர்ந்த முகத்தை, மனக்கண் முன் கொண்டு வருகிறது இன்னொரு தியான சுலோகம்.

பார்த்த மாத்திரத்தில் மனத்தில் நிறைந்து நிற்கும் விக்கிரகம் ஒன்று, சிதம்பரத்தில் இருக்கிறது. உலா வரும் பஞ்ச மூர்த்திகளில் ஒருவர்



1

அவர். வீதியுலாவின்போது கவசம், ஆடை, ஆபரணம் அணிந்து தம் அழகை யெல்லாம் ரகசியமாக ஒளித்து வைத் திருப்பார். அவர் ஆசுவாசமாக இருக்கும் போது பார்க்கவேண்டும். அப்படி ஒரு கொள்ளை அழகு வடிவம்! சுமார் இரண்டு முழ உயரத்தில் 'கொழு கொழு' வென்று சதைப்பிடிப்பும், உருண்டு திரண்ட தோள்களும், பருத்த ஆனால் சரியாத இளந்தொந்தியும், பக்தர்களின்



கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கவென்றே அமைந்த விறைத்த பெருங்காதுகளும், குறுகுறுப்பான விழிகளும், நேர்த்தியான விரல்களும் என்று சர்வ லட்சணமும் பொருந்திய பெருமான் அவர். குண்டுக் குழந்தை ஒன்று, தன் பெரிய உடலைச் சுமந்துகொண்டு, தொடையை ஊன்றிக் கொண்டு எழுந்திருக்க யத்தனிக்கும் காட் சியைக் கற்பனை செய்து பார்க்க முடி கிறதா? கிட்டத்தட்ட அந்தக் கோலத்தில்தான் இந்தப் பிள்ளையார் இருக்கிறார். சற்றே சாய்ந்து அமர்ந்த கோலம்! கண்களில் ஒரு மலர்ச்சி! துதிக்கையின் குழைவில் ஒரு கனிவு! காதுகளில் தெரியும் ஆர்வம்! ஒவ்வொரு அங் கமும் ஏதோவொரு உணர்ச்சியை வெளிப் படுத்துவதாகவே தோற்றம் அளிக்கிறது.

அமர்ந்த கோலத்தில் இப்படி ஓர் அழகு என்றால், ஆடும் கோலத்தில் இன்னோர் அழகு! நர்த்தன விநாயகர் வடிவத்தில் குதூ கலமும், கொண்டாட்டமும், குறும்பும் கோலாகலமும் ஒன்று திரண்டு மிளிர்கிறது. குண்டுத் தொப்பையை அநாயாசமாகத் தூக் கிக்கொண்டு, ஒரு காலை ஊன்றி இன்னொரு காலை மடித்துத் தூக்கி, கரங்களையும் துதிக் கையையும் வீசி ஆடும் ஒய்யாரம்தான் என்ன!

இந்த வடிவத்தின் முன்னழகைவிட பின்னழகு இன்னும் அபாரம்! தொப்பை உள்ளவனுக்கு இடுப்பு உண்டா என்று சந்தேகப்படுபவர்கள் நர்த்தன விநாயகரின் பின்னழகை கண்டு தெளிவு பெறலாம்.

நர்த்தன விநாயகர் வடிவத்தில் முன்னழகைவிட பின்னழகு இன்னும் அபாரம்.

'பம்ம பம்மதா தைய்ய தைய்யனுக்கு
தின்னாக்குன்னாக்குன்னாக்கு
பஜங்கரே!
உதனத நாதிரு தின்ன தித்தாம் தித்தாம்
தோம்
தை தை கணபதி நாம் ததா!' என்ற கம்பீரமான பெங்களூர் ரமணி அம்மாள் குரல் பின்னணியில் ஒலிக்க, இந்த நர்த்தன விநா யகரை தரிசியுங்கள். நீங்களும் சேர்ந்தே ஆடுவீர்கள்!

(பெருகும்)

'அழகின் வடிவே; அருளின் வடிவே!' என்ற தலைப்பு பெரியசாமி தூரன் எழுதிய 'பழம் நீ பழுதி பதிவாழ் தெய்வ' என்ற இசைப்பாடலின் அனுபல்லவியில் இடம்பெற்றுள்ளது.

நீங்கள் கேட்டவை-தராசு

● இரா.கல்யாணசுந்தரம், மதுரை

? கிரிக்கெட் ஸ்டேடியத்தில் ஆடிய பெண்கள் ஆபாசமென்றால், பீச் வாலி பாலில் ஆடிய பெண்கள் மட்டும் ஆபாசமில்லையாக்கும்?

! யார் இல்லையென்றது? கிரிக்கெட்டில் ஆட்டத்தின் இடையிலே ஆபாசம். பீச் வாலிபாலில் ஆட்டமே ஆபாசம். இருப்பினும், நம் நாட்டு வீராங்கனைகள் கண்ணியம் காத்தது ஆறுதல்.

● ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்

? சத்துணவுத் திட்டத்தில் சைவம் சாப்பிடுபவர்கள் வசதிக்காக, வாழைப் பழம் வழங்கும் திட்டம் எப்படி...?

! முட்டை வழங்குவதில் அவ்வப்போது தலைகாட்டும் ஊழலும் கவனக்குறைவும், இதிலும் புகுந்துவிடாமல் இருந்தால் வரவேற்கத்தக்க நல்ல திட்டம்.



✱ வெண்கலமும்...

ரஹ்மான் இசையில் டி.எம்.எஸ்?



✱ ...வெள்ளியும்!

● கி.துரைசாமி, மங்கலப்பட்டி

? அரசின் திட்டங்கள், நாட்டையும் மக்களையும் முன்னேற்ற உதவாமல் வோட்டுகளைக் குறிவைத்தே தீட்டப்படுவது, எதிலே போய் முடியும்?

! அம்பு எனில் 'குறி' தவறிப் போகும். பூமராங் எனில் மீண்டும் நம்மை நோக்கியே வரும்!

● எஸ்.பக்கிரிசாமி, திருவாரூர்

? தமிழக மீனவர்களைச் சுட்டுக் கொன்ற இலங்கைக்கு, இந்திய கிரிக்கெட் அணி செல்லக்கூடாது என சரத்குமார் கோருவது சரியா?

! கிரிக்கெட் ஆட்டம் சிக்கலில்லாத விஷயம். அதை 'தமிழக மீனவர் பிரச்னை'

என்ற மிகச் சிக்கலான விஷயத்துடன் தொடர்புபடுத்தத் தேவையில்லை. புலிகள் மீனவர்களைச் சுட்டு வீழ்த்திவிட்டு, இலங்கை ராணுவத்தின் மீது பழி சுமத்துவதாக இலங்கை அரசின் அறிக்கை சொல்கிறது. இந்தியா - இலங்கை இடையே விரோதம் வளர, புலிகள் இத்தகைய யுக்திகளைக் கையாளக் கூடியவர்களே. உணர்ச்சிகளுக்கு அடிமைப்படாமல் அறிவுபூர்வமாக அணுகுவதே நல்லது; அவசியம்.


* கட்சியினருக்கே எச்சரிக்கை!

● பா.சு.மணிவண்ணன், திருப்பூர்

? பா.ம.க. ராமதாஸின் நிலை யாருக்குச் சந்தோஷம் தரும்?

! தோஷம் - தி.மு.க.வுக்கு; சந்தோஷம் - அ.தி.மு.க.வுக்கு.

❐ ரூ.100/- பரிசு பெறுபவர்: **எஸ்.பக்கிரிசாமி, திருவாரூர்**
★ ரூ. 50/- பரிசு பெறுபவர்: **வி.வேங்கடராமன், செகந்தராபாத்**

● வீர செல்வம், பூம்புகார்

? 'பறக்கத் தெரியும் என்பதற்காக சூரியன் மீது பாய நினைக்கக்கூடாது' என்ற கலைஞரின் வசனம், யாரையோ தாக்குவது போலவல்லவா உள்ளது?

! ஆமாம், ஆமாம்! அவரது கட்சியிலேயே இருக்கிற சிலரையும் தாக்கி, எச்சரிப்பது போல்தான் இருக்கிறது.

● இரா.சக்கரபாணி, மதுரை

? பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவது போல அரவாணிகளுக்கும் வழங்க வேண்டும் என கனிமொழி வலியுறுத்தியுள்ளாரே?

! எல்லாவிதப் பிரச்னைகளுக்கும் இட ஒதுக்கீடே தீர்வு என்று நமது அரசியல்வாதிகள் முடிவுக்கு வந்துவிட்டார்கள் போல! இது அவர்களுக்குச் சுலபமாயிருக்கலாம்; ஆனால், இதனால் பிரச்னைகள் தீர்வது சுலபமல்ல.

● ஆர்.கோபாலன், சென்னை - 33

? விஜய் டி.வி. ஒளிபரப்பும் 'இப்படிக்கு ரோஸ்' பார்க்கிறீர்களா?

! பெரும்பாலும் இளிப்பு, டான்ஸ் போன்ற கச்சடா நிகழ்ச்சிகளுக்கு மத்தியில், உண்மையிலேயே உருப்படியாய் இருக்கிற ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளுள், 'இப்படிக்கு ரோஸ்' முக்கியமானது. எல்லோரும் அவசியம் பார்க்க வேண்டிய நிகழ்ச்சியும்கூட.

● தென்றல் கோ.சண்முகசுந்தரம், நத்தக்கடையூர்

? சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜியின் நிலைப்பாடு சரியானதா?

! சபாநாயகர் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவர் என்பதால், நூறு சதம் சரியானது.


* தமிழுக்கும் தமிழருக்கும்!

● ரேவதிப்ரியன், ஈரோடு

? ஏ.ஆர்.ரஹ்மானின் இசையில் பாடப் போகிறாராமே டி.எம்.எஸ்.?

! வெண்கல மணிக்கு வெள்ளியில் நாக்கு!

● வி.வேங்கடராமன், செகந்தராபாத்★

? தொலைக்காட்சி தொடர்களில் மது அருந்தும்

காட்சிகள் நிறைய வருகின்றன. கூடவே 'மது அருந்துவது உடல் நலத்துக்குக் கேடு' என்ற வாசகமும் காட்டப்படுகிறது. இது முரண்பாடாக இல்லையா?

! அந்தக் காட்சியைத் தவிர்க்க முயல்வது நல்லது. கதைப் போக்குக்குத் தவிர்க்க முடியாததாக இருப்பின், இந்த எச்சரிக்கை வாசகம் காட்டப்படுவது நல்லது!



* போராட்டச் சங்கடம்!

● கருப்பம்புலம் சித்திரவேலு,
நெய்விளக்கு

? மிச்சமிருக்கும் வாழ்க்கையிலும் தமிழுக்கும் தமிழருக்கும் உழைக்கப் போவதாக வைரமுத்து சொல்கிறாரே? உங்கள் கருத்து...?

! தமிழ்நாட்டில் உழைக்கின்ற எல்லோருமே தமிழரின் உயர்வுக்காகத்தான் உழைக்கிறார்கள். ஆனால், ஒப்பு நோக்க, தமிழுக்காக உழைக்கக் கூடியவர்கள் மிகக் குறைவே. இதை உணர்ந்தால், வைரமுத்து, சிகரத்தை நோக்குவதுடன் நில்லாமல், அதில் தடம் பதிப்பார்.




* உண்மையிலேயே உருப்படி!

● ச.ஆ.கேசவன்,
கோவில்பட்டி

? அரசியலில் ஊடுருவியிருக்கும் அசுத்தம் அகல்வதற்கான வழியைச் சொல்லுங்களேன்?

! நாடாளுமன்றம், சட்ட மன்றங்கள் அருகே எம்.பி, எம்.எல்.ஏக்களுக்கு ஷவர், சோப்பு, துண்டு, புது வேஷ்டி, சட்டை இத்யாதியுடன் குளியலறைகள் கட்டித் தரலாம். மன அழுக்கை எப்படிப் போக்குவது?



* உணர்ச்சிகர உறுமல்!

● டி.எஸ்.டி.ராயன்,
மயிலாடுதுறை

? நகரம், நகரம் சார்ந்த இடங்களில் மின்வெட்டு என்பதைக் காண்பிக்காமல், கிராமங்களில் குறைந்தது இரண்டு மணி நேரம் முதல் ஆறு மணி நேரம் வரை மின்வெட்டை அமல்படுத்தி, மீடியாவின் பிடியில் சிக்காமல் தப்பி விட்டாரே ஆற்காட்டார்?

! அப்படியொன்றும் அவர் தப்பிவிட்ட மாதிரி தெரியவில்லை! நகரங்களிலும் சென்னையிலும்கூட மின்வெட்டு அமல்படுத்தப்பட்டுள்ளதே! தொழில்துறை மிகுந்த பாதிப்புக்குள்ளாகிறதே!

● எஸ்.ராமசாமி,
ஈரோடு

? பூரண மதுவிலக்கு கோரி பா.ம.க.வினர் நடத்திய போராட்டத்தில், அக்கட்சியின் மகளிர் அணியினர் மது அருந்திவிட்டு காலி பாட்டில்களைப் போட்டு உடைத்துள்ளார்களே?

! மது அருந்துவதன் பின்விளைவுகள் என்ன என்பதை, மக்களுக்கு உணர்த்துவதற்காக இப்படிச் செய்தார்களோ என்னவோ! டாக்டருக்கும் கடவுளுக்கும்தான் வெளிச்சம்!



நறுமணம் கமழ நாம் இருக்கிறோமா? சென்ட், பர்ஃப்யூம் போடத் தெரிவதும் ஒரு கலை! புஸ்புஸ்ஸென்று என்னவோ பூச்சி மருந்தை சாக்கடையில் தெளிப்பது போல் உடலில் தெளித்துக்கொள்ளக் கூடாது. சிறிது அக்கறை காட்ட வேண்டும். நம்முடைய பர்ஸனாலிட்டியை எதிராளி நாம் போடும் சென்டை வைத்து எடை போட முடியுமாம்!

- பர்ஃப்யூம் வாங்குவதற்கு நிறைய பணம் மாத்திரமல்ல, நேரமும் செலவு செய்ய வேண்டும்.
- எப்போதுமே பர்ஃப்யூம் ஸ்ட்ராங்காக இருக்கக்கூடாது.
- அவரவர் உடல்நிலை சருமவாகுக்கேற்ப சென்ட் மணமும் மாறும்.
- வாங்குவதற்கு முன் கண்டிப்பாக டெஸ்ட் செய்தே வாங்கவும்.
- ஒவ்வொரு முறை கடையில் ட்ரை பண்ணும்போதும், மூன்றுவித சென்டை முகரவும்.
- காலை மாலை என நேரத்துக்குத் தகுந்தாற்போல் பர்ஃப்யூம் உண்டு.
- என்ன ஹைகிரேட் பர்ஃப்யூமாக இருந்தாலும், மூன்று நான்கு மணி நேரத்துக்கு மட்டுமே வாசம் நீடிக்கும்.

கமகம

- பர்ஃப்யூம் பாட்டிலை சன் லைட்டுக்கு எதிரே வைக்கக் கூடாது. ஷெல்ஃபினுள்ளே டைட்டாக மூடி வைக்கவும்.
- சென்ட் எப்போதுமே மணிக்கட்டில் முழங்கையில் மேல்புறம், முழங்காலின்

உடையழகு.. நடையழகு...

உட்புறங்கள் என பல்ஸ் பாயின்டில் போட வேண்டும்.

● குளித்துவிட்டு வந்தவுடன் ஈரமான உடலில் போட்டால், பர்ஃப்யூம் சருமத்துடன் ஒன்றிவிடும்.

● சோப், ஷவர் ஜெல், பாடி லோஷன், பாடி ஸ்ப்ரே மற்றும் பர்ஃப்யூம் ஒரே வாசனையில் இருந்தால், எஃபெக்ட் அதிகம்!

● பெண்கள் நகையணிந்து கொண்டிருந்தால் கவனம் தேவை. முத்து மற்றும் காஸ்ட்யூம் ஜுவெல்லரிகளின் நிறம் சென்ட் பட்டால் மாறிவிடும்.

● லைட் கலர் ட்ரஸ்ஸில் பர்ஃப்யூம் ஸ்ப்ரே செய்தால் கறைபடிந்து மஞ்சளாகிவிடும்.

● பர்ஃப்யூம் என்பது எண்ணெய், நீர் மற்றும் ஆல்கஹால் கலவை! முன்னேயெல்லாம் சென்ட் என்றால் சந்தனம், மஸ்க் (கஸ்தூரி)தான். இப்போது பூக்கள் வாசமான ஃப்ளோரல், வுடி-வனத்தின் புத்துணர்ச்சி, க்ரீன் - காஷுவல் ஸ்பைஸி ஃப்ரூட், ஓரியண்டல் என வெரைட்டிகள் ஏராளம்.

● வாலண்டைன் டே அன்று காதலர்கள் மிக அதிகமாக ஒருவருக்கொருவர் பரிசளித்துக் கொள்வது பர்ஃப்யூம்ஸ்தான்.

● சர்வதேச பிராண்டில் குச்சி, டோல்ஸ் அண்ட் கபானா, எலிஸபெத் ஆர்டென், டெலிடாஸ், ஹ்யூகோ பாஸ், எஸ்காடா ப்ரிட்னி ஸ்பியர்ஸ் என ஏகமாக உள்ளன!

● காதலி / மனைவிக்குப் பரிசு கொடுக்க விரும்பினால், குச்சி ரஷ் அல்லது டோல்ஸ் அண்ட் கபானா லைட் ப்ளூ கொடுங்க... மணம் வாழ்க்கையில் வீசிக் கொண்டேயிருக்கும்.

● காதலன் / கணவருக்கு சென்ட் பரிசளிக்க விரும்பினால், டோல்ஸ் ஆஃப்டர்ஷேவ் அல்லது பர்பெரி வீக்எண்ட் வாங்கவும்.

● அம்மாவுக்கு ப்ரசன்ட் செய்து குட்கேர்ள் / குட்பாய் பெயர் வாங்க வேண்டுமா? க்ளாசிக், ஃப்ளோரல் வெரைட்டியில் வாங்கவும்.

● மகன் அல்லது பேரனுக்கு நல்ல பர்ஃப்யூம் வாங்கப் போகும் பெண்ணா? டீஸல் ப்ளஸ் ப்ளஸ் வாங்கவும். கொடுத்துப் பாருங்க நீங்க போடற கோட்டைத் தாண்டவே மாட்டார்கள்!

- லதா சேகர்

பர்ஸனாலிட்டி



வட்டமேஜை

'**செ**ம்மங்குடி' நூற்றாண்டு நினைவுகள் - இன்றைய இளைய தலைமுறையினருக்கு வரப்பிரசாதம்.

- ரேவதிப்ரியன், ஈரோடு - 2

கண்ணன் பெருமைகளைக் கேட்டு பூரிப்பதுடன், ஸ்ரீ ஸ்வாமிகளின் அருமையான விமர்சனங்களால் சந்தோஷமடைகிறோம். ஸ்ரீவேளுக்குடியாருக்கு எங்கள் நன்றி.

- சுபலெட்சுமி, சென்னை - 40

'**டா**க்கோ' கல்வி நிறுவனம் போல ஊருக்கு ஒன்று இருந்தால், நிச்சயம் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்.

- ரேவதி, ஈரோடு

மக்களிசையை நாளும் வளர்க்கும் காதல் ஜோடிகளின் தொடர்... 16 வாரங்கள் போனதே தெரியவில்லை! பாராட்டுகள்.

- உமாதேவி பலராமன், வேட்டவலம்

செம்மங்குடியைப் பற்றிய தகவல்கள், சுகமான ராகம் கேட்டது போன்ற உணர்வை அளித்தது.

- அ. முரளிதரன், மதுரை - 3

கடந்த ஒலிம்பிக் பந்தயங்களில் நடைபெற்ற சில சம்பவங்களைப் பற்றி ச.ந.கண்ணன் எழுதிய கட்டுரை, மிகவும் சுவாரசியம்!

- எம். இராஜேந்திரன், லால்குடி

'**ம**ரணமாம்பழம்' இவ்வளவு திகிலான விஷயத்தைத் தரும்னு சற்றும் எதிர்பார்க்கலே!

- சுகந்தி நாராயண், வியாசர்பாடி

'**ப**ற்றாக்குறை பயங்கரம்' - அதிர்ச்சி அளிக்கும் கட்டுரை. ஊழலுக்கும், அதிகார துஷ்பிரயோகத்துக்கும் தேவை உடனடி தடுப்பூசி என்பது தெளிவானது.

- ஆர்.பிரகாஷ், பொன்மலை

உரத்தட்டுப்பாடு பற்றி எதிர்க் கட்சிகள் சொன்னவுடன், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தது அரசின் சுதாரிப்புக்கு எடுத்துக்காட்டு.

- என்.சுப்பிரமணியன், சென்னை

ஹ ஒண்டாய் மயக்கம் படிப்பதற்கு பஹ ஒத் அச்சா.

- ஆர்.ரங்கநாதன், சென்னை

'**ந**ம்பிக்கை துரோகத்துக்கு நம்பிக்கை வாக்கெடுப்பு' படித்து நொந்து போனேன். இதற்காகவா நாங்கள் இவர்களைத் தேர்ந்தெடுத்து பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தோம்?

- வே.முருகேசன், சென்னை



ராக வரப்பிரசாதம்!

Dr.Kamakshi Memorial Hospital



Dr. T.G. Govindarajan
Persident -Founder -
Medical Director

தமிழ்நாட்டிலேயே முதல்முறையாக உடலிலுள்ள புற்றுநோய்
மற்றும் இதர நோய்களை எளிதில் கண்டறிய உதவும்

PET CT Scan

மருத்துவ சேவை நிறுவனத்தில் ஒரு மைல்கல்
தமிழகத்தில் இதுவே முதல் முறை

Dr. காமாட்சி மருத்துவமனை
கேன்சர் இன்ஸ்டிடுட் (wia)
இணைந்து பெருமையுடன்
அறிமுகம் செய்துள்ளது



தமிழ் நாட்டில் முதல்

PET CT Scan



10% Special
Discount On Sunday
for Master & Executive
Health Check-up

இந்தியாவில் 4, 5 இடங்களில் மட்டுமே உள்ள இந்த ஸ்கேனிங் கருவியின் சிறப்பம்சங்கள்:

* பெட் சி.டி.ஸ்கேன் என்பது உடல் அணுக்களின் செயல்திறன் பற்றியும் அணு பெருக்கத்தைப் பற்றியும் முழு தகவல்களைத் தரவல்லது.
* முக்கியமாக பெட் சி.டி.ஸ்கேன், மனிதனின் உச்சந்தலையிலிருந்து, உள்ளங்கால் வரை முழுவதும் பரிசோதிப்பதால், உடலில் எங்கெல்லாம் புற்றுநோய் இருக்கிறது? அது வேறு எங்கெல்லாம் பரவியிருக்கிறது? நோயின் தீவிரம் எந்த அளவு உள்ளது? என்பதை எல்லாம் துல்லியமாகக் கண்டறியப் பயன்படுகிறது.
* அதேபோல், ரேடியோதெரபி, கீமோதெரபி போன்ற சிகிச்சைகளுக்குப் முன் 'பீரியாடிகல் ரிவியூ' மூலம் நோயின் தாக்கம் எவ்வளவு குறைந்துள்ளது என்பதையும் கண்டறியலாம்.
* மூளையில் ஏற்படும் 'அல்ஸைமெர்ஸ்', 'பார்க்கின்சன்ஸ்', புற்றுநோய் போன்ற நோய்களை கண்டறியவும், அவற்றுக்கு எளிய முறையில் கண்டறியவும், 'பெட் சி.டி. ஸ்கேன்' பயன்படுகிறது.
* புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களுக்கு எந்த மாதிரியான சிகிச்சை முறையை பின்பற்ற வேண்டும் என்று தெளிவாக உணர்த்துகிறது. இதயத்தில் உள்ள பிரச்னைகள் மற்றும் தசைகளின் செயல்பாடுகளை அறிய உதவுகிறது.

இலவச ஆலோசனைக்கு: எஸ்.சுபாஷிணி - 93451 20265, 93810 30712

#1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Tel : +91-44-22469200 (30 Lines), 66300300 (30 Lines), Fax : 22463282
E-mail : info@drkamakshimemorialhospital.org
Website : www.drkamakshimemorialhospital.org

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.

